இலங்கையில்
ரூபா 30/=

# தமிழ் உலகம் London

அனைத்துலக தமிழ் சஞ்சிகை
இல. 14 December 2004
International Tamil Magazine
' உலகத்தமிழர் பொருளாதார உயர்வை ஊக்கிடுவோம் '




## திறந்த பொருளாதாரத்தில் முன்னணியில் திகழும் சிங்கப்பூர்!




## போராடும் மக்களின் நீங்காத வடிவம்..!



# போரும் இல்லை! தீர்வும் இல்லை!! சமாதானமும் இல்லை........!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# futture homes
Mortgage Specialist



- Residential Mortgages
- Remortgages
- Commercial Mortgages
- Secured Loans
- Life Insurance
- Building Insurance
- Public Liability Insurance
- Personal Loans

**We also do finance to purchase properties in Sri Lanka, Portugal, Spain, France etc.**

குறைந்த வட்டியுடன் 95 வீதத்திற்கும் மேற்பட்ட வீட்டுக் கடன்களை (Mortgage) மிக இலகுவான வழிமுறைகளில் செய்துதரப்படும்,

**போதிய வருமானம் குறைவு!**
**நிரந்தர முகவரி இன்மை!!**
**நீதிமன்றப் பதிவுகள்!!!**
**வங்கிகள் கடன் வழங்க மறுப்பு!!!!**
**அனைத்தையும் இலகுவாக்க காத்திருக்கிறோம்.**



வெளிநாடுகளில் இருந்து வந்து பிரித்தானியாவில் வீடுவாங்க விருப்புகிறீர்களா, அனைத்து விடையங்களையும் எங்களிடம் விட்டுவிடுங்கள் : வீடு உங்களது ஆகிவீடும்.

**மேலதிக விபரங்களுக்கு:- முரளி**

Futture Home
17A Walm Lane, Willesden Green, London NW2 5SJ
T: 0208 830 3457 F : 0208 830 4111 info@futturehome.com

* YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT. * Futture Home Limited is authorised and regulated by the Financial Services Authority. reg 302431

# Global Travel Express

**Flight + stay in 4* Hotel in Colombo**

**7 Nights £ 737**

**14 Nights £ 857**

Valid from 03 Dec till 24 Dec 2004 on Qatar Airways

**7 Nights £ 627**

**14 Nights £ 748**

Valid from 25 Dec till 31 Dec 2004 on Qatar Airways

**Flight + 7 Nights stay in 4* Hotel in Colombo +2 Free Nights in Dubai**

**For £ 811**

Valid from 25 Dec till 31 Dec 2004 on Sri Lankan Airlines

**For £ 732**

Valid from 1st Jan till 29 Jan 2005 on Sri Lankan Airlines

**Prices include flights (subject to availability) + Accommodation on twin sharing room with Break fast & Return Airport Transfers**

6480 ATOL PROTECTED

IATA

**CALL 020 8455 9001**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்உலகம்
London

தமிழ்உலகம்
இலண்டன்
அனைத்துலக தமிழ் சஞ்சிகை

Published by
TAMILULAGAM
Global Lanka Publications Ltd.
The United Kingdom

நிர்வாக / பொறுப்பாசிரியர்
சுப்பிரமணியம் கிருஷ்ணதாசன்

பிரதம ஆசிரியர்
வேலுப்பிள்ளை தர்மலிங்கம்

இணை ஆசிரியர் & வடிவமைப்பு
ஷர்மிலா ரெட்ணசிங்கம்

உதவி ஆசிரியர்
பிரதீபா சபாநடேசன்

விளம்பரம் - சந்தைப்படுத்தல்
கிருஷ்ணன் சந்திரமோகன்

Head Office:- TAMILULAGAM
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom

Tel: 0044 20 8455 9001
Fax: 0044 20 8731 7870
E.Mail: tu@globallanka.co.uk

Sri Lanka Office:- TAMILULAGAM
Meewella Building, 7th Floor
329, Galle Road,
Colombo - 04, Sri Lanka

Tel: 0094 112 59 1044
Fax: 0094 112 59 1047
E.Mail: tugloballanka@sltnet.lk

Printed by
Vakmee Printers

தமிழ்உலகம் வெளியாகும் நாடுகளுக்கான
வருட சந்தா முற்பதிவு கட்டணங்கள்
(12 இதழ்களுக்கு அஞ்சல் கட்டணம் உட்பட)
(Annual subscription including postage)

FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500/= |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New Zealand | : 30 NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |

**December 2004**



தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும் இடங்கண்ட பின் அல்லது

- திருக்குறள் 491

(பகைவரை) வளைத்துக்கொள்ளும் இடத்தை கண்ட பின் அல்லாமல் எவ்வினையும் (ஒருவன்) தொடங்காதிருக்கக்கடவன்(அவர்களை) இகழாதிருக்கக்கடவன்.

(Don't begin any operation except after making a thorough reconnaissance of the theater of operation)

## சக பக்கங்களில்

*அரசியலும் தற்கால நிகழ்வுகளும்*

தாயகம் - போரும் இல்லை! தீர்வும் இல்லை!! ........ 2
தந்தை செல்வா முன் ........ 4
புலம் பெயர் மண் - கலவரம் எங்கும் வரலாம் ........ 5
உலகநோக்கு -தாக்குமுன் தாக்கும் ........ 6

*பொருளாதாரமும் அதன் வலிமையும்*

தமிழீழ தேசிய தலைவரின் மாவீரர் தின உரை ........ 8
உலகம் - திறந்த பொருளாதாரத்தில் ........ 10

*கலையும் கலாசாரமும்*

இரண்டாம் மொழியாக தமிழை ........ 12
கொழும்புக்கம்பன் கழக இசைவேள்வி ........ 13

*சமூகமும் சூழலும்*

நேர்முகம் - சிங்கைச்சிங்கன் ........ 14
மருத்துவம் - டாக்டர் சுவர்ணா ........ 15
மகளிர் பகுதி ........ 16

*காலமும் மாற்றமும்*

இராசி பலன் - சோதிட ஆய்வாளர் த.அழகேசன் ........ 18
விசேட தினங்கள் - கிறிஸ்துவின் பிறப்பு, நாவலரின் சமயத்தொண்டு ........ 19
Woman & Children ........ 20

*கருத்தும் கணிப்பும்*

வாசகர் எண்ணங்கள் ........ 22
சந்தா ........ 23

*காட்சியும் கானமும்*

திரைவலம் ........ 24

*எண்ணும் எழுத்தும்*

தொடர்கதை - திக்கம் சிவயோகமலர் ........ 26
மழலைகள் மன்றம் ........ 28
கவி வலம் ........ 30
குறுக்கெழுத்துப்போட்டி ........ 31
சிறுகதை - தாமரா - ஜேர்மனி ........ 32
விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் ........ 34
பாடசாலையும் தராதரங்களும் ........ 36

*பொழுதும் ஓய்வும்*

உலக விநோதங்கள் ........ 37
சித்திரத்தொடர்கதை ........ 38
விளையாட்டு ........ 39

*விளம்பரமும் வியாபாரமும்*

மணமக்கள் தேடல் ........ 40
வர்த்தக விளம்பரங்கள் ........ 41

### தமிழ் உலகம் -விலைகுறைப்பு

இலங்கை வாசகர்கள் சஞ்சிகையை வாசிப்பதில் காட்டும் பெரும் ஆர்வத்தை கருத்தில் கொண்டும், சஞ்சிகை பெருமளவினரின் கைகளுக்கு கிடைப்பதை உறுதிசெய்யும் வகையிலும், சஞ்சிகையின் தனிப்பிரதியொன்றின் விலை ரூபா: 30/= ஆக இம்மாதத்திலிருந்து குறைக்கப்பட்டுள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆ-ர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோர்வே வெளியுறவு பிரதி அமைச்சர் விடார் ஹெல்கிசன், ஜனாதிபதி சந்திரிகா

தரப்பு ஆக்கி விட்டு பேச்சுக்களை நடாத்தவும் அது கபடமாக யோசிக்கின்றது. இறுதி நிமிடத்திலும் இது பற்றியே அது சிந்திக்கின்றது. இந்த நோக்கிலேயே கருணா விவகாரமும் தோற்றுவிக்கப்பட்டது. பின்னர் தோல்வியடைந்தது.

பானைக்குள் யானையைப் புகுத்தி வைக்கும் முயற்சி போன்று சமஷ்டி ஆட்சியை ஒற்றயைாட்சியினுள் அடக்கிவிடமுடியாதா என்று கற்பனை செய்து பார்க்கும் எல்லை வரை அதன் போக்கு விரிந்து செல்கின்றது.

பலாலி விமான நிலையத்தின் ஓடு பாதையை இந்தியா 360 மில்லியன் ரூபா செலவில் புத்தாக்கம் செய்த பின், அதனை தனது ஏகபோக பாவனைக்கென்று வைத்துக்



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

# போரும் இல்லை! தீர்வும் இல்லை!! சமாதானமும் இல்லை....!!!


குதிரையை ஆற்றங்கரைவரை எப்பாடு பட்டேனும் அழைத்துச்செல்ல மட்டும்தான் மனிதர்களால் முடியும்.குதிரை விரும்பினால் மட்டுமே அது நீரைக்குடிக்கும். அது விரும்பாத வரைக்கும் நீரைக்குடிக்க வைப்பதற்கு பிறரால் எதனையும் செய்யமுடியாது. இதனையே இலங்கையின் இனப்பிரச்சினை விவகாரத்தில் அனுசரணை நாடுகளும் மற்றைய நாடுகளும் உணர்ந்து கொண்டுள்ளன.

கடந்த 50 ஆண்டுகளாக இலங்கைத்தமிழர்கள் பல போராட்டங்களினூடாக உணர்ந்தும் தெளிந்தும் கொண்டுள்ளவற்றை இனி மேல் தான் அனுசரணை நாடுகளும் புரிந்து கொள்ளப்போகின்றன என்றும் இச்சந்தர்ப்பத்தில் கூறுவதும் மிகையான கருத்தல்ல.

இனப்பிரச்சினைக்கான தீர்வை அன்பளிப்பு நாடுகளின் தீர்மானங்களோ, பிரகடனங்களோ ஏற்படுத்திவிட முடியாது என்றும் சம்பந்தப்பட்ட இரு தரப்பினராலும் மட்டுமே எடுக்க முடியும் என்றும் அனுசரணையாளர்கள் அடிக்கடி அறிவித்தும் வருகின்றனர். அதாவது, குதிரையாக விரும்பாதவிடத்து நீர் குடிபடாது! ஆயினும் கெடுகுடி சொற்கேளாதே!

குமாரதுங்க அரசாங்கம் சமாதானம் பற்றி சத்தமாகப்பேசியபடியே சதி வேலைகளை தீவிரமாக செய்துவருகின்றது. பேச்சுவாத்தைகள் தொடங்கப்படவில்லை. ஆனால் இலங்கை, இந்திய ஒப்பந்தம் ஒன்றை ஒப்பமிட்டுவிடுவதில் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின்றது. படைச் சமநிலையை குழப்பி, தானே மேலாதிக்க நிலைப்பாட்டை எடுத்துக்கொண்ட பின்னர் பேச்சுவார்த்தைகள் பற்றிய இறுதி முடிவை எடுக்கவே அது விரும்புகின்றது. அதாவது இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கையை பலவீனமடையச்செய்து விடவும், வேறும் பல நிபந்தனைகளை உள்ளடக்கி விடவும், புலிகளை பலவீனமான கொள்ளும் என்ற வகையில் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் இருந்ததாக செய்திகள் கசிந்தன. இப்படியான திசையில் தான் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்யப்படவிருக்கின்றது என்று காட்டிக்கொள்வதில் அரசுக்கு என்ன அனுகூலம் இருக்கலாம்? தான் யுத்தத்தில் இறங்க விரும்பாத அரசாங்கம் வேண்டுமென்றே சிருஷ்டிக்கப்பட்டு வரும் காலதாமதங்களால் விரக்தியடைந்துள்ள விடுதலைப்புலிகள் யுத்தத்தில் இறங்கிவிடுவார்களோ என்று அச்சம் கொள்கின்றது. அத்துடன், யுத்தத்திற்கான தயார்நிலை விடுதலைப்புலிகளிடம் இருப்பதாகவும் அதற்கு தகவல்கள் கிடைத்திருக்க முடியும். எனவே, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை செய்து விடுவதில் அது பேரார்வம் காட்டியது. இந்திய ஆதரவுடன் தனது இராணுவ நிலைப்பாட்டை உறுதி செய்து கொள்ள முயற்சிக்கின்றது. நோர்வேயின் வெளியுறவு அமைச்சர், துணை வெளியுறவு அமைச்சர், எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் கொழும்பு வருவதற்கு சிறிது முன்னர் ஜனாதிபதி குமாரதுங்க இந்திய விஜயத்தை ஆரம்பித்திருந்தார். ஒப்பமிடப்படவிருந்த பாதுகாப்பு உடன்படிக்கை 1987 ஆம் ஆண்டின் உடன்படிக்கையை மீண்டும் திணிப்பது போன்றதொரு நிலையையும் ஏற்படுத்தலாம் என்னும் அபிப்பிராயங்கள் கூட வெளிப்பட்டன. இந்நிலையில் நடைபெறக்கூடிய சமாதான பேச்சுவார்த்தைகளில் ஒப்பந்தம் புலிகளுக்கு நிச்சயம் பாதிப்பான ஒன்றாகவே இருந்திருக்குமாயினும் ஒப்பந்தமே கைச்சாத்திடப்படாததால் நிலைமை மோசமாகி விடாமலிருக்கின்றது. சம்பந்தப்பட்ட தரப்பினரால் மட்டுமே தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டும் என்று அனுசரணையாளர்கள் வலியுறுத்தியது அரச தரப்பினால் நிராகரிக்கப்பட்டிருப்பது இங்கு துலாம்பரமாக தெரிகின்றது. ஒரு புறம் பேச்சுக்களை தாமதப்படுத்தியபடி மறுபுறம் சமநிலை குழப்பும் செயற்பாடுகள் தீவிரப்படுத்தப்படுகின்றன. இலங்கைத்தமிழர் தொடர்பான இன்றைய இந்தியாவின் நிலைப்பாடு 1987 ஆம் ஆண்டின் நிலைப்பாடல்ல. அன்று நிர்ப்பந்தத்தின் பேரில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் விடுதலைப்புலிகளின் மீது திணிக்கப்பட்டிருந்தது. அதன் வெட்கக்கேடான விளைவுகளை இன்றும் வரலாறு காட்டி நிற்கின்றது. ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு அதனடிப்படையில் இந்தியா, இலங்கையரசுக்கு உதவ முற்பட்டால் இராணுவ சமநிலை பாதிக்கப்படுவதுடன், அதன் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள போர் நிறுத்தமும் உடைந்து விடும் என்று விடுதலைப்புலிகள் சார்பில் மத்திய அரசுக்கும், தமிழ்நாட்டு தலைவர்களுக்கும் எடுத்துக்கூறப்பட்ட நிலையில் ஒப்பந்தம் செய்வது தாதப்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த வகையில் இது ராஜதந்திர வெற்றியே. ஆனால் இந்த ஒப்பந்தம் இனிமேல் செய்யப்படாது என்பதற்கு எந்தவித உத்தரவாதமுமில்லை. நிலத்திற்கான போர் நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது நிலத்தைச் சம்பந்தப்படுத்தி எந்தவொரு வெளிநாடும் தலையிடக்கூடாது. இந்த நெறிமுறையிலிருந்து பிறழ்வதற்கான தூண்டுதல்கள் எங்கிருந்து செய்யப்படுகின்றன என்பது ஆய்வுக்குரியது. பலாலி விமான நிலையப்பகுதி தமிழர் தாயகத்திற்குட்பட்ட பகுதி. இப்பகுதி அடாத்தாக அபகரிக்கப்பட்டே விமானத் தளம் நிர்மாணிக்கப்பட்டது. (பலாலி விமானத்தளம் -தமிழீழ நெஞ்சில் ஓர் முள் என்ற கட்டுரையை தமிழ் உலகம் கடந்த ஏழு மாதங்களாக தொடர்ச்சியாக தந்திருந்தது) இந்நிலையில் முன்னைய இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்போது வெறும் கண்துடைப்பாகவேனும் இந்திய அரசு சுதுமலைக்கு உலங்கு வானூர்தியை அனுப்பி, தேசியத்தலைவரை அழைத்துப்பேச்சு நடத்தியது. முன்னுதாரணம் இப்படியிருக்கையில், எந்தவொரு ஒப்பந்தமும் தமிழர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

நிலத்தைச் சொந்தப்படுத்தும்போது தமிழர் தலைமை கலந்தாலோசிக்கப்படல் வேண்டும். இது வலியுறுத்தப்பட்டும் வருகின்றது.


சம்பந்தப்பட்ட தரப்பினரின் மனங்களில் மாற்றங்கள் ஏற்படாமல் தீர்வுகள் எட்டப் போவதில்லை என்பது எவ்வளவு காத்திரமான உண்மை என்பதை சமகால சம்பவங்கள் காட்டுகின்றன. ஜென் பீற்ரர்சன் வந்தாலும் சரி, யகூசி அகாஷி வந்தாலும் சரி சமாதானப்பேச்சுக்கள் நடக்காது! என்று முன்கூட்டியே அடித்துக்கூறியவர் ஜீ.எல். பீரிஸ். இவர் வேறுயாருமல்ல, ஒரு சட்டத் துறைப்பேராசிரியர். பொ.ஐ.மு. அரசிலும், ஐ.தே.மு அரசிலும் அரசியல் யாப்பு அமைச்சராக இருந்தவர். திருமதி குமாரதுங்கவுக்கு ஆலோசகராகவிருந்தவர். இப்பொழுது ஐ.தே.முன்னணியில் மூத்த ஆலோசகராகவிருப்பவர். சமாதான அனுசரணை மகாநாடுகளில் அரசதரப்பின் தலைமை பேச்சாளராகவிருந்தவர். தலைமைகள் எப்படிச்சிந்திக்கின்றன? எந்த இலக்கைநோக்கி காய்களை நகர்த்திச்செல்கின்றன? என்பன பற்றியெல்லாம் ஆழமாகப்புரிந்து வைத்திருப்பவர். தானே ஒரு சிங்கள இனத்தவராகவும் இருந்து கொண்டே மேற்படி எச்சரிக்கையை உதிர்த்திருக்கின்றார். இதற்கு அவரிடம் ஏராளமான ஆதாரங்கள் இருக்கவே செய்யும். இதுவே கனதியும் காத்திரமுமான விடயம். அவரின் அனுபவங்கள் எவ்வளவாயினும், இன்றைய நிலையில் அவர் ஒரு தீர்க்க தரிசியாகவும் நிருபிக்கப்பட்டிருக்கின்றார்.

நோர்வே வெளியுறவு அமைச்சர் பீற்ரர்சன் தலைமையில் உயர் ராஜதந்திரிகள் வந்தனர். யகூசி அகாஷி வந்தார். எல்லோரும் இரு தரப்பினருடனும் ஒடியோடிப்பேசினர். இதோ! சுமுக முடிவு வந்து விட்டது என்றே பலரும் பரபரப்புடன் காத்திருக்கச்செய்தனர். இறுதியில் பேச்சுக்கள், தொடர்பான தீர்மானம் எதுவுமின்றியே பேச்சுக்கள் முடிந்தன. வந்தவர்கள் வெளியேறினர். நீர் குடிப்பதில்லை என்று பிடிவாதம் செய்யும் குதிரையை ஆற்றங்கரைக்குக்கூட கொண்டுவர முடியாது என்ற புதிய அனுபவத்தையும் பெற்றுக்கொண்டனர் எனலாம்.

பேராசிரியர் பீரிஸ் "பேச்சுக்கள் நடக்காது என்னும் தனது முடிவுக்கு ஆதாரமாக திருமதி குமாரதுங்கவின் கடந்த கால அரசியல் வரலாறு, 1994 ஜனாதிபதித் தேர்தலின்போது நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக எழுத்து மூலம் வழங்கிய வாக்குறுதிக்கு நடந்தகதி, அவருக்கும், முன்னைய சுதந்திரக் கட்சித்தலைமைகளால் கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்கள் தந்த விளைபயன், பாராளுமன்றத்தைக் கலைப்பதில்லை என்ற வாக்குறுதி, ஜனாதிபதியின் பௌத்த பேரினவாத ஆதரவுத்தளம், "நாடு ஏற்கனவே இரண்டு கூறுகளாகப்பிரிந்து தான் உள்ளது. அவற்றை இணைத்து சமாதானத்தை உருவாக்க எனக்கு வாக்களியுங்கள்" என்று கேட்டுத்தமிழர்களின் வாக்குகளையும் பெற்று 62 சதவீத வாக்குகளுடன் வெற்றி பெற்று ஜனாதிபதியாகிய பின் 'சமாதானத்திற்கான யுத்தம்' நடத்தி நாட்டின் பொருளாதார உற்பத்தியை மறை எண் வரை இட்டுச்சென்றமை, புலிகளின் குண்டு வெடிப்பிலிருந்து மயிரிழையில் உயிர் தப்பிய நினைவுடன் இன்றும் கூட புலிகள் தன்னை குறிவைத்து காத்திருப்பதாக கொண்டிருக்கும் நினைப்பு என்பனவற்றை மட்டும் ஆதாரமாக கொண்டிருப்பார் என்று முடிவு செய்யலாகாது.

சுதந்திர முன்னணியை அமைக்கும் பேச்சுக்களை நீண்ட நாட்களாக ஜே.வி.பியுடன் நடத்தி இறுதியில் இன விவகாரம் தொடர்பில் ஒரு உடன்பாடு ஏற்படாமலேயே ஜே.வி.பியுடன் உடன்பாடு ஏற்படுத்திக்கொண்டமைக்குள் பொதிந்திருக்கக்கூடிய மர்மம், ஆட்சியமைத்த பின் ஜே.வி.பியைக்கிட்ட அணுகவிடாமலும் தூர விலக விடாமலும் பிடித்துக்கொண்டிருக்கும் பிடி, இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் விடுதலைப்புலிகளுடன் பேசினால் அதுவே ஆட்சியின் இறுதி நாளாகவிருக்கும் என்ற விமல் வீரவன்சவின் எச்சரிக்கையின் தாற்பரியம், ஆட்சியமைத்து ஒரு வருடத்திற்கு இனப்பிரச்சினை தீர்வு பற்றிப்பேசக்கூடாது என்று முன்னைய அரசாங்கத்துடன் ஜே.வி.பி கண்டிருந்த உடன்பாட்டின் தீர்க்கதரிசனம், கடந்த ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றபின் வெளிப்படையாக ஒரு தடவையும், இரகசியமாக இன்னுமொரு தடவையும், சத்தியப்பிரமாணம் செய்த நடைமுறையிலுள்ள இதய சுத்தி, அடுத்த ஆட்சியிலும், ஆட்சித்தலைவியாக இருப்பதற்கு தேவையான நடைமுறைகளை ஆயத்தம் செய்யும் வேகம், நாளுக்கொரு விதமாகவும், இடத்திற்கொரு விதமாகவும் சொற்சிலம் பங்களை கூசாமல் வீசிவிடும் திறமை, அரசியலமைப்புக்கு புறம்பாக அரசியலமைப்பை மாற்ற எடுக்கும் நடவடிக்கைகள் போன்ற பல சூழ்நிலைகளுடன், விடுதலைப்புலிகளின் உறுத்தும் தேவைகள், அவர்களின் நிலைப்பாடுகள் என்பனவற்றையும் கணிப் பிலெடுத்துக்கொண்டிருப்பார் என்பதே உண்மை. சர்வதேச அனுசரணையாளர்களால் மகாநாடுகள் நடத்தி இவற்றை மாற்ற முடியாதென்பதே அவரின் அனுபவமாக இருந்திருக்கும்.

நாட்டிற்கு சமாதானத்தை கொண்டு வருவதைவிட சுதந்திர முன்னணி ஆட்சியை விழவிடாமல் காப்பாற்றுவதே முக்கியமானது என்ற தத்துவத்தையே ஜனாதிபதி பின்பற்றுகின்றார் என்பதை ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ பின்வருமாறு பீ.பீ.சீ சந்தேசயவுக்கு விளக்குகின்றார்.


நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜென் பீற்ரர்சன்

"இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனைகளின் அடிப்படையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஜனாதிபதி தயாரென்றால் நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜென் பீற்ரர்சன் எதற்காக வெறுங்கையோடு வெளியேறியிருந்தார்?"

பாம்பின் கால் பாம்பு தான் அறியும். ஜனாதிபதியின் மனத்தில் உள்ளதுதான் வீரவன்ஸவின் உதட்டில் வருகின்றது! குதிரையாவது ஆற்றங்கரைக்கு வருவதாவது!

-கலைவாணன்



**கேள்வி:** நீதி மன்றம், பொலிஸ் திணைக்களம் மோசடிக்காரர்களின் கூடாரம் என்று இலங்கை ஜனாதிபதி கூறியிருக்கின்றாரே!

**பதில்:** பத்து ஆண்டுகளாக பாதுகாப்புக்கு பொறுப்பான ஜனாதிபதி பதவியிலிருந்திருக்கின்றாரே! தெரியாதா என்ன? பாம்பின் கால் பாம்பறியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா முன்....

தந்தையே! தமிழர் தாயகம் வேள்வி நடத்திக்கொண்டிருக்கின்றது. மூச்சுவிடக் கிடைத்திருக்கும் இடைவேளையில் தாங்கள் கூற நாங்கள் அன்று கேட்டவற்றை இரை மீட்டுப் பார்க்கின்றோம். தமிழ்த்தேசியத்தை காக்க நாம் நடத்தி வரும் தியாக வேள்வியின் உந்து சக்தியாக எமக்கு அவை உதவுகின்றன.

தந்தையே 1970 ஆம் ஆண்டின் பொதுத்தேர்தலின் பெறுபேறுகள் அறிவிக்கப்பட்டபோது "தமிழர்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்று நீங்கள் தீர்க்க தரிசனத்துடன் கூறிய வார்த்தைகளை அன்று நாம் விமர்சித்தோம். காப்பாற்றுவதற்கு கடவுள் இருக்கின்றார் தானே. நீங்கள் ஏன் பாராளுமன்றம் செல்ல வேண்டும்? என்று கிண்டல் செய்தோம். ஆனால் இரண்டு தசாப்தங்கள் பொழிந்த குண்டு மழையில் சிக்கி "கடவுளே எங்களைக் காப்பாற்று" என்று தான் கத்தினோம். தன் கையே தனக்குதவி என்று போரிடுபவர்கள் ஒரு புறம் தன்மானம் காக்கும் போரில் ஈடுபட்டிருந்ததையும் கருத்திலெடுத்துக்கொண்டோம். ஆனாலும் ஆத்ம திருப்தி "கடவுளே காப்பாற்று" என்று அலறிய போதேதான் கிடைத்தது.

இன்றைய நிலை என்ன? உயிர்பிச்சை கேட்டு ஊசலாடும் சமாதானத்திற்கு உயிர் தா இறைவனே என்று மதத்தலைவர்கள் வாயிலாக வேண்டுகின்றோம். தமிழர்களை எதிர்நோக்கி வந்து கொண்டிருக்கும் பேராபத்துக்களை எதிர்கொள்வதற்கு மாபெரும் சக்தி எமக்குத் தேவை என்பதையே அன்று நீங்கள் சுட்டிக் காட்டியதாக பின்னர் தான் உணர்ந்து கொண்டோம். சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் முதன் முறையாக தென்னிலங்கை மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு திருமதி ஸ்ரீமாவோவை பாராளுமன்றத்திற்கு அனுப்பிய 1970 ஆம் ஆண்டு அது. அது வரை ஆட்சியிலிருந்தது டட்லி சேனநாயக்கவும் உங்களின் தலைமையிலான தமிழரசுக்கட்சியும் இணைந்து அமைத்திருந்த ஆட்சி "டட்லியின் வயிற்றில் மசாலை வடை" என்ற இனவாத கோசத்தை எழுப்பியபடியே தான் அன்றைய ஸ்ரீமாவோ தலைமையிலான முக்கூட்டு முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையை தென்னிலங்கையில் பெற்றிருந்தது. இந்நிலையில் பல விடயங்கள் தமிழர்களின் மனங்களை உறுத்தத்தொடங்கின. பெரும்பான்மையினத்தவரின் பெரும்பான்மையே பாராளுமன்றத்தில் அமையும் ஆட்சிக்கு பெரும்பான்மையாக எக்காலமும் இருக்கப்போகின்றது என்ற நிலை தமிழர்களின் தேசியப்பிரச்சினைக்கான தீர்வு நிச்சயம் பாராளுமன்றத்திற்கு வெளியே தான் எடுக்கப்பட வேண்டுமென்னும் தெளிவு. அத்தகைய ஒரு பிரயத்தனம் சமாதான வழிகளில் அயல் நாடுகளின் அனுசரணையில் தான் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற புரிநிலை. அதற்கான மக்களியக்கத்தை உள்ளிருந்து நெறிப்படுத்தக்கூடிய தமிழ்த்தேசிய சக்திகளின் ஒருங்கிணைப்பின் அவசியம். சாத்வீகப்போராட்டங்களையெல்லாம் உதாசீனம் செய்தபடி படைபலமிடுக்குடன் செயற்படக்கூடிய தென்னிலங்கையின் வெறிப்போக்கு, இத்தகைய யதார்த்த நிலைமைகளை எதிர்கொள்வதற்கு தேவைப்படக்கூடிய உரம் வாய்ந்த தலைமையின் தேவை என்பனவற்றையெல்லாம் பல கோணங்களிலுமிருந்து ஆராய்ந்து பார்த்தபோதே "தமிழர்களை கடவுள் தான் காப்பாற்ற வேண்டியிருக்கும்" என்று உங்கள் தாயுள்ளத்தில் பட்டிருக்கின்றது என்பதை நாம் அன்று உதாசீனம் செய்தோம். அதாவது, விஸ்வரூபம் கொண்டெழக்கூடிய பேரினதேசியவாதம் என்ற எதிரியையும், "இறைமையுள்ள அரசின் முடிபு" என்னும் சம்பிரதாயத்தை அனுசரித்தபடி ஆய்வின்றி அதன் போக்கினை ஆதரித்து செயற்பட்டு தன் நலன்களைப்பேணத்துடிக்கும் வேறு அரசுகளின் நிலைப்பாடுகள் போன்றவற்றை சமாளிப்பதற்கு தமிழர்களுக்கு ஆண்டவன் அளவு சக்திதான் தேவை என்ற உங்கள் தீர்க்க தரிசனம் மிக்க மதிப்பீட்டை இன்று பரிபூரணமாக உணர்கின்றோம்.

அநியாயங்களையும் அக்கிரமங்களையும் போராடி அழித்த சக்திகளையே கடவுளாக வணங்கி வரும் மக்களுக்கு உங்கள் சிந்தனையின் நீட்சி புரியும்.

இன்று ஈராக்கிய மக்கள் புனிதப்போரில் ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்களை இன்று யார் காப்பாற்றுகின்றார்கள்? மக்கள் வாழ்வதற்கு மேலும் பாதுகாப்பான இடமாக உலகத்தை மாற்றுவதாக கூறும் அமெரிக்காவா? இல்லை ஈராக் போரில் அமெரிக்காவுக்கு ஆதரவு வழங்கும் அரசுகளா? அமெரிக்க பலத்திற்கு பயந்து ஒரு விரலையாவது நிமிர்த்தப்பயந்து வெறும் அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு வரும் நாடுகளா? உலகமா? ஈராக்கிய மக்களின் மனோ வலிமைதானே! அவர்கள் தொடுத்திருக்கும் புனிதப்போரின் உந்து சக்தி எது? அவர்களுக்கு வெற்றி கிட்ட வேண்டுமென்று நாமும் ஆண்டவனை வேண்டவில்லையா?

பல்லாண்டு காலமாக இறைமையை வைத்திருந்த வளங் கொழிக்கும் தேசங்களே இறைமைக்காக போராடுகின்றன. இந் நிலையில் இறைமையை உணர்த்திவரும் ஒரு மக்கள் கூட்டத்திற்கு ஆண்டவனின் சக்திதான் உயிரூட்டும். இதனை புரியாது பலமுள்ள பக்கத்தில் உள்ளதே நியாயம் என இன்றும் கருதும் மக்கள் சிலரை நீங்கள் மன்னிக்க வேண்டாம்.

உங்கள் தீர்க்க தரிசனம் மிக்க வார்த்தைகளை இன்று மீண்டும் நினைத்துப்பார்க்கின்றோம்.

**"விலை மதிப்பற்ற சுதந்திரமானது மிகவும் இலகுவாக பெற்று விடக்கூடியதல்ல.அது போராடிப்பெற வேண்டி யதாகும். அதனைப்பெற நாம் நீண்டதொரு போராட்டத்திற்கு தயாராக வேண்டும்"(01.11.1958)**

**"இறுதி வெற்றி தமிழினத்திற்கே எனச்சந்தேகமறத் தெளிவாகி விட்டது. இருந்தாலும் பூரண வெற்றி கிடைக்கும் வரை போர்க் கோலம் இருந்தாகவேண்டும்" (1959)**

**"போராடாமல், இரத்தம் சிந்தாமல் சுதந்திரம் பெற்று விட்டோமென்று எக்காளமிடுவது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வது போலாகும்" "இந்நாட்டின் பெரும்பான்மையின(த்தின)ருக்கு தொடர்ச்சியாக ஆட்சியதிகாரம் கிடைக்கும்படியாக இருப்பதே நாட்டின் குழப்ப நிலைக்கு காரணம் என்று கருதுகின்றேன்"(1956)**

இத்தகைய உங்கள் அறிவுரைகள் எம்மை இன்று வழிநடத்துகின்றன. பெரும்பான்மையினம் தருவதை வாங்கிக்கொள்ளுவதற்கான போராட்டசிந்தனைகளை நீங்கள் எம்மனங்களில் விதைத்திருக்கவில்லை. இன்று இடைக்கால நிர்வாகம் பற்றியும், சமஷ்டித்தீர்வு பற்றியும் பெரும் இழுபறி நடக்கின்றது.

பெரும்பான்மைத்தலைமை ஏற்று, அமைச்சுப்பதவிகளையும் பொறுப்பேற்று எமது இனத்திற்கு விமோசனத்தை பெற்றுக் கொடுக்கலாம் என்று இன்றும் சிலர் நச்சரித்து வருகின்றார்கள். இவர்களுக்கு செவிமடுக்கும் எம்மில் சிலரை நீங்கள் மன்னிக்க வேண்டாம்.

வணக்கம்,

**இப்படிக்கு தாயகச்சோலையிலிருந்து,**

**தாயக மைந்தன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலவரம் எங்கும் வரலாம்!

'புலம் பெயர்ந்து வாழும் எமது அடுத்த தலைமுறையினர் எமது பண்பாடு, மொழி, கலை, கலா சாரங்களை பேணி முன்னெடுத்துச்சென்று விருத்தி செய்வார்களா?' என்ற கேள்வியே இன்று தாயகத் தமிழரின் மனங்களில் விஸ்வரூபம் எடுத்துள்ளது என்கிறார் இலண்டனைத் தளமாகக்கொண்டு வெளி வரும் 'தமிழர் தகவல்' என்ற சஞ்சிகையின் ஆசிரியரான திரு.குலமணி. அண்மையில் இலண்டனில் இருந்து வந்துள்ள இவர் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வாழ்வியல் முறைகளை 'தமிழ் உலகத்துடன்' பகிர்ந்து கொண்டார்.

புலம் பெயர் நாடுகளில் தமிழர்கள் தமிழில் பேசுகிறார்களில்லை. இதனால் தமிழ்மொழி பேச்சு வழக்கு அருகிக்கொண்டு போகின்றது. அடிப்படையாக மொழியைப் பாதுகாக்கும் எண்ணம் அவர்களிடம் இல்லை. தமிழில் படித்த பெற்றோர்களின் பிள்ளைகள் கூட தமிழ் தெரியாமல் இருக்கின்றனர். வேடிக்கை என்னவென்றால் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள், வெளியீட்டாளர்கள் வீடுகளில் கூட ஆங்கிலமே பேசப்படுகின்றது. இது தவிர, தமது இனம், சொந்த மண் பற்றிய அறிவும் இளைய தலைமுறையினரிடையே அருகி வருகின்றது. இதற்குப் பிரதான காரணம் தமிழ் வெளியீடுகளை வாசிக்கும் பழக்கம் மிக மிக குறைவாக இருப்பதுதான். தற்போது வீட்டிலுள்ள பெரியவர்களிடமும் வாசிப்பு பழக்கம் அருக்கிக்கொண்டு செல்கின்றது. இதற்கு தொலைக்காட்சி, தமிழ் நாட்டு சினிமாவும், சின்னத்திரையும் புலம் பெயர் நாடுகளிலும் வெகுவாக ஆதிக்கம் செலுத்த தொடங்கியுள்ளதே காரணம். எமது பிள்ளைகள் கெட்டிக்காரர்களாக இருக்கின்றனர். பாடசாலைகளில் நன்றாகப் படிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு வெளி உலகம் பற்றி அறிவு இல்லை. வீட்டில் தொலைக் காட்சி பார்த்தல், தொலைக்காட்சி விளையாட்டுக்கள் (T.V Games) விளையாடுதல், இன்ரர் நெட், ஈ-மெயில் என்று பொழுதைக் கழிக்கின்றார்களே தவிர உலக நடப்பை அறிந்து கொள்ளும் ஆர்வம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. ஒரு முறை நான் பஸ்ஸில் பயணித்துக்கொண்டிருக்கையில் எனக்கு அருகில் ஒரு தமிழ்ப்பையன் இருந்தான். நான் அவனிடம் "உங்களது சேவை தாய் நாட்டிற்கு கிடைக்காமல் போய் விடுமா?" என்று கேட்டேன். அதற்க அவன், "தமிழர்களுக்கென்று ஒரு தனிநாடு உருவாகும் பட்சத்தில் இவற்றையெல்லாம் உதறித்தள்ளி விட்டு ஓடி வர தயாராகவே இருக்கின்றேன்" என்று ஆங்கிலத்தில் பதில் அளித்தான்.

புலம் பெயர் நாடுகளில் வாழும் பிள்ளைகளுக்கு பரத நாட்டியம், சங்கீதம், மிருதங்கம், வயலின், வீணை பொன்ற கலைகளின் அறிமுறை கல்வி (Theory) ஆங்கிலத்தில் தான் கற்பிக்கப்படுகின்றது. இவர்கள் அறிமுறைப்பரீட்சையை (Theory Exam) ஆங்கிலத் திலேயே எழுதுகின்றனர்.

இது மிகவும் தவறான ஒரு கற்பித்தல் முறையாகும். இவ்வாறான செயற்பாடுகள் பிள்ளைகளுக்கு தாய் மொழியின் மீதுள்ள ஈடுபாட்டைக் குறைக்கின்றது என்று தான் கூற வேண்டும்.

இங்கு பிள்ளைகளை சிறு வயதிலேயே தனியான ஒரு அறையில் அவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களை தனிமைப் படுத்தி விடுகின்றனர். சிறுவயதிலிருந்து தனிமைப்பட்டு வளரும் குழந்தை வளர்ந்தும் தனியாகவே இருக்க விரும்புகின்றது. கீழைத்தேச நாடுகளை போன்று அங்கு பிள்ளைகள் பெற்றோரில் தங்கி வாழ்வதில்லை. அவர்கள் தொழில் பார்க்கின்றார்கள். தமக்கு தேவையான பணத்தை சம்பாதிக் கின்றார்கள், விரும்பியபடி செலவு செய்கின்றார்கள்.

புதினம், தமிழ் உலகம், தமிழினி, மனம் பேசுது, தென்றல், வடலி,ஒரு பேப்பர், உதயன், விடுதலை, தமிழ் கார்டியன், எரிமலை, இலண்டன் முரசு, தமிழர் தகவல் ஆகிய தமிழ் பத்திரிகைகள் அங்கு வெளியாகின்றன. இவை தவிர நாட்டுக்கூத்துகள், திருமறைக்கலாமன்றத்தின் நிகழ்வுகள், அவைக்காற்று கலைக்கழகத்தின் நிகழ்வுகள் தாராளமாக அரங்கேறுகின்றன.

முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட்டு சொல்ல வேண்டும். புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் மத்தியில் தாம் கடைசிவரை அங்கேயே வாழப் போகின்றோம் என்ற ஒரு தப்பபிப்பிராயம் உள்ளது. வகுப்பு வாதமும் வன்முறையும் எங்கும் வளரும், குழப்பமோ, வன்முறையோ வரும்போது அவர்கள் நிச்சயம் மீண்டும் இலங்கைக்கே திரும்பி வர வேண்டி வரும் என்பதை அவர்கள் மறந்து விடக் கூடாது.

எனவே புலம் பெயர், நாடுகளில் வாழும் எம்மவர்கள் அடுத்த தலைமுறையாகிய தமது பிள்ளைகளுக்கு தாய் மொழியை தெளிவாக கற்பிப்பதோடு தமது இனம், தாய் நாடு பற்றிய சிந்தனையும் அக்கறையும் உள்ளவர்களாக வளர்க்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரினதும் தார் மீகப்பொறுப்பாகும்.

\- தீபா

# பொரோக் (Boroque)



'ஆள் பாதி ஆடை பாதி' எனும் தொன்மொழி அன்று முதல் இன்று வரை நம்மிடையே நிலவி வரும் ஒன்று. இதனை மெய்ப்பிக்கின்றது 'பொரோக்' நிறுவனம் தயாரிக்கும் ஆடைகள். 2003 ஆம் ஆண்டு இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டாலும் ஒரு வருடத் திலேயே (2003-2004) பல பக்கங்களைக் கொண்ட வைரம் போன்று இலண்டன் வாழ் மக்கள் மத்தியில் தன் புகழால் ஒளிர் விடுகின்றது. இது எல்லா நிறுவனங்களுக்கும் கிடையாத பெருமை என்றே பகரலாம்.கடந்த ஒரு தசாப்தமாக ஆடை வடிவமைப்பில் ஆர்வமும் திறமையும் கொண்டு விளங்கும் திருமதி. நிரோ சிவகுமாரனால் இந்நிறுவனம் ஆரம்பிக் கப்பட்டமை குறிப்பிடத் தக்க விடயமாகும். எல்லோராலும் குறுகிய கால வரையறையில் ஒரு துறையில் தடம்பதித்து விட முடியாது என்ற கருத்திற்கு முரணானவர் திருமதி. நிரோ அவர்கள்.

கடந்த வருடம் இலண்டனில் இந்நிறுவனத்தால் நடைபெற்ற ஆடை வடிவமைப்பு (Fashion Show) நிகழ்ச்சியில் இத்துறையைச் சார்ந்த பிற நிறுவனங்களில் இருந்து 'பொரோக்'(Boroque) கைப்பிரித்து இனம் காட்டியது மட்டுமன்றி இத்துறையில் தனக்கொரு புகழ்ாரத்தையும் தேடிக்கொண்டது. இந்தியா, இலங்கையிலிருந்து வருகை தந்த மொடல் மங்கையர்களுடன் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்தவர்களும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றே.

அதே போல் இவ்வாண்டு ஐப்பசி 30 ஆம் திகதி 'போர்ஜெஸ்டர் ஹோலில் (Porchester Hall) தனது வெற்றியின் இரண்டாம் படியிலேறி பெருமை சாற்றப்பட்டமை இந்நிறுவன பணிப்பாளர் திருமதி. நிரோ சிவகுமாரனுக்கும் அந்நிறுவன ஊழியர்களுக்கும் கிடைத்த வெற்றி என்றே கூறலாம்.




இந்நிறுவனம் அனைத்து தர வயதுடைய பெண்களையும் கவனத்தில் கொண்டு புதிய முறையில் வடிவமைக்கப்பட்ட சேலைகள் காஹிராக்கள், நவீன ரக சல்வார்கள், மற்றும் அதற்கேற்ற அணிகலன் பல்வகையினையும் வட இந்திய, இலண்டன் நாகரிகத்திற்கேற்பவும் இங்கு வடிவமைக்கப்படுவது அனைவரின மனத்தையும் தன்பால் ஈர்க்கும் காந்தமாகின்றது.


சிறுவர்கள், ஆண்களுக்கேற்ற ஆடைகளையும் திருமணம், மற்றும் வேறு வைபவங்களுக்குமேற்ற வகையில் இந்நிறுவனத்தில் ஆடைகள் வடிவமைக்கப்படுகின்றன. அனைவரையும் கவரும் விலை மாத்திரமன்றி வாடிக்கையாளர் மனம் மகிழும் வகையில் அவர்கள் விரும்பும் வண்ணம் ஆடைகள் வடிவமைப்பதில் இருந்து இந்நிறுவனம் வாடிக்கையாளர்களுக்கும் கொடுக்கும் முதன்மை சான்று பகர்கின்றது.

குன்றிலிட்ட தீபம் போல் ஒளிரும் 'பொரோக்'கின் பெருமை சொற்களைக் கொண்டு புகழாரம் சூட்டாது செயலால் தனக்கு பெருமை தேடியது (Action speak louder than words), அவ்வகையில் டிசெம்பர் 31 ஆம் திகதி தீபம் தொலைக்காட்சி அலைவரிசை இவ்வருடம் இந்நிறுவனத்தால் நடாத்தப்பெற்ற ஆடை வடிவமைப்பு(Fashion Show) நிகழ்ச்சியை ஒளிபரப்பாக்கவுள்ளது நீங்களும் அதனைக்கண்டு களியுங்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# "தாக்குமுன் தாக்கும்" உபாயம் திருப்பித்தாக்குமா?


அணுசக்தி ஆய்வு நிபுணர் எல்பராடி


ஈரான் தனது யூரேனியம் வளமாக்கல் திட்டத்தை கைவிட வேண்டும் என்று சர்வதேச அணு சக்தி நிறுவனம் (LAEA) எச்சரித்ததைத்தொடர்ந்து, அமெரிக்காவுடன் ஏனைய சில மேற்கு நாடுகளும் ஈரானை குற்றஞ் சுமத்தத் தொடங்கியுள்ளன. இரகசியமான முறையில் அணுவாயுத்தயாரிப்பில் ஈரான் ஈடுபட்டிருப்பதாக அவை கூறுகின்றன.இதனை மறுத்து வரும் ஈரான் தனது முயற்சிகள் யாவும் மின் உற்பத்திக்கு தேவையான எரிபொருள் உற்பத்தி செய்வது மட்டுமே என்று அடித்துக்கூறி வருகின்றது. மேற்கு நாடுகளின் அழுத்தம் அதிகரித்த நிலை ' யில் ஈரான் கடந்த ஆண்டு தானாகவே தனது யூரேனிய வளமாக்கல் திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்திருந்தது. நிறுத்திக்கொள்வதென்றும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், கடந்தாண்டு ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்பை நடத்தியதைத் தொடர்ந்து ஈரானிய ஆட்சிபீடம் அவசரமான கூட்டங்களை நடத்தி தீர்மானங்கள் எடுப்பதில் ஈடுபட்டதாக செய்திகள் வந்தன. எவ்வாறாயினும், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் நாடுகள் போன்று தானும் உறுதியான நிலைப்பாட்டுடன் அணுவாயுதங் களைத்தயாரித்து விட முடியுமாயின் அவையே தனக்கு பாதுகாப்பானவையாகி விடும் என்று ஈரான் எண்ணியிருக்கலாம். ஆயினும், சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின் எச்சரிக்கையின் துணையுடன் மேற்கு நாடுகள் மிரட்டல் சமிக்ஞைகளை காட்டுகின்றன. ஈரானுக்கெதிரான பொருளாதார தடைகள் பற்றி புஷ் நிர்வாகம் ஆலோசித்தது. இதற்கு வேண்டிய ஒத்துழைப்புகள் சீனா, ரஷ்யா, பிரான்ஸ் போன்ற முக்கிய நாடுகளிடமிருந்து கிடைப்பதாக இல்லை. இந்தியாவும் ஆதரிக்கத்தயாராக இல்லை. பொருளாதார தடைகளை ஏற்படுத்துவதில் சகுனங்கள் பிழைத்தாலும் அமெரிக்காவின் கொள்கை வகுப்பாளர்கள் 'தாக்குமுன் தாக்கும்' தமது திட்டங்கள் பற்றி பேசாமலில்லை.இதே வேளை, ஈரானிய அணு ஆலைகள் மீது தாக்குதல்களை நடத்துவதற்கு இஸ்ரேல் தயாராகிவருவதாக




இஸ்ரேலின் யுத்தவிமானங்கள் பாக்தாத்தின் ஒஸிரக் அணுவாலையை1981 இல் குண்டு வீசித்தாக்கியிருந்தன. ஈரான் அணுவாயுதங்களை தயாரித்து விடுமாயின் என்றோ ஒரு நாள் அது இஸ்ரேலை அழித்து விடும் என்று இஸ்ரேலிய இரகசிய அமைப்பான மொசாட்டின் செயற்பாட்டாளர் ஒருவர் அண்மையில் தெரிவித்திருந்தார். இதேவேளை, இராணுவத்தீர்வு தேவை என்று அரசு தீர்மானித்ததுமே அதனை வழங்க படையினர் தயாராயுள்ளனர் என்று







அணுவாயுத பரம்பலை நிராகரிக்கும் உடன்பாட்டில் ஒப்பமிட்டு ஏற்றுக்கொண்ட ஈரான், அவ்வொப்பந்தம் யூரேனியத்தை மின்னுற்பத்தி போன்ற சமாதான நோக்கங்களுக்காக பயன்படுத்துவதை ஒப்பந்தம் நிராகரிக்கவில்லை என்று வலியுறுத்தி வருகின்றது.ஈரான் உடனடியாக தனது யூரேனியத் திட்டத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் கடந்த செப்டெம்பரில் சர்வதேச அணுசக்தி ஆய்வு நிறுவனத்திடம் பிரேரணையொன்றை கொடுத்திருந்தன. இதனை நவம்பர் இறுதிப்பகுதிக்கு முன்னர் நிறைவேற்றிவிட வேண்டுமென்றும் அந்நாடுகள் கேட்டிருக்கின்றன. அவ்வாறு செய்யாவிட்டால் பின்விளைவுகளை சந்திக்க வேண்டிவரும் என்றும் எச்சரித்தன. தனது அணுஆலைகளை சர்வதேச பரிசோதனைகளுக்கு அனுமதிப்பதென்றும் தானாகவே முன் வந்து ஆலைகளின் செயற்பாட்டை

கதைகள் வெளியாகின. இக்கதைகள் பரவுவதுடன் அமெரிக்காவிடமிருந்து இஸ்ரேல் பயங்கர ஆயுதங்களை கொள்வனவு செய்கின்றது என்ற செய்திகளும் வெளியாகின. ஈராக்கில் தாராளமாக பயன்படுத்தி வரும் 'ஸ்மார்ட் குண்டுகள்'ஆயிரக்கணக்கிலும் ஒவ்வொரு தொன் எடையுள்ள 'பங்கர் உடைக்கும் குண்டுகள்' ஒரு தொகையையும் தான் இஸ்ரேலுக்கு விற்பனை செய்வதாக அமெரிக்க நிர்வாகம் வெளிப்படுத்தியது. நிலத்தினடியே நிர்மாணிக்கப்பட்டிருக்கும் என்று கருதப்படும் அணுவாலைகளை சென்றடைந்து தாக்கக்கூடிய குண்டுகள் தயாராக வைக்கப்பட்டுள்ளன என்ற செய்தி இதன் மூலம் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்காசியாவின் அணுவாயுத ஏகபோகத்தை தான் கொண்டிருக்கப்போவதாக இஸ்ரேல் கொண்டிருக்கும் நம்பிக்கையை புறந்தள்ளிவிட முடியாது என்ற நிலை இங்கு உணர்த்தப்படுவது தெரிகின்றது.

இஸ்ரேலிய வான்படை அதிகாரியும் கூறியிருந்தார்.ஈரானின் நிலைப்பாடும் தெளிவுபடுத்தப்பட்டிருக்கின்றது. யூரேனியத்திட்டத்தை கைவிடச்செய்வதற்கு காலக்கெடு எதனையும் எந்தநாடும் விதிக்க முடியாது. தனது அணுசக்தி நிலையங்களில் யூரேனியத்தை வளமாக்கும் செயற்பாட்டை நடத்துவதற்கு ஈரானுக்குள்ள உரிமையை உலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்று ஈரானிய அரசு வெளிப்படுத்தியுள்ளது. அத்துடன் யூரேனிய கனியத்தை வாயுவாக மாற்றும் பாரிய செயற்திட்டத்தை தான் ஆரம்பித்துள்ளதாகவும் தெஹ்ரான் அறிவித்திருக்கின்றது. இது பற்றி அமெரிக்க அதிகாரிகள் தெரிவிக்கையில், இது எத்தனையோ அணுக்குண்டுகளை செய்வதற்கு போதுமானது என்றனர்.ஆனால் பல அணுவாயுத வல்லரசுகளை விட அதிகமாக அணுகுண்டுகளை வைத்திருக்கும் இஸ்ரேல் மீது பொருளாதார தடைகளோ, சர்வதேச பரிசோதனைகளோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்படுவது பற்றிய கேள்விகளே எழுவதில்லை. இவ்வாண்டின் ஜூன் மாதத்தில் இஸ்ரேலுக்கு விஜயம் செய்த அணுசக்தி ஆய்வு நிபுணர் எல்பராடி இது பற்றிய கண்டனங்களை யூதர்களின் அரசுக்கெதிராக தெரிவித்திருக்கவில்லை என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.அண்மையில் ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் அலி சுசம் காணி "பிறர் எம்மைத் தாக்க அனுமதித்து விட்டு நாம் கைகளை கட்டிக் கொண்டு பார்த்திருக்க முடியாது" என தெரிவித்துள்ளார்.

அவர் மேலும், தாக்கு முன் தாக்கும் கோட்பாடு அமெரிக்காவுக்கு மட்டும் சொந்தமானதல்ல எனவும் கருத்து வெளிப்படுத்தியுள்ளார். ஈரான் ச்சஹாப் -3 ரக நடுத்தர ஏவுகணைகளைப் பரிசோதித்து வெற்றி கண்டுள்ளது. இஸ்ரேலின் இராணுவ நிலைகள் அணுநிலைகள் போன்ற பலவும் இப்பொழுது இந்த ச்சஹாப்-3 ஏவுகணைகளின் வீச்சு எல்லைகளுள் அடங்குகின்றன. இதனால் இஸ்ரேல் ஈரானிய நிலைகள் மீது தாக்குதல் தொடுக்குமாயின் அது நெகெவ் பாலைவனப்பகுதியில் டிமோனாவில் நிறுவியுள்ள அணுவாயுத நிலையம் குறி வைக்கப்படும் என்று ஈரானிய படையதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஈரானின் வெளியுறவு அமைச்சர் கமால் கார்ஷி நியூ யோர்க் நகரில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்திற்கு சென்றபோது கருத்துத் தெரிவிக்கையில், ஈரானிய அணுநிலைகள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்துமாயின் கடுமையான பதிலடி கொடுக்கப்படும் என தெரிவித்திருக்கின்றார். ஈரானின் ஜனாதிபதி கட்டாமி செப்டெம்பர் இறுதிவாக்கில் கருத்து தெரிவித்தபோது, ஈரான் சமாதானநோக்கங்களுக்காக அணுவாயுத உற்பத்தி திட்டத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்கும் என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார். அணுவாயுதங்களை நாம் உற்பத்தி செய்ய மாட்டோம். ஏனைய நாடுகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சியதாலல்ல, ஆனால் மனித குலத்திற்கு அணுவாயுத அச்சுறுத்தல் இருக்கக்கூடாது என்பதற்காகவே எனவும் அவர் தெரிவித்தமை கருத்தில் கொள்ளத்தக்கது. தாக்குமுன் தாக்கும் முன்னுதாரணம் ஓட்டப்பம் போல் மாறி விடுமா?

- சர்வன்

# போராடும் மக்களின் நீங்காத வடிவம்

அரபாத்







அரபாத்தைப்போன்று உடையணிந்து அவருக்கு அஞ்சலி செலுத்தும் பாலஸ்தீன இளைஞர்கள் சிலர்

மொகமத் அப்டெல் ரவூப் அரபாத் 1929 ஆகஸ்ட் 24 ஆம் திகதி கெய்ரோவில் பிறந்தார். பெற்றார் பாலஸ்தீனர்கள். ஐந்து வயதில் அன்னை மரணித்ததும் ஜெருசலேத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு மாமனாரோடு வளர்ந்தார். அக்காலத்தில் பிரிட்டனின் ஆட்சிக் குட்பட்டிருந்த பாலஸ்தீனத்தில் ஆங்கிலேயருக்கெதிரான உணர்வுகள் மேலோங்கியிருந்தன. 1948 இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது அரபு-இஸ்ரேல் மோதல்கள் இடம்பெற்றன. அதில் யசீர் அரபாத் பங்கு பற்றினார். பல்கலைக்கழக மாணவனாக இருந்த அரபாத் கல்வியைப்புறக்கணித்து விட்டு யூதர்களுக்கு எதிரான போரில் தீவிரம் காட்டினார். ஆயினும் கல்வியை முற்று முழுதாக புறக்கணிக்காதிருந்த அவர் 1956 இல் ஒரு பொறியியல் பட்டதாரியானார். இதன் பின்னர் சிறிது காலம் எகிப்திலும் குவைத்திலும் பதவி வகித்தார்.

1958 இல் இவரது பாலஸ்தீன நண்பர்கள் அல்-பெற்றா என்னும் இரகசிய இயக்கத்தை ஆரம்பித்தபோது அரபாத் அதற்கு உறுதுணையாக இருந்தார். படிப்படியாக ஒரு முழுநேர போராட்ட வீரராக செயற்படத்தொடங்கினார். 1964 இல் பாலஸ்தீனத்தை விடுவிக்க போராடும் இயக்கங்களை ஒன்றிணைத்து பாலஸ்தீன விடுதலை இயக்கம்-பீ.எல்.ஓ.-நிறுவப்பட்டது. இவ்வமைப்பில் அரபாத்தின் அல்-பெற்றா அமைப்பு ஒரு பலம் பொருந்திய இயக்கமாக திகழ்ந்தது.

1967 இன் 6 நாள் போரில் மேற்குக்கரை, காஸா பள்ளத்தாக்கு மற்றும் சில பகுதிகளை இஸ்ரேல் கைப்பற்றிக்கொண்டது. இதனையடுத்து பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் நிர்வாக இயக்குநர் பதவியை ஏற்று அரபாத் அதனை வீறு கொண்ட இயக்கமாக மாற்றினார். ஜோர்தானில் நிலை கொண்டு தம்மை வலுப்படுத்திக்கொண்ட இவர்கள் இஸ்ரேல் மீது கெரில்லா தாக்குதல்களை நடத்தினர். இதனால் 1968 இல் இஸ்ரேலிய படைகளுக்கும் பாலஸ்தீன போராளிகளுக்குமிடையில் வெளிப்படையான பெரும் மோதல் நடைபெற்றது. ஜோர்தான் மன்னர் இதனை தனக்கு ஒரு தலையிடி எனக்கருதத்தொடங்கவே அங்கிருந்து லெபனானுக்கும் பின்னர் டூனீஷியாவுக்கும் இயக்க அமைப்புகளை அரபாத் மாற்றினார்.

1969 இல் பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவரானார். 1974 இல் ஐ.நா சபையில் உரையாற்றும் வாய்ப்பு கிடைத்தது.

ஒரு கையில் ஒரு துப்பாக்கியையும் அங்கு கொண்டு சென்ற அவர் மறு கையில் ஒலிவ் மரக்கிளையையும் ஏந்தியபடி முழக்கமிட்டார். போராட்டம் தீவிரமடைய அடைய 1988 இல் அரபாத் ஒரு கொள்கைப்பிரகடனத்தை வெளியிட்டார். அதாவது பீ.எல்.ஓ. பயங்கரவாதத்தை கைவிடுவதாகவும், இஸ்ரேல் ஒரு நாடாக நிலைத்திருப்பதை அங்கீகரித்திருப்பதாகவும் சுவிற்சர்லாந்தில் நடைபெற்ற ஐ.நாவின் விசேட மாநாட்டில் வெளியிட்டார்.

பின்னர் 1993 இல் ஒஸ்லோ ஒப்பந்தம் ஏற்பட்டது. இஸ்ரேலிய பிரதமர் யிற் சாக் ராபினுடன் ஒப்பந்தத்தில் அரபாத் ஒப்பமிட்டார். பின்னர் 1996 இல் நடைபெற்ற தேர்தலில் பாலஸ்தீன ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டார். இஸ்ரேலுடன் மோதல்கள் தொடரவே செய்தன. பேராட்டமே வாழ்வு ; வாழ்வே பேராட்டம் என்னும் நிலையில் 2004 நவம்பர் 11 ஆம் திகதி உலக சமாதானத்திற்கு வித்திட்ட நாளைத் தேர்ந்தெடுத்து அரபாத் தனது சிந்தனையையும் போராட்டத்தையும் தனது 75 ஆவது வயதில் நிறுத்திக்கொண்டார்.

கறுப்பு-வெள்ளை நிறத்தலைப்பாகையுடன் நிரந்தரமான வெண்தாடியுடன் தோற்றம் தந்த யசீர் அரபாத் போராடும் மக்களின் நெஞ்சங்களிலிருந்து நீங்காத ஒரு வடிவம். இஸ்ரேலுடன் செய்து கொள்ளக்கூடிய எந்தவொரு சமாதானமும் நிலைத்து நிற்ககப்போவது அல்ல என்பதை நன்கு புரிந்து வைத்துக்கொண்டு செயற்பட்ட ஒரு முன்னோடி அவர். நோபல் பரிசினால் ஏமாளியாகி விடாத ஒரு போராளி. விடுத்தலைப்போராட்டத்தின் அடையாளச் சின்னம்.

பாலஸ்தீனத்தை விடுதலை பெறச்செய்வதற்கு ஆயுதப்போராட்டத்தை நடத்தியவர். அந்த இலட்சியம் நிறைவேறாமலே மரணத்தை தழுவியிருக்கின்றார். இரண்டாம் உலகப்போரின் பின்னர் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதனால் நாடற்றவர்களாக்கப்பட்ட பாலஸ்தீனர்களின் மிக நீண்ட விடுதலைப்போராட்டம் உலகின் பல நாடுகளிலுமுள்ள தேசிய விடுதலைப்போராட்டங்களுக்கு உந்து சக்தியாக விளங்கியதாயினும் பாலஸ்தீனப்போராட்டம் குறிப்பிட்டளவு வெற்றியை ஈட்டியிருக்கவில்லை என்றும், சமாதானத்தின் பெயரால் அரபாத் ஏமாற்றப்பட்டார் என்றும் விமர்சனங்கள் உள்ளன. பாலஸ்தீன நாட்டை நிறுவுவதற்கு வேண்டிய வலுவான நியாயப்பாடும் உலகம் பூராவிலும் ஏழு பில்லியன் முஸ்லிம்கள் இருக்கும் நிலையிலும், 13 மில்லியன் எண்ணிக்கையுடைய இஸ்ரேலியர்கள் தமது தீர்மானங்களையே நியாயப்படுத்தவும், நிலைபெறச்செய்யவும் சாத்தியமாவது எப்படி என்ற கேள்வியை ஆராயும் பொழுது புரட்சித் தலைமையில் எங்கேனும், ஏதேனும் ஆளுமைக் குறைபாடுகள் இருக்கலாம் என்று எண்ணத் தோன்றுவது இயற்கையே.

எண்ணிக்கையின் அதிகரிப்பினால் எதனையும் சாதிக்கலாம் என்பது ஒரு மூடநம்பிக்கை என்று கொள்ளப்படவேண்டும். பாராளுமன்ற தேர்தல்களில் எண்ணிக்கை பயனளிப்பது போல யுத்தத்தில் பயனளிப்பதில்லை. போராளிகளின் மனோதிடமும் தொழில் நுட்ப வளர்ச்சிகளை கையாளுதல், போர் உத்திகளில் பாண்டித்தியம் பெறுதல் போன்ற திறன்களே வெல்லும் என்பதற்கு இஸ்ரேல் பாலஸ்தீன போர் வரலாறு சாட்சியாகவுள்ளது. ராஜதந்திரத்தை கையாளுவதில் மிகுந்த நுட்பத்திறனும் தேசிய விடுதலை இயக்கங்களுக்கு இன்றியமையாத சொத்தாகும். அரபாத் ஒரு பீனிக்ஸ் பறவை. மீண்டும் தோன்றுவார். விடுதலை நிச்சயம் என்பது வெள்ளிடைமலை. - சர்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ தேசிய தலைவரின் மாவீரர் தின உரை

எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத்தழுவிக்கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்நாள். எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புக்களையும் நெஞ்சில் நிறுத்தி நினைவு கூரும் இத்திருநாளில் ஒரு முக்கியவிடயத்தைக் கவனத்திற் கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கின்றேன்.

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது விடுதலைப்போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம். உலகமே வியக்கும் வகையிற் போர் அரங்குகளில் எதிரிப்படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும்பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுகளின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட சிறீலங்கா அரசினது ஆயுதப்படைகளுக்கு ஈடாக படைவலுச்சமநிலையை நிலை நாட்டினோம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை சர்வதேச மயப்படுத்தி, உலகத்தின் கவனத்தை எம் மீது திருப்பினோம். எனினும், எமது மாவீரர் கண்ட இலட்சியக்கனவு இன்னும் நிறைவு பெறவில்லை. எமது தாயக மண் இன்னும் முழுமையாக விடுதலை பெறவில்லை. எமது மக்கள் இன்னும் பூரணசுதந்திரம் அடைந்துவிடவில்லை.

தமிழீழத்தின் தொன்மை வாய்ந்த, வரலாற்றுப்புகழ் மிக்க நகரங்களும் பட்டினங்களும் அங்கு வாழ்ந்து வரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப்பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்த வெளிச்சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கின்றார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம் பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர் தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்கு திரும்ப முடியாது அகதி முகாம்களில் அல்லல் படுகின்றார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொடர்கின்றது. தேசவிடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவு கண்ட அந்தச்சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

எமது அன்பான மக்களே!

தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காலத்தீர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஒரு அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனியநிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்கு பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்.

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப்போருக்கு நாம் ஓய்வு கொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதி காத்த இக்கால விரிப்பில், சமாதான வழி மூலமாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.


நோர்வே நாட்டை நடுநிலையாளராக ஏற்று, அந்நாட்டின் அனுசரணையுடன் உலக நாடுகள் சிலவற்றின் தலைநகர்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் எமது விடுதலை இயக்கம் பங்குபற்றியது. ஆறு மாதங்கள் வரை நீடித்த ஆறு சுற்றுப்பேச்சுக்களும் அர்த்தமற்றதாகப் பயனற்றுப்போயின. நெருக்கடி நிலையைத்தணித்து, இயல்பு நிலையைத் தோற்றுவித்து, இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்தவும், அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கவும், போரினாற் பேரழிவுக்கு ஆளான கட்டுமாணங்களை புனர் நிர்மாணம் செய்யவும், நிறுவப்பட்ட உப-குழுக்கள் செயலிழந்து செத்துப்போயின. இவை ஒரு புறமிருக்க, சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டி விட்டு வாஷிங்டனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால் சமநிலைப்பங்காளி என்ற நிலையிலிருந்து நாம் ஓதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட நாம் விரும்பவில்லை. பேச்சுக்களை இடைநிறுத்தம் செய்த இடைவெளியில், ஓர் இடைக்கால கட்டமைப்புக்கான திட்டவரைவை முன்வைக்குமாறு ரணில் விக்கிரமசிங்காவின் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம். நீண்டகாலப்போரினாலே பாதிக்கப்பட்ட எமது மக்களுக்கு புனர்வாழ்வு பெற்றுக்கொடுக்கவும் சிதைந்து போன தமிழர் தேசத்தை மீள் நிர்மாணம் செய்யவும் கணிசமான அதிகாரத்துடன் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமென்பதை வலியுறுத்தினோம்.

ஒன்றுக்குப்பின் ஒன்றாக ரணிலின் அரசு முன்வைத்த, இடைக்கால நிர்வாகம் பற்றிய மூன்று வரைவுகளும், எமக்குத்திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் நிர்வாக வலுவற்றதாக இத்திட்ட வரைவுகள் அமையப்பெற்றதால் எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில், ஓர் இடைக்கால நிர்வாகத்திட்டவரைவை நாமாகத்தயாரித்துக்கொடுக்க முடிவெடுத்தோம். பல மட்டங்களிலே தமிழீழ மக்களின் கருத்தைப்பெற்று, வெளிநாடுகளிற் புலம் பெயர்ந்து வாழும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், அரசியலமைப்பு நிபுணர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் ஓர் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத்திட்டத்தைத் தயாரித்தோம். இத்திட்டம் புதுமையானது. நடைமுறைச்சாத்தியமானது. எமது மக்களின் அவசரமான வாழ்நிலைத்தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இதன் கட்டமைப்பு நெறிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளை தாமதமின்றி செயற்திறனுடன் நிறைவு செய்ய வழி வகுக்கும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமையப்பெற்றது. இந்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத்திட்டத்தை சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திடம் சமர்ப்பித்ததுடன், ஊடகங்கள் வாயிலாகப்பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத்திட்டத்தை வரவேற்கத்தவறவில்லை. நீண்ட காலத்தின் பின்பு முதற்றடவையாக விடுதலைப்புலிகள் தமது அரசியற்சிந்தனைகளை தெளிவாகவும், விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந்நாடுகள் திருப்தி தெரிவித்தன.

நாம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தை ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கம் நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைவுகளை காட்டிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்றே குறிப்பிட்ட அரசாங்கம், எமது யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது. ஆனால் அதே சமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தை கடுமையாக விமர்சித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழீழ தனியரசுக்கு இடப்பட்ட அத்திவாரமெனக்கண்டித்தது. சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா ஒரு படி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத்திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப்பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது. பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக்கொண்டதால் ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சி பீடம் ஆட்டம் கண்டது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்துக்குள் ஜனாதிபதி சந்திரிகாவினாற் பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசாங்கம் கவிழ்ந்தது.

இவ்வாண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத்தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச்செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான



சிங்களப்பௌத்த பேரினவாத சக்திகள், என்றுமில்லாதவாறு, தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இப்பொதுத் தேர்தல் வழி வகுத்தது. இனவாதமும் மதவாதமும் பழைமைவாதக் கம்யூனிசமும் ஒன்று கலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித்திளைத்த தமிழர் விரோதக்கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) இத்தேர்தலில் கணிசமான ஆசனங்களைப்பெற்று மூன்றாவது பிரதான அரசியற்கட்சியாக வெற்றி பெற்றது. இந்த இனவாதக்கட்சியை முக்கிய தோழமைப்பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தார் சந்திரிகா அம்மையார்.

தமிழரின் தேசியப்பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசாங்கம் அமையப்பெற்றது.

பொதுசனத்தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கிற் சிங்களப்பௌத்த மேலாண்மை வாதம் வலுப்பெற்ற அதே சமயம், தமிழரின் தாயகமான வடகிழக்கில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாக தமிழத்தேசியம் எழுச்சி பெற்றது.

எமது விடுதலை இயக்கத்தின் அரசியல் இலட்சியத்திற்கு மக்கள் சக்தியின் ஏகோபித்த ஆதரவு கிட்டியது.

தமிழீழ மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்ற வெகுசன அங்கீகாரமும் எமது விடுதலை இயக்கத்திற்கு வழங்கப்பட்டது. எமது இயக்கம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைத்திட்டத்திற்கு எமது மக்களின் மனுவும் கிடைத்தது. விடுதலைப்புலிகளின் இலட்சியக் குரலாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனநாயக சக்தியாக தமிழத்தேசியக்கூட்டமைப்பு இருபத்திரெண்டு ஆசனங்களைப்பெற்று அமோக வெற்றியீட்டியது. இப்பொதுத்தேர்தலானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாக பிரிவுறச்செய்தது. கருத்தாலும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு மாறுபட்டு முரண்பட்டு நிற்கும் இரு மக்கள் சமூகங்களாக பிரிவுறச்செய்தது.

தென்னிலங்கையில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து அரசியலதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்த போதும் நாம் தொடர்ந்தும் அமைதி பேணி, சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பினோம். இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயாரென்பதை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாகச்சந்திரிகாவின் கூட்டணி அரசாங்கத்திற்கு அறிவித்தோம். அவ்வேளைதான் அரச கூட்டணிக்குள் குழப்பமும் கொள்கை முரண்பாடும் தலைதூக்கின.

அரச கூட்டணிக்குள் ஆதிக்க வலுவுடைய கட்சியான ஜே.வி.பி, சமாதானப்பேச்சுக்கள் வாயிலாக தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும், ஆட்சியதிகாரமும் வழங்கப்படுவதைக்கடுமையாக எதிர்த்தது. மூன்றாந்தரப்பு நடுநிலையாளராக செயற்பட்ட நோர்வே அரசையும் வன்மையாக கண்டித்தது. நாம் முன்வைத்த அதிகார சபைதிட்டத்தை முற்று முழுதாக நிராகரித்தது. எமது திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்கள் ஆரம்பமானால் அரச கூட்டணியிலிருந்து வெளியேறிவிடப்போவதாகவும் மிரட்டியது. சமாதானப்பேச்சுக்கும், சமரச முயற்சிக்கும் எதிரான ஜே.வி.பியினரின் தீவிரவாதக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடும்போக்கு, சந்திரிகா அம்மையாருக்கு பெரும் சவாலாக அமைந்தது. இந்நிலையே தொடர்ந்தும் நீடிக்கின்றது.

சமாதான வழிமுறையைப்பேணி இனப்பிரச்சினைக்குத்தீர்வு காணவேண்டுமென்ற சர்வதேச அழுத்தம் ஒரு புறமும், பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னேற்றம் ஏற்படும்போதுதான் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பெருந்தொகைக்கடனுதவி கிடைக்குமென்ற நிர்ப்பந்தம் மறுபுறமும், பாதாளம் நோக்கி சரிந்து செல்லும் இலங்கையின் பொருளாதாரம் இன்னொரு புறமுமாக, சந்திரிகாவின் அரசு பல முனைகளில் நெருக்கடியைச்சந்தித்து நிற்கின்றது. இந்த நெருக்கடிக்கு முகம் கொடுப்பதாயின் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருக்கின்றது. ஆனால் அரச கூட்டணிக்குள் நிலவும் உள் முரண்பாடும், அடிப்படையான கொள்கை வேறுபாடும் சமாதானப்பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத்திட்டமோ பொதுவான அணுகுமுறையோ இருக்கவில்லை. தமிழர் விரோத இனவாதத்திலும் போர்வெறி பிடித்த இராணுவ வாதத்திலும் சிங்களப்பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித்திளைத்த தீவிரவாத சக்திகளுடன் அதிகாரக்கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால், ஒரு தெளிவான கொள்கைத்திட்டத்தின் அடிப்படையிற் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்த நிலை. அரச கூட்டணிக்குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மையானது, மிகவும் சாதுரியமான முறையில் சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்பு செய்யப்பட்டு வருகின்றது.

ரணில் விக்கிரமசிங்கா அரசாங்கத்துடன் நாம் நிகழ்த்திய பேச்சுவார்த்தையின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக்கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்தோம். அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து உடன் பேச்சுக்களைத்தொடங்கலாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமை ஆதரிக்கின்றது. ஆனால் எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகையான இடைக்கால நிர்வாக அமைப்பும், ஒரு நிரந்தரமான தீர்வுத்திட்டத்தின் இணை பிரியாத அங்கமாக அமைய வேண்டும் என வலியுறுத்துகின்றது. நாம் ஓர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டி நிற்க, சந்திரிகாவின் அரசு, இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு பற்றிப்பேச விரும்புகின்றது.

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெற வேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நீண்ட காலமாக தொடர்ந்த கொடிய போரினாற் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப்பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். பல்லாயிரக் கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள். போரினாற் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந்தொகையில் நிதி உதவி செய்ய முன்வந்துள்ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும் அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக்கட்டியமைக்கவும் தகுந்த அதிகாரங்களுடன் வடகிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

போர் நிறுத்தம் செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள் வரை பேச்சுக்களை நடத்திய போதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச்சென்றடையவில்லை. தாங்க முடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப்பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கி வருகின்றது. முதலில், உடனடியாகத்தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன் வைத்த யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பித்து வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாக்கக்கட்டமைப்பை நிறுவ வேண்டுமென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோசனைகளிற் சில சர்ச்சைக்குரியவையாகத் தென்பட்டால் அவை பற்றி பேச்சுவார்த்தை மேசையில் விவாதித்து தெளிவுபடுத்திக்கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக்கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச்செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப்பிரச்சினைக்கான நிரந்தரதீர்வு பற்றி பேச்சுக்களை நடத்தலாம் என்பதே எமது நிலைப்பாடு. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தயாகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக்கருத்திற்கொண்டே நாம் இக்கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பது பற்றிப்பேச வருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகின்றார். எந்த வடிவத்திலான இடைக்கால நிர்வாகத்திட்டமும், முழுமையான நிரந்தரத்தீர்வுத்திட்டத்தின் அங்கமாக அமைய வேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என அவர் வலியுறுத்துவதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். முதலாவதாக அரசு கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் தீவிரவாத இனத்துவேசச் சக்திகளை திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத்திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பியினரைச் சமாதானப்படுத்தும் நோக்கமாக இருக்கலாம். இரண்டாவதாக தமிழரின் தேசிய இனப்பிரச்சினையை தீர்ப்பதில் உண்மையான அக்கறை கொண்டவர் போன்று சர்வதேச சமூகத்திற்கு ஏமாற்றுவித்தை காட்டுவதற்காக இருக்கலாம். மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப்பிரச்சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கிற் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம். இப்படிப்பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றை மட்டும் நாம் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது சந்திரிகா அம்மையாரின் முரண்பட்ட, நிலைப்பாடுகளைப் பார்க்கும்பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்கால தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்.

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டிக்கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விவரிக்கவிரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத்தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்திற் புதைந்து கிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக்கூட்டாட்சி என்றும் காலங்காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள், ஒப்பந்தங்கள் செய்து ஏமாற்றப்பட்டு, வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப்பாதையில் மீள் நடைபோட எமது விடுதலை இயக்கம் தயாராக இல்லை.

சிங்களப்பௌத்த பேரினவாதச் சகதிக்குட் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒரு போதும் புரிந்து கொள்ளப்போவதில்லை. சிங்களத்தேசத்தின் பிரதான அரசியற் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்க தயாராக இல்லை. வடகிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத்தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக்கட்டமைப்பைக்கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ தமிழீழ மக்களுக்குப் பிரிந்து செல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத்தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு அவற்றை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒரு புறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கின்றது. இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக்கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத்தலைமை வகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பது பற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகின்றது. ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர் கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக்கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின்றது. அதாவது, தமிழ் மக்களது இனப் பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக்கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகார பூர்வமாக பகிரங்கப்படுத்துங்கள்.

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாஷைகள் குறித்துத் தெளிந்த பார்வையும், நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால் எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமுண்டு. அல்லாத பட்சத்தில், நிரந்தரத்தீர்வு குறித்துப்பேசுவதில் அர்த்தமில்லை. தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டு குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்களுக்கு நிரந்தரமான தீர்வு கிடைக்கப் போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத்திட்டம் ஒன்றை முன் வைத்தோம். எமது மக்களின் வாழ்க்கைத்தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத்திட்டத்தை முன்வைத்து, பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால் சந்திரிகாவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராகரித்து, நிரந்தரத்தீர்வு என்ற சாக்குச்சொல்லி, சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டு வருகின்றது. சமாதானத்தின் விரோதிகளையும் இனவாதசக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையும் தனது கூட்டாட்சித்திரைக்குள் மூடி மறைத்து, விடுதலைப் புலிகள் மீது வீண் பழி சுமத்த முனைகின்றார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச்சர்வதேச சமூகம் அடையாளம் கண்டு கொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

இடைக்காலத்தீர்வுமின்றி, நிரந்தரத்தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக்கிடக்க முடியாது. சிங்களத்தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதேசமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங்கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி எதிர்காலச்சுபிட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகளுள்ளன. அந்த எல்லைக்கோடுகளை நாம் அடைந்து விட்டோம். இந்த நெருக்கடியான சூழ் நிலையிற் சிறீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந்தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுகின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச்செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத்தவிர எமக்கு வேறுவழியில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையிற் சமாதானப்பேச்சக்களை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசிற்கு அழுத்தம் கொடுக்குமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மக்களின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர்களை நினைவு கூரும் இப்புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக் கனவை, எத்தகைய இடர்கள், சவால்களை எதிர் கொண்ட போதும் நிறைவு செய்வோமென நாம் உறுதி பூணுவோமாக.

(வே.பிரபாகரன்)
தலைவர்,
தமிழீழ விடுதலைப்புலிகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த பொருளாதாரத்தில் முன்னணியில் விளங்கும் சிங்கப்பூர்!



## இலங்கை எங்கே?

இலங்கைத்தீவைவிட 101 மடங்கு சிறியநாடு சிங்கப்பூர். சிங்கப்பூர் என்றதீவுடன் சுமார் 60 சிறிய தீவுகள் கொண்டநாடு சிங்கப்பூராகும். இதன் அமைவிடம் தென்கிழக்கு ஆசியவாகும். சிங்கப்பூர் பூமத்திய கோட்டில் இருந்து வடக்கே சுமார் 137km இல் உள்ளது (அகலாங்கு 1°09' – 1°29'N, நெட்டாங்கு 103°38' - 104°25'E). பிரதான தீவு 42Km நீளமும், 23Km அகலமும் கொண்டது. அனைத்துத்தீவுகளுடன் மொத்தப்பரப்பளவு 646.1 சதுர கிலோமீற்றராகும். வடக்கே மலேசியாவும், தெற்கே இந்தோனேசியாவும் அமைந்துள்ளன.

**சிங்கப்பூர் பொருளாதாரத்தில் முக்கியம்வாய்ந்த தீவுகள்**

| இடங்கள் | பரப்பளவு (ha) |
|---|---|
| Pulau Tekong | 2,426.60 |
| Pulau Ubin | 1,092.20 |
| Sentosa | 332.8 |
| Pulau Bukum | 144.9 |
| Pulau Merlimau | 101.6 |
| Pulau Ayer Chawan | 169.2 |

சிங்கப்பூர் மூன்று பௌதிக நிலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது. எரிமலையினால் ஏற்பட்ட கற்பாறைகள் கொண்ட மத்திய மேட்டுநிலம், மேற்கு பகுதியான வண்டல் வீழ்படிவு கொண்ட நிலப்பகுதி, கிழக்குப் பகுதியாக கற்றோங் இல் இருந்து ஷங்கி வரையுள்ள மணல்–கற்கள் உடைய தரைமட்ட இடங்கள் ஆகும்.

இங்கு 76.7% சீனர்களும், 14% மலே மக்களும், 7.9% இந்தியர்களும், மற்றவர்கள் 1.4 ஆகவும் உள்ளார்கள். மதங்களாக புத்தமதம் (சீனர்கள்), இஸ்லாமிய மதம் (மலேயர்கள்), கிறிஸ்தவம், இந்து, சீக், சீன தத்துவவாதிகளைத்தழுவியமதங்களாக Confucianist, Taoist என்பனவும் பின்பற்றப்படுகின்றன. அரசகரும மொழியாக சீன மொழி, தமிழ் மொழி, ஆங்கிலமொழியும் தேசிய மற்றும் அரசகரும மொழியாக மலேமொழியும் விளங்குகின்றன. வியாபார, அரசியல் செயற்பாடுகளுக்கு ஆங்கிலமொழி பயன்படுத்தப்படுகிறது. சிங்கப்பூரின் கல்வி அறிவு 93.2 சதவீதமாகவுள்ளது.

1819ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியின்கீழ் வர்த்தக சந்தையாக சிங்கப்பூர் உட்படுத்தப்பட்டிருந்தது. 1963 ஆம் ஆண்டு மலேசியாவுடன் இணைந்த சிங்கப்பூர் இரண்டு ஆண்டுகளில் தனிநாடாக சுதந்திரம் பெற்றது (9/08/1965). ஆசிய நாடாக இருந்த போதும் மேற்குலக நாடுகளுக்கு ஈடாக தனது பொருளாதார விருத்தியை மிக வேகமாக வளம் பெறவைத்ததுடன் சர்வதேச அரங்கில் திறந்த பொருளாதாரக் கோட்பாடுகளுடன் சந்தைப்படுத்தலில் மேலோங்கியும் வளர்ந்துள்ளது. சிங்கப்பூர் திறந்த பொருளாதார சந்தைப்படுத்தலில் வெற்றி கண்ட நாடாகும். ஆள்வீதவருமானத்தில் உலகில் முன்னணியில் நிற்கும் நாடுகளில் சிங்கப்பூரும் ஒன்றாகும். இறக்குமதி செய்யப்படும் மூலப்பொருட்களை தயாரிப்புப் பொருட்களாக்கி ஏற்றுமதி செய்து வருவதானது அங்குபெரும் பொருளாதார நிலையை ஏற்படுத்தி நிற்கிறது. குறிப்பாக இலத்திரனியல், மின்சார உபகரணங்கள், தயாரிப்புக்கள் முன்னணி உற்பத்திப் பொருட்களாகும். தொழிற்சாலைகளாக இலத்திரனியல் (Electronic), இரசாயனவியல், நிதித்துறை, எண்ணெய் சுத்திகரிப்பு, இறப்பர் தயாரிப்பு/பதனிடல், உணவுகள் பொதியில் அடைத்துப்பதனிடல், கப்பல் திருத்த வேலைப்பாடுகள் என்பன காணப்படுகின்றன.






விவசாய உற்பத்திகளாக இறப்பர், கொப்றா, பழத்தோட்டங்கள், காய்கறிகள், கோழிவளர்ப்புத் திட்டங்கள், முட்டை, மீன்வளம் மற்றும் அலங்கார மீன்தொட்டிகளுக்கான மீன்வளர்ப்பு என்பன உள்ளன.

உற்பத்திப்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளாக மலேசியா, கொங்கொங், ஜப்பான், சீனா, தாய்வான், தாய்லாந்து, தென்கொரியா, நெதர்லாந்து, ஜேர்மனி அடங்குகின்றன.

இலங்கை ஒரு சிறியநாடு அதை துண்டு போடல் ஆகாது என்ற கருத்தை பிழையாக்கும் விதத்தில், நூறில் ஒருமடங்கு சிறிய நாடான சிங்கப்பூர் முன்னுதாரணமாகவுள்ளது. இலங்கையில் குறிப்பாக வடக்கு–கிழக்கு மக்களின் பொருளாதாரவிருத்தியும், தொழில்நுட்ப தொடர்பாடல் துறையில் அறிவு மேம்பாட்டு நிலையும் –எதிர்காலத்தில் சிங்கப்பூரைவிட பலமடங்கு செல்வந்த நாடாக ஈழம் கொழிக்க வாய்ப்புக்கள் அதிகம் என்பதைக்காட்டுகின்றது. புலம்பெயர் மக்களின் ஒன்றிணையும் பொருளாதாரக் கட்டுமாணங்கள் இதற்கு பதில் சொல்லும் காலம் மிகவிரைவில் உள்ளது.

சிங்கப்பூர் நாட்டுக்கு எம்மவர்கள் சென்று பல துறைகளிலும் வேலைவாய்ப்புக்களைப் பெற்று வருகிறார்கள். குறிப்பாக பொறியியல், மருத்துவம், வியாபாரம் போன்ற துறைகளிலும் மற்றும் தொழிற்சாலை வேலைகளுக்கும், கட்டட நிர்மாண வேலைகளுக்கும், சென்று குறைந்த வருமானத்தை பெற்று வருவதும் காணக்கூடியதாகவுள்ளது. பொருளாதார விருத்திகள் இலங்கையில் ஏற்படும் வரைக்கும் மக்கள் தங்கள் குடும்பவாழ்வுக்காக பல பிரச்சினைகளுடன் மத்திய கிழக்கு, அரேபிய மற்றும் சிங்கப்பூர் நாடுகளில் குறைந்த ஊழியத்துடன் வேலைசெய்து வருவதற்கு இலங்கையின் தாழ்ந்த பொருளாதாரத் திட்டத்துடனான அரசியற்போக்குகளே முக்கிய காரணிகளாகும்.

### சிங்கப்பூரில் தலைநிமிர்ந்த யாழ்–தமிழர்

1915ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பிறந்த திரு.சின்னத்தம்பி இராசரத்தினம் தனது பாடசாலை பருவத்தில் தந்தையாரின் உத்தியோகத்துடன் மலேசியாவுக்கு சென்றார். அங்கு தனது இளமைக் கல்வியை கற்ற அவர் 1937ஆம் ஆண்டு இலண்டனுக்கு சட்டப்படிப்புக்காச் சென்ற அவர் அரசியல் படிப்புக்களிலும் நாட்டம் கொண்டு பிரித்தானிய ஆக்கிரமிப்பு அரசியலுக்கு எதிரான அணியிலும் தன்னை இணைத்துக்கொண்டார் (anti-British political club). இக்காலகட்டத்தில் சிங்கப்பூருக்கும் இங்கிலாந்துக்கும் இடையில் இருந்த தொடர்புகள் இரண்டாம் உலகப்போரின் தாக்கத்தினால் துண்டிக்கப்பட்டிருந்தது. இதனால் இவரின் படிப்புச் செலவிற்கான பணத்தை தந்தையால் அனுப்ப முடியாது இருந்தது. தொடர்ந்து இவர் தனது படிப்பைத் தொடரமுடியாத நிலையில் பத்திரிகை நிருபராக வேலைசெய்து தனது வாழ்க்கைச் செலவை சமாளித்தார். 1948ஆம் ஆண்டு சிங்கப்பூருக்குத் திரும்பிய இவர் அங்கு Straits Times பத்திரிகை உற்பட பலதரப்பட்ட பத்திரிகைகளில்

**சிங்கப்பூர் நாட்டின் தேசிய மொழிகளாக 4 மொழிகள் உள்ளன**

**சீனமொழி (Mandarin), மலேமொழி (Malay), தமிழ்மொழி (Tamil), ஆங்கிலமொழி (English)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சின்னத்தம்பி இராசரத்தினம்

வேலைசெய்தார். 1959ஆம் ஆண்டு சிங்கப்பூரின் காம் போங் கிலாம் என்ற இடத்தில் தேர்தல் வேட்பாளராக நின்று வெற்றிபெற்றார்.

## சிங்கப்பூரின் தேசிய கீதத்தை எழுதிய யாழ்-தமிழர்

இராசரத்தினம் அவர்கள் பல இனமக்கள் ஒன்றாகச் சேர்ந்து வாழும் சிங்கப்பூரை உருவாக்குவதில் திட காத்திர நம்பிக்கைவைத்துச் செயற்பட்டார். சிங்கப்பூரில் 1964களில் எழுந்த இன வேறுபாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாக இனத்துவேச வாதிகளை தடுக்கும் சிந்தனையில் அவர் 1966 ஆம் ஆண்டு முதல் முறையாக சிங்கப்பூரின் தேசிய கீதத்தை இயற்றி எழுதினார் "ஒன்றுபட்ட ஐக்கிய மக்கள்" என்ற கருத்தை முன்வைத்து இன, மத, மொழி வேறுபாடு களைக் கடந்த சிந்தனையுடன் எழுதப்பட்ட தேசியகீதம் இதுவாகும்.

## சிங்கப்பூரின் தேசிய கீதம்
## முன்னேறட்டும் சிங்கப்பூர்

சிங்கப்பூர் மக்கள் நாம்
செல்வோம் மகிழ்வை நோக்கியே
சிங்கப்பூரின் வெற்றிதான்
சிறந்த நாட்டமே

ஒன்றிணைவோம் அனைவரும்
ஓங்கிடும் புத்துணர்வுடன்
முழங்குவோம் ஒன்றித்தே
முன்னேறட்டும் சிங்கப்பூர்
முன்னேறட்டும் சிங்கப்பூர்

சிங்கப்பூரின் People's Action Party (PAP) என்ற கட்சிக்கு முதல் தடவையாக அமைச்சராக நியமிக்கப்பட்டு, சிங்கப்பூர் சுதந்திரநாடாக வருவதற் கான சட்டதிட்ட யாப்பை எழுதும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டார். 1959 ஆம் ஆண்டு கலாசார அமைச்சராக நியமிக்கப்பட்டார். அதனைத் தொடர்ந்து 1965ஆம் ஆண்டு வெளிவிவகார அமைச்சராகவும், 1968–71 இல் தொழில் அமைச்சராகவும், 1973இல் இரண்டாம் பிரதிப் பிரதம மந்திரியாகவும் இறுதியாக 1988இல் மூத்த அமைச்சராக இருந்து ஓய்வு பெற்றவர் இவர். இவரின் சேவை சிங்கப் பூருக்கு மிகையாகாது.இலங்கைத்தமிழர் ஒருவர் வேற்றுநாட்டுக்குச் சென்று அந்நாட்டை வளம்பெற வைத்தமைக்கு அந்நாட்டு அரசியற் சட்டத்தில் பரந்த மக்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட்டமையே முதன்மையான காரணமாகும் சிங்கப்பூர் மட்டுமல்ல உலகில் பல நாடுகளும் மனித நேயத்திற்கு மதிப் பளித்து உரிமைகளை வழங்கி வருகின்றன. ஆனால் இலங்கையில் பிறந்த இலங்கையருக்கு கொடுக்கப்படும் உரிமைகளையும் இங்கு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டும். இலங்கையில் வாழும் ஆயிரக்கணக்கான இந்திய வம்சாவளித் தமிழருக்கு இலங்கை அரசினால் கொடுக் கப்பட்டிருக்கும் உரிமைகள் என்ன? இப்படிப்பட்ட தரம்பிரிக்கும் அரசாங்கமும், மக்களும் வாழும் நாட்டில் முன்னேற்றங்கள் வளம்பெற வேண்டுமானால் எல்லோரும் மனிதர்கள் என்ற அடிப்படையிலான புதிய சட்டப்பொதிகள் வரையப்பட வேண்டும். இலங்கை அரசியல்வாதிகளுக்கு இப்படியான திறன்கள் இருப்பதாக எண்ணினால் ஏமாற்றமே கிட்டும்.

சிங்கப்பூரில் மூலதனங்கள் குறைவாக உள்ள போதும் திறந்த சுதந்திர பொருளாதாரக் கொள்ளைகளினால் உலக நாட்டு நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளை பாரபட்ச மின்றி அங்கு முதலீடு செய்தமையினால் உலகசந்தையில் பொருளாதார முனைப்புகளில் வீறு நடைபோடுகிறது இன்று சிங்கப்பூர். இதே நிலையில் பரிதாபத்துக்குரிய இலங்கையை எடுத்துப் பார்த்தால் திறந்த பொருளாதாரத்தை மூடிவிடும் திட்டங்களை இன்றைய இலங்கை அரசு தீட்டி வருகிறது. அதாவது வெளிநாட்டு நிறுவனங்களுக்கும், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் காணி-நில வரிகளை 100% அரசுக்குச் செலுத்த வேண்டும் என்கின்ற பிற்போக்கான பொருளாதாரத்திட்டங்களை இயற்றி யுள்ளது. அறிவில்லாவிட்டால் மற்றவரைப் பார்த்து நட என்பார்கள். பார்த்தும் நடக்கத் தெரியாதவன் தீட்டும் திட்டங்கள் அணையை வெட்டி ஆற்றுக்குள் போடு வது போலாகும்.


இன்று திறந்த பொருளாதாரத்தினால் சிங்கப்பூர்மட்டுமல்ல உல்கில் பொருளாதார வலுவின் முதலிடத்தில் நிற்கும் ஐக்கிய-அமெரிக்கா, 25 நாடுகள் சேர்ந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியம் (EU), ஜப்பான் போன்ற நாடுகளின் உச்சக்கட்ட பொருளாதார நிலைக்கு திறந்த பொருளா தாரமே காரணியாகிறது. குறிப்பாக 2000ஆம் ஆண்டு வரை உள்நாட்டு உற்பத்தி என்ற கொள் கையில் இருந்த இந்தியாவுக்கு, மற்றைய நாடுகளின் திறந்த பொருளாதாரத் திட்டங்களினால் எழுந்த முன்னேற் றங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தனது பொருளா தாரத் திட்டங்களை திறந்த பொருளாதாரக்கொள்கை யாக்கியது இந்தியா.

1978ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த பன்முகப்படுத் தப்பட்ட பொருளாதாரத்திட்டங்களை இன்று மீண்டும் கொண்டுவர நினைக்கும் இலங்கை அரசு இன்றைய உலகப்பொருளாதார நுட்பங்களை அறியாத பகடையாக இருப்பது கேலிக்கூத்தாகவும் கவலை தரும் விடய மாகவும் உள்ளது. அரசாங்கமே இப்படி கீழ்த்தனமான பொருளாதாரத் திட்டத்தைத் திணித்தால் மக்கள் எப்படி அபிவிருத்தியடைய முடியும்? மாறாக வேற்று நாட்டுக்கு அடிமைகளாகத் திரியவேண்டிய நிர்ப்பந்தத்திற்கே தள்ளப்படுவர். வாழ்க்கைத்தரத்தில் உலகில் 17ஆம் இடத்தில் சிங்கப்பூர் விளங்குகிறது.

| பிரதான மூலப்பொருட்கள் | ஏற்றுமதி Billions $ | இறக்குமதி Billions $ |
|---|---|---|
| இயந்திர - தளபாடங்கள் | 78.6 | 69.2 |
| தாது எரிபொருட்கள் | 12.6 | 14.6 |
| இரசாயனம் | 9.9 | 6.8 |
| உற்பத்திப்பொருட்கள் | 5.3 | 8.5 |
| உணவுவகைகள் | 2.6 | 4.0 |

### சிங்கப்பூர் பற்றிய புள்ளி விபரங்கள்

| | |
|---|---|
| பரப்பளவு | 646 sq km |
| பொருளாதார வலு | $ 85.6 Billion |
| நாணயம் | சிங்கப்பூர் டொலர் (S$) |
| சனத்தொகை | 4,608,595 (July 2003 est.) |
| தலைநகரம் | சிங்கப்பூர் |
| ஆள்விகித வருமானம் | $24,000 - GDP |
| பணவீக்கம் | -0.40% |
| பிறப்பு விகிதம் | 10.8 |
| இறப்பு விகிதம் | 5.2 |
| விவசாயம் | 0.20% |
| உற்பத்தி | 32.30% |
| தயாரிப்புக்கள் | 23.60% |
| சேவைகள்-(Services) | 67.50% |
| ஏற்றுமதி | 173% |
| இறக்குமதி | -152% |
| வேலையில்லாத்திண்டாட்டம் | 4.20% |
| சராசரி வெப்பநிலை | 27.3°C / 81.1°F |
| வருட மழைவீழ்ச்சி | 2272.2mm / 89.5" |



அதிகூடிய வாழ்க்கைத்தரமுடைய நாடாக உலகில் இன்று முன்னிலையில் நிற்பது ஜப் பானாகும். ஆள்விகித வருமானத்தைப் பார்க்கும் போது (US$26,500 - GDP) ஆகவுள்ளது. மேலதிக சில தகவல்கள்: 2000 ஆண்டுக்கணிப்பின்படி வானொலி அலைவரிகைகள்: 16 FM அலை வரிசைகள், சிற்றலைகள்–2, தொலைக்காட்சி நிலை யங்கள் 6, நாட்டிலுள்ள மொத்த தொலைக்காட்சிகள் 1.33 மில்லியன், மின்னஞ்சல் பாவிப்பவர்கள் 2.31 மில்லியன். தொடர் உந்துப்பாதை (Railways) 38.6 km மட்டுமே. பிரதான வீதி (Highway) 3,150 km களும், கப்பல்த்துறைமுகம் சிங்கப்பூராகவும், சிங்கப் பூருக்குச் சொந்தமாக மொத்தக்கப்பல்கள் 859 உள்ளது.

9 விமானநிலையங்களும் அதற்கான ஓடு பாதை களாக 914m - 3,047m வரையாக 9 ஓடுபாதைகள் உள்ளன. இராணுவப்பிரிவுகளாக இராணுவம், கடற் படை, விமானப்படை, மக்கள் பாதுகாப்புப்படை, மற்றும் பொலிஸ் பாதுகாப்புப்படையும் உள்ளது.

15வயதுக்கும் 49 வயதுக்கும் இடைப்பட்ட இராணுவம் மொத்தமாக 1,012,498 வரையுள் ளார்கள். சின்னச்சிங்கப்பூரைப்பார்த்து வெட்கித் தலை குனியும் இலங்கைக்கு பொருளாதார கட்டு மானங்கள் முன்னெடுக்கப்பட வேண்டுமென்றால் மனிதன் என்ற அடிப்படையில் பொருளாதார முன்னெடுப்புக்களை அடிப்படையாக வைத்த புதிய அரசியல் யாப்புக்களை உருவாக்க வேண்டும். இதற்கு பெரும்பான்மை வழி தராவிட்டால் மற்றுமோர் சிங்கப்பூர் ஆசியாவில் தலை எடுப்பதை தடுக்கமுடியாது. அரசியல் சக்திகளை பொருளா தார மேம்பாடு முறியடிக்கும் சகாப்தம் இது.

K. SriDavi, Vavuniya



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் மொழியாகத் தமிழைக் கற்பித்தல்



ஆ.கந்தையா

இலங்கை -களனிப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத்தலைவராகவும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தமிழ்மூத்த விரிவுரையாளராகவும், இலண்டன் மற்றும் சிட்னி பல் கலைக்கழகங்களில் தமிழை இரண்டாம் மொழியாக கற்பித்து அனுபவம் பெற்றவருமாகிய கலாநிதி ஆ.கந்தையா அவர்கள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழ் பிள்ளைகளுக்கு தமிழை இரண்டாம் மொழியாக கற்பித்தல் பற்றி தனது அனுபவங்களையும், கருத்துக்களையும் 2002 ஆம் ஆண்டில் மலேசிய மகாநாட்டில் வழங்கியிருந்தார். மிகவும் காத்திரமான அவரது சிந்தனையை தமிழ் உலகம் - லண்டன் வாசகர்களுக்கு இப்பொழுது அவுஸ்திரேலியாவில் வாழும் அவரது அனுமதியோடு தருகின்றோம்.

தமிழ் வழங்கும் இந்தியா,இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளைத் தவிர தமிழர்கள் இன்று உலகில் பல நாடுகளில் வாழ்கின்றனர். பிரித்தானியா, கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள் ஆகியவற்றில் வாழ்கின்ற தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாகும். தமிழர்கள் இல்லாத நாடுகள் எதுவும் இல்லை என்றே கூறலாம். 1983 ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக் கலவரத்தின் பின்னர், தமிழர்களும் தமிழ் மொழியும் அனைத்துலக அரங்கில் தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளன என்று கூறினால் அது மிகையாகாது.

தமிழ் அமைப்புகள் வாயிலாக 1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் என்னால் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்கு அமைய அவுஸ்திரேலியாவில் ஏறக்குறைய 30,000 தமிழர்கள் வாழ்ந்தனர் எனத்தெரிய வந்தது. ஆனால் 1996 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசாங்க குடித்தொகை மதிப்பீட்டுக்கு அமைய, அவுஸ்திரேலியாவில் 18,690 தமிழர்கள் மட்டுமே வாழ்ந்தனர். "குடி மதிப்பீட்டுப்படிவத்தில் வீட்டில் பேசும் மொழி 'தமிழ்' என்று குறிப்பிடுவோர் மட்டுமே 'தமிழர்கள்'' என்று அரசாங்கக் குடித்தொகை மதிப்பீட்டில் கணிப்பிடப்படுவர். 'ஆங்கிலம்' என்று குறிப்பிடும் தமிழர்கள் 'ஆங்கிலம் பேசும் அவுஸ்திரேலியர்' என்றே கணிக்கப்படுவர். எனவே, "வீட்டில் தாய் மொழியில் பேசுங்கள்'' என்றே அவுஸ்திரேலிய அரசு கூறுகின்றது! ஆனால் தமிழர்களுள் பலர் வீட்டில் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். குடித்தொகை மதிப்பீட்டுப்படிவத்திலும் வீட்டில் பேசும் மொழி 'ஆங்கிலம்' என்றே குறிப்பிட்டு விடுகின்றனர்.

## தாய்மொழி ஆங்கிலமா. தமிழா?

புலம் பெயர்ந்து ஆங்கிலம் ஆட்சி மொழியாகவுள்ள வெளிநாடுகளில் வாழும் தமிழ்ப்பிள்ளைகளின் தாய் மொழி ஆங்கிலமா? தமிழா? ஆட்சி மொழி ஆங்கிலமாகவுள்ள சூழலிலேயே தமிழ்ப்பிள்ளைகள் பிறந்து வளர்கின்றனர், வாழ்கின்றனர். வீட்டிலும் வெளியிலும் பெரும்பாலானோர் ஆங்கிலத்திலேயே பேசுகின்றனர். ஆங்கிலத்திலேயே சிந்தித்து செயலாற்றுகின்றனர். பள்ளியில் பாடங்களை ஆங்கிலமொழி மூலம் கற்கின்றனர். தமிழ் வகுப்புகளிலும் ஆங்கிலத்தில் பேசுகின்றனர். தமிழில் பேசுவதையும் தமிழில் சிந்திப்பதையும் காணவே முடியாது. தமிழில் வினவினால் ஆங்கிலத்தில் விடையளிக்கின்றனர். இவர்களின் தாய்மொழி ஆங்கிலமாகும்.

ஆட்சி மொழி ஆங்கிலமாக இருப்பினும் சில பிள்ளைகள் வீட்டில் தமிழிலேயே பேசுகின்றனர். தமிழிலே சிந்தித்து செயலாற்றுகின்றனர். பள்ளியில் பாடங்களை ஆங்கில மொழி மூலம் கற்றாலும், தமிழ் வகுப்புகளில் தமிழிலேயே உரையாடுகின்றனர். தமிழில் வினவினால் தமிழில் விடையளிக்கின்றனர். தமிழில் பேசுபவர்களுடன் தமிழிலேயே பேசுகின்றனர். இவர்களின் தாய்மொழி தமிழ் ஆகும்.

எனவே ஆங்கிலம் ஆட்சி மொழியாகவுள்ள நாடுகளில் தமிழைத்தாய் மொழியாகக்கொண்ட தமிழ்ப்பிள்ளைகளும், ஆங்கிலத்தை தாய்மொழியாகக்கொண்ட தமிழ்ப்பிள்ளைகளும் இருக்கின்றனர்.

## தமிழ் பேசாதவர்களுக்கான கற்பித்தல் முறைகள்

அனுபவம் மிக்க தமிழ்ச் சிறப்பாய்வறிஞர்களும், மொழி வல்லுநர்களும் தமிழர்கள் அல்லாதார்க்கு தமிழ் கற்பிப்பதற்கான சில முறைகளை முன்வைத்துள்ளனர். இலண்டன் பல்கலைக்கழக ஆப்பிரிக்க கீழைத்தேய கற்கைகள் பள்ளியிலும் சிட்னி பல்கலைக்கழகத்திலும் பயன்படுத்தப்பட்ட கற்பித்தல் முறை மூன்று படிமுறைகளைக் கொண்டது.

முதலாம் படிமுறை: தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தாமல் ஆங்கில எழுத்துக்களைத் தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்புக்கு ஏற்ப உருப்பெயர்த்த வாக்கியங்களைப் பயன்படுத்திக் கற்பித்தல். (சென்னை பல்கலைக்கழக Tamil Lexicon இல் உள்ள முறை).

எடுத்துக்காட்டு: Unkal@ peyar enna?
(What is your name?)

இரண்டாம் படிமுறை: தமிழ் எழுத்துக்களாலான வாக்கியங்களையும் உருப்பெயர்த்து எழுதிய ஆங்கில எழுத்துக்களாலான வாக்கியங்களையும் பயன்படுத்திக் கற்பித்தல்.

எடுத்துக்காட்டு: உங்கள் அண்ணா பெயர் என்ன?

Unkal@ an@n@a peyar enna?
'What is your older brother's name'

மூன்றாம் படிமுறை: தமிழ் எழுத்துக்களை மட்டும் பயன்படுத்திக் கற்பித்தல்.

எடுத்துக்காட்டு: உங்கள் முழுப்பெயர் என்ன?

'What is your full name'

மாணவர்களின் முன்னேற்றத்திற்கு ஏற்ப ஒவ்வொரு படிமுறையிலும் இடம்பெற வேண்டிய பாடங்களின் எண்ணிக்கையை ஆசிரியர் தீர்மானித்துக் கொள்ளலாம்.

## அவுஸ்திரேலியாவில் தமிழ்க்கல்வி நிலையங்கள்

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் எட்டுத் தமிழ்க்கல்வி நிலையங்களில் சனிக்கிழமைகளில் தமிழ் மொழி கற்பிக்கப்படுகின்றது. இந்நிலையங்களில் ஏறக்குறைய 650 மாணவர் வரை தமிழ் மொழியைக் கற்கின்றனர். ஆனால் 1996 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரசாங்கக் குடித்தொகை மதிப்பீட்டுக்கு அமைய 2,750க்கும் அதிகமான பிள்ளைகள் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் தமிழைக்கற்க வேண்டும். எனவே கிட்டத்தட்ட காற்பங்கு தொகையான தமிழ்ப் பிள்ளைகளே தமிழைக் கற்கின்றனர். நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் தொழில் காரணமாகத் தூரமான இடங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக் கம்பன் கழகம் நடாத்திய இசை வேள்வி (2004)



கொழும்புக் கம்பன் கழகம் ஆண்டு தோறும் நடாத்துகின்ற 'ஸ்ரீ ராம நாம கானாமிர்தம்' இசை வேள்வி நவம்பர் 6-13 ஆம் திகதி வரை கொழும்பு , வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்றது.











1 ஆம் நாள் நிகழ்வில் ஆரம்ப நிகழ்ச்சியாக திரு.எம். பஞ்சாபிகேசன் , திரு. எம்.பி. நாகேந்திரம் ஆகிய இருவரினதும் நாதஸ்வரக்கச்சேரி இடம்பெற்றது. சௌராஷ்ர இராகத்திலமைந்த ஸ்ரீ கணபதி என்ற க்ருதியுடன் கச்சேரி அரம்பமாகியது. சுத்தம், இராக, லய சுத்தத்துடன் மிகவும் அநாயாசமாக வாசித்தனர்.மகனுக்கு அதிக உரிமை கொடுத்த பஞ்சாபிகேசனை பாராட்டியே ஆக வேண்டும். இளம் தலைமுறைக்கே முன்னுரிமை கொடுத்த அவரது இப்பண்பு போற்றுதற்கரியது. தவில் வாசித்த தெட்சணாமூர்த்தியின் மகன் உதய சங்கரின் கையில் ஜதிகள் மிகவும் சரளமாகவும் தெளிவாகவும் இருந்தது காணக்கூடியதாகவும் கிரகிக்க ஆழமானதாகவும் அமைந்திருந்தது. சதீஸ் குமாரும் அவருக்கு அனுசரணையாக வாசித்து கச்சேரியை மிகவும் சிறப்படையச் செய்தார்.

தொடர்ந்து திருமதி சுதா ரகுநாதனின் இசை நிகழ்ச்சி இடமபெற்றது. இயற்கை அழகு, சிறந்த ஆழ்ந்த இசை ஞானம், நல்ல குரல் வளம், குருபக்தி யாவையும் ஒருங்கே அமைய்பபெற்றவர் சுதா ரகுநாதன். எல்லாவிதமான இசை நுணுக்கங்களும் (ஸ்ருதி, சுத்தம், லய சுத்தம்,பாவம், ப்ருக்காக்கள்) ஒருங்கே அமையப்பெற்றிருந்தமை சிறப்பம்சம் கணீர் என்ற குரலுடன் ஒவ்வோர் உருப்படிகளையும் தனக்கே உரிய பாணியுடன் அவ்வவ் இராகங்களுக்குரிய உயிர் நிலையில் மிகத்தெளிவாகப்பாடினார்.

தமிழ், தெலுங்கு, மலையாளம், சமஸ்கிருதம் எனப் பல மொழிகளிலும் பாடிக் கச்சேரியையும் சபையையும் கவர்ந்தார். இறுதியில் சபையோர் விரும்பிக் கேட்ட துக்கடாக்கைளயும் கூவி அழைத்தால்(வலஜி), காற்றினிலே வரும் கீதம், சாயிபாபா பாடல் யாவும் மிகவும் நன்றாக அமைந்திருந்தன.

ஆரம்பம் தொட்டு இறுதி வரை வயலின், மிருதங்கம், வாசித்த இருவரும் மிகவும் அனுசரணையாகவும் வயதிலும் கூடிய ஞானத்தின் வெளிப்பாடுகளையும் கேட்க முடிந்தது. பாடுபவருக்கு மிகவும் ஒத்துழைப்புக் கொடுத்து கச்சேரியை நன்கு களைகட்டச் செய்தார்கள்.ஒரு பிரதி மத்திம இராகங்களும் கையாளப் படவில்லை என்பதுதான் குறை. அது கூட அவரது கச்சேரியை தொய்வுபட விடவில்லை. இவரது கச்சேரி அனைவரையும் கவர்ந்திருந்தது. 2 ஆம் நாள் நிகழ்வில் முதலாவதாகப்பாடிய திருமதி. மீனாட்சி வெங்கடேசன் கச்சேரியை ஸ்ரீ இராக வர்ணத்துடன் ஆரம்பித்தார். நல்ல சாரீரம் படைத்த இவர் மிஸ்ரசாபு தாளத்தில் கூடிய உருப்படியை பாடினார். மனோ தர்மப் பகுதியில் தனது இசைப் புலமையை காட்டத்தவறி விட்டார். உருப்படிகளைக் குறைத்து சற்று இப்பகுதியிலும் கவனம் செலுத்தியிருக்கலாம். சமஸ்கிருத பாஷையைக்கையாண்டு. பாடிய விதம் நன்றாக இருந்தது. அவருக்கு வயலின் வாசித்த திரு.என்.பாலமுரளி, மிருதங்கம் - மோர்சிங் வாசித்த வேணிலான், மெற்றாஸ் கஜன் ஆகியோர் மிகவும் அனுசரணையாக வாசித்துக் கச்சேரி நன்கு அமைய உதவினார்கள்.

தொடர்ந்து மேடையில் கம்பீரமாகத் தோன்றிய பூஷணி கல்யாணராமன், கானடா இராக அட தாள வர்ணத்துடன் கச்சேரியை ஆரம்பித்தார். மிகவும் தெளிவாகவும் அநாயாசமாகப்பாடி சபையோரின் வரவேற்பை பெற்றார். சரஸ்ச நாதம், ஸ்வரம் பாடும்போது சற்றுத் தடுமாறி விட்டார். எனினும், வயலின் கலைஞரின் அனுசரணையில் உரிய இடத்திற்கு வந்து விட்டார். இது அவரது குறையில்லை. பாடிய ராக மாலிகை ஸ்வரத்தின் தடுமாற்றமே.

ராகவேந்திரராவின் வயலின் ஸ்கந்த சுப்பிரமணயத்தின் மிருதங்கம் ரகுநாதனின் கடம், அவர்கள் மூவரின் திறமையான ஒத்துழைப்புடன் பூஷணி தனது இனிய காத்திரமான ப்ருக்காக்கள் நிறைந்த சாரீரத்தால் கச்சேரியை திறமையாகவே பாடினார்.

3 ஆம் நாள் நிகழ்வில் முதலில் பாடிய திருமதி. சங்கீதா கோகுலன், செல்வி அபர்ணா அருணாசலம் ஆகிய இருவரும் உருப்படியை சுத்தமாகப்பாடினர். இருவரது குரலும் சுருதி சுத்தமாக ஒன்றோடு ஒன்று இணைந்து கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருந்தது. இவர்களுக்கு பாலமுரளி வயலினும் வேணிலான் மிருதங்கமும் கஜன் மோர்சிங்கும் அனுசரணையாக வாசித்தார்கள். மனோதர்ம பகுதியில் மேலும் கவனம் செலுத்தினால் எதிர்காலம் நன்றாக அமையும்.

3 ஆம் நாள் சிறப்புக் கச்சேரியாக நெய்வேலி சந்தானகோபாலனது இசைநிகழ்ச்சி நடைபெற்றது. மேடையில் அமர்ந்து கச்சேரியை ஆரம்பித்தவிதமே ஓர் தெய்வீக உலகில் யாவரும் செல்வது போன்ற ஓர் உணர்வைத் தோற்றுவித்தது. கானடா இராக வர்ணத்துடன் கச்சேரி ஆரம்பமாகியது. ஆரம்பமே நன்கு களைகட்டத் தொடங்கியது.

தேவாரத்துக்கு நிரவல், ஸ்வரம் பாடுதல் என்பது மரபு முறையில் இல்லை. இவ் அம்சம் இவரது கச்சேரியில் புதியதோர் அம்சமாகத் தெரிகிறது.

நீலாம்பரி. சஹானா, ஆனந்த பைரவி, இராகங்களில் இராக மாலிகை ஸ்வரம் தனித்தனியாகவும் 4 இராகத்தை சேர்த்தும் மிக லாவகமாகவும் இராக அம்சம் தெரியும்படியும் அடுத்தடுத்து அநாயாசமாகப்பாடினார். அவரது இசைஞானம் அவருக்கேயுரிய பாணியில் அமைந்தது ஒன்றெனக்கூறின் ஏற்புடையதே.

- இசை ஆர்வலர்.

# நூல் வெளியீட்டு விழா

மட்டுவில் - ஞானக்குமரன் எழுதிய 'முகமறியா வீரர்களுக்கு்', 'வசந்தம் வரும் வாசல்' என்ற இரண்டு கவிதைத் தொகுப்புகளும் கௌதமன், தெய்சியா என்ற இரு சிறுவர்களின் பயண அனுபவத்தை தனது நடையில் வண்ணை தெய்வம் எழுதிய 'தாயக தரிசனம்' என்ற புத்தகமும் திருமறைக் கலாமன்ற பிரெஞ்சுக்கிளையினரால் பரிஸ் நகரில் வெளியிடப்பட்டது.

திரு. இசித்தோர் பெர்னான்டோ தலைமையேற்று வரவேற்க தமிழ்ப்பிரியா, திரு.காராளசிங்கம், திரு.யேசுரெட்ணம் ஆகியோர் உரையாற்றினர்.

தமிழ்ப்பிரியா: மட்டுவில் ஞானக்குமரனின் 'முகமறிய வீரர்களுக்காக' என்ற கவிதைத்தொகுப்பை அரை மணிநேரத்தில் மட்டும் ஆராய்ந்து விட்டு விமர்சன உரை வழங்கியிருந்தார். அது மிக ஆழமானதாக இல்லாத போதும் நறுக்குத் தெறித்தாற்போல் அமைந்திருந்தது. ஞானக்குமரனின் எழுத்து நடை அவரது முகத்தைப் போலவே சாந்தமுள்ளதாய் இருப்பதாயும் இதனால் வாசிப்பவர்களை ஆவேசமடையச்செய்யாமல் அடி மனது வரை சென்று சிந்திக்கச்செய்யும் தாய்மையுணர்வோடு கூறியபோது பலருக்கு "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" என்ற குறள் ஞாபகம் வந்திருக்கும்.

தாயக தரிசனம் பற்றி ஆய்வுரை வழங்க வந்த திரு.காராளசிங்கம் தலைவர் தலைமையுரையில் அது பற்றி அதிகம் பேசிவிட்டதால் வண்ணை தெய்வத்தின் கவிப்புலமையை புகழ்ந்து பல ஆங்கில உதாரணங்கள் காட்டி ஆங்கிலக்கவிகளோடு அவரை ஒப்பிட்டு இந்தப் புத்தகம் சிறுவர்களின் ஆக்கம். இது விமர்சனத்துக்குரியதல்ல. உற்சாகப்படுத்தப்பட வேண்டியது என்ற கருத்தைக்கூறி அமர்ந்தார். பள்ளி மாணவர்கள் சிறந்த ஊடகங்கள் என்று அவர் கூறிய மெய்யான ஒன்றுதான்.

திரு. யேசுரெட்ணம்: எல்லாம் நிறைவேறிற்று என்பது போல நூல்களைப் பற்றி எதுவும் கூறாமல் கண்ணதாசனை உதாரணம் காட்டி வலியோன் கவிஞன் ஆகிறான் என்றும் அந்த வல்லமைக்காக கவிஞர்களை வாழ்த்தி அமர்ந்தார்.

ஏற்புரையில் ஞானக்குமரன் , புத்தகம் வெளியிடதான் பட்ட இடர்பாடுகளைப் பகிர்ந்து கொண்டதோடு தனக்கு ஊக்கம் அளித்த அனைவரையும் நினைவு கூர்ந்து தனது சில கவிதைகள் பற்றியும் கூறினார். (வசந்தம் வரும் வாசம் 10 பிரதிகள் மட்டுமே கைவசம் இருந்தன.)


வண்ணை தெய்வம்: தலைவர் உரையில் எழுந்தமானமாய் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அளித்தார். முதற்பிரதிகளை பரிசின் கலையுலகப் பிரமுகர்கள் பெற்றுக்கொண்டனர். கலைமாமணி இம்மானுவேலின் நன்றியுரையுடன் விழா இனிதே நடைபெற்றது.

அமலதாஸ், பாரிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மாத நேர்முகம் - E.V. சிங்கன்



**சி**ங்கப்பூரில் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக பதிப்புத்துறையில் ஈடுபட்டு வருபவர் இ.வி. சிங்கன். திருக்குறளில் மிகுந்த ஈடுபாடுடையவர். திருக்குறளை அனைவரும் கற்று வாழ்வில் உயர வேண்டும் என்ற பேரவா உடையவர். இதனால் உலகில் தமிழர் பரந்து வாழும் இடங்களுக்கெல்லாம் சென்று திருக்குறள் பரப்புரைகளை செய்து வருகின்றார். அந்த வகையில் அண்மையில் இலங்கை வந்த இ.வி. சிங்கன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அங்கு பல இடங்களிலும் திருக்குறள் வகுப்புகள் நடத்தியுள்ளார். அவர் தமிழ் உலகத்துக்கு வழங்கிய பேட்டியை இங்கே தருகின்றோம்.

கேள்வி: திருக்குறள் மீது உங்களுக்கு எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

பதில்: எனது குடும்பப்பின்னணி இதற்குக்காரணம். எனது தந்தை நான் சிறுவனாக இருக்கும் காலத்திலிருந்து எனக்கு திருக்குறளைக்கற்றுக் கொடுத்தார். பின்னர் இலண்டனில் நான் சட்டம் படித்துக்கொண்டிருக்கும்போது சக வெள்ளையின மாணவன் ஒருவன் 'சட்டம் படிக்க சிங்கப்பூரிலிருந்து வந்தாயா?' எனக்கேட்டான். இந்தக்கேள்வி என்னுள் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. சட்டத் துறையில் முதல் தர சித்தியடைந்த நான் அந்தத்துறையை முற்றிலும் கைவிட்டு தமிழ் நூலாகிய திருக்குறளை உலகெங்கும் பரப்பும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கினேன். இந்த வகையில் தென்னாபிரிக்கா உட்பட தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளுக்கும் சென்று வருகின்றேன்.

கேள்வி: தமிழ் மொழியில் ஏராளமான நூல்கள் இருக்கும்போது உலகளாவிய ரீதியில் பரப்புரைகளை நடத்துவதற்கு ஏன் திருக்குறளைத்தேர்ந்தெடுத்தீர்கள்?

பதில்: தமிழ் எங்கள் தாய் மொழி, திருக்குறள். சங்ககாலப்புத்தகங்கள், திருமுறைகள் என்பன தமிழில் எழுந்தன. இராமாயணம், மகாபாரதம்,கீதை, வேதங்கள் என்பன சமஸ்கிருத நூல்கள். தமிழகத்தில பிராமணர்கள் பெரும் பணக்காரர்களாக இருந்தனர். அவர்களுடைய மொழி மறை மொழி. நாளடைவில் அது புதுப்புது வடிவங்களில் வளரத்தொடங்கியது. பிராமணர்கள் வைணவத்தையும் அதனோடிணைந்த கலாசாரங்களையும் வளர்ப்பதற்கு பெரும் பண உதவிகளை செய்தார்கள். அந்த அடிப்படையில் எழுந்தவைதான் இராம கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, சின்மயானந்த மிஷன் போன்ற அமைப்புகளாகும்.

திருக்குறளைப்பரப்புவதற்கு தமிழர்கள் தீவிரமாக முன்வரவேண்டும். தமிழர்கள் திருக்குறளை பரப்ப பண உதவி செய்ய முன்வருவது குறைவு. நூறு மில்லியன் தமிழர்களில் சுமார் 10 வீதத்தினர் வரையிலேயே சைவத்தையும் தமிழையும் திருக்குறளையும் வளர்க்க உதவுகின்றார்கள்.

தமிழ் புத்தகங்களை வாங்குகின்றார்கள். திருக்குறளை தமிழர்கள் மத்தியில் வேரூன்றச்செய்யும் போது சைவர்கள் வேறு சமயத்தையும் தமிழர்கள் வேறு மொழியையும் நாடும் நிலை தவிர்க்கப்பட உதவும். இதனால் தான் தமிழில் எழுந்த திருக்குறளை நான் 1972 ஆம் ஆண்டிலிருந்து உலகெலாம் பரப்பி வருகின்றேன்.

கேள்வி: 40 ஆண்டுகளுக்கு மேலாக நீங்கள் ஈடுபட்டுள்ள பதிப்புத்துறை உங்கள் திருக்குறள் பரப்புரைகளுக்கு எவ்வாறு உதவுகின்றது?

பதில்: தனியே வாய்ப்பேச்சின் மூலம் திருக்குறளைப்பரப்புவது சாத்தியமாகாதாதலால் திருக்குறள் தொடர்பான புத்தகங்களை அச்சிட்டு வெளியிடத்தொடங்கினேன். சைவ நூல்கள், திருக்குறள் விளக்க நூல்கள், தமிழ்ப் பயிற்சி, பாடநூல்கள் ஆகியவற்றைப் பதிப்பித்து வெளியிட்டு வருகின்றேன். இதுவரை 200க்கு மேற்பட்ட நூல்கள் வெளிவந்து விட்டன. எனது நூல்களுக்கு உலகளாவிய ரீதியில் பெரு வரவேற்பு உண்டு. 'திருக்குறள் வகுப்பை எப்படி நடத்துவது?', 'குடும்பத்திருக்குறள் வகுப்பு','ஒரு திருக்குறளை முற்றாக ஓதுவதற்கு இலகுவான பத்து முறைகள்','சித்திரக் கதைகள் மூலம் திருக்குறள் கற்றல்' இவ்வாறு பல நூல்களை வெளியிட்டுள்ளேன்.

தற்போது ஒரு குறளுக்கு ஒரு கதை என்ற முறையில் 1330 குறள்களுக்கும் 1330 கதைகளை நூல்களாக பதிப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளேன். நான் ஒரு சட்டத் தரணியாக இருந்த போதிலும் வெள்ளையனின் ஆங்கில புத்தகங்களை கற்று சட்டத்துறையில் ஈடுபடுவதை விட தமிழ் நூலாகிய திருக்குறளை எல்லோருக்கும் கற்பித்து அதனால் எல்லோரும் பயனடைய வேண்டும் என விரும்புகின்றேன்.

கேள்வி: திருக்குறள் விரிவுரைகளை பல மட்டங்களிலும் யாழ்ப்பாணத்தில் நடத்திவிட்டு வந்திருக்கின்றீர்கள்? யாழ். மாணவர்கள் மத்தியில் திருக்குறள் தொடர்பான அறிவு எப்படியுள்ளது?

பதில்: யாழ். மாணவர்கள் மத்தியில் திருக்குறள் பற்றிய அறிவு இன்னும் விருத்தி செய்யப்பட வேண்டும். திருக்குறள் பற்றிய எனது விளக்கங்கள் அங்கு அனைவரையும் கவர்ந்திருந்ததை நான் அவதானித்தேன். யாழ்.விஜயம் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

நவம்பர் மாதம் இரண்டாம் வாரத்தில் யாழ்ப்பணாத்திலுள்ள யாழ். மத்திய கல்லூரி, வேம்படி மகளிர் கல்லூரி, நெல்லியடி மகா வித்தியாலயம் மற்றும் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, யாழ். பல்கலைக் கழக கல்விமான்களின் கழகம் என்பன உட்பட பல கல்வி நிறுவனங்களுக்கும் சென்று திருக்குறள் பற்றிய கருத்தரங்குகளில் பங்கு கொண்டேன். மாணவர்களும் ஆசிரியர்களும், பெரும் வரவேற்பும் ஆதரவும் தந்தனர். அவர்களில் பலர் தமது கருத்துக்களை எழுதி ஒப்படைத்துள்ளனர். அவற்றை நூலுருவில் வெளியிட்டு விட்டு மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல விருக்கின்றேன்.

- தீபா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூட்டு வியாதி (Arthritis)

ஐம்பது வயது கடந்ததும் ஆதிரைட்டிஸ் எனப்படும் மூட்டு வியாதிகள் ஏற்பட இடமுண்டு. பருமனான உடல் அமைந்தவர்களும், பொதுவாக பெண்களும் இதனால் அல்லலுற நேர்கின்றது. உடலில் மூட்டுக்கள் எங்குள்ளனவோ அங்கெல்லாம் இது ஏற்பட முடியும். இத்தகைய வியாதிகளை இப்போது நவீன முறையில் குணப்படுத்திக்கொண்டு மிகவும் உற்சாகமான வாழ்க்கையை நடாத்த முடியும் என்கிறார் வைத்திய ஆலோசகர் Dr.சுவர்ணா MS(SL) FRCS(Edin). வாசகர்கள் இவைகள் தொடர்பான சந்தேகங்களை எழுதலாம். டாக்டர் பதிலளிப்பார்.

## OSTEO ARTHRITIS

### மூட்டு வியாதி (Arthritis)

மூட்டு வியாதிகள் வெவ்வேறு வகைப்படு கின்றன. இவை வெவ்வேறு காரணங்களால் ஏற்படு கின்றன. நாம் இங்கு எடுத்துக்கொள்வது வயது முதிர்ச்சியினால் ஏற்படுகின்ற மூட்டு வியாதி (Osteo Artritis).சாதாரணமாக ஒவ்வொரு எலும்பு மூட்டிலும் அதன் உராய்வை குறைப்பதற்காகவும் அசைவை சுமுகமாக நிகழ்த்துவதற்காகவும் கசிவிழையம் (Cartilage) எனப்படும் ஒரு படலம் காணப்படு கின்றது. அது மட்டுமல்லாமல் மூட்டுத் தொகுதியின் உள் பகுதியில் ஓர் மெல்லிய திரவ படலம் (Joint fluid) காணப்படுகின்றது. இப்படலம் உராய்வைக் குறைக்கும் ஒரு படலமாக (lubricant) தொழிற்படு கின்றது.


இயந்திரங்களில் உள்ள மூட்டுக்கள் (Joints) அவற்றின் பாவனைக்கேற்ப அவற்றின் ஆயுட் காலத்திற்கு ஏற்ப தேய்வடைவது போல் எமது மூட்டுக்களும் வயது முதிர்ச்சியின் காரணமாக தேய் வடையத் தொடங்குகின்றன. இவ்வாறு தேய்வடை வதற்கான தெளிவான காரணங்கள் தெரியப் படாவிட்டாலும் அதிக உடற்பருமன் உள்ள வர்களுக்கு இது ஏற்படும் சாத்தியக்கூறுகள் அதிகம். இதன் காரணமாக இவ்வியாதி பெரும்பாலும் முழங்கால் மூட்டில் ஏற்படுகின்றது. இது பொதுவாக உடற்பருமன் கூடிய பெண்களில் அதிகமாக காணப்படுகின்றது. உடலிலுள்ள பெரிய மூட்டுக்களில் முழங்கால் மூட்டுக்கள் பொதுவாக பாதிக்கப்படு கின்றன.

Osteo Arthritis ஏற்படுவதற்கான சில கார ணங்களாக கசியிழையத்தில் 'Catilage' ஏற்படும் காயங்கள், மூட்டுக்களில் ஏற்கனவே உள்ள வளைவுகள் போன்ற குறைபாடுகள், மூட்டுக்களி னுள் அல்லது அதன் வெளியேயுள்ள சவ்வுக ளில் ஏற்படும் பாதிப்புக்கள் போன்றவற்றையும் கருத்தில் கொள்ளலாம்.

இவ்வியாதியினால் பாதிக்கப்படுபவர்கள் பொதுவாக 50 வயதிற்கு மேற்பட்டவர்களாகவும் அதிக உடற்பருமன் உடையவர்களாகவும் நீண்ட காலமாக மூட்டுக்கால்களில் வளைவுகளை கொண்டவர்களாகவும் இருப்பார்கள். சிறிது தூரம் நடந்த பின் முழங்கால் மூட்டில் ஏற்படும் வலியை இந்நோயின் அறிகுறியாக கொள்ளலாம். இப்படியான வலி நாட் செல்லச்செல்ல அதிகரித்துக்கொண்டு செல்வதை அவதானிக்கக்கூடியதாக இருக்கும். இந்த வலியின் தன்மை அதிகரித்துக்கொண்டு போகும் அதே வேளை மூட்டின் உட்பகுதியில் ஒரு வகையான திரவப்பதார்த்தம் அதிகரிப்பதன் மூலமும் மூட்டு வீக்கம் ஏற்படுகின்றது.

வைத்திய ஆலோசனை பெறப்படும் வேளை, மற்ற வகையான மூட்டு வருத்தங்களை வேறு படுத்து வதற்காகவும் இந்த நோயின் பாதிப்பை கண்டு பிடிப்பதற்காவும் வேறு வகையான பரிசோதனைகள் செய்வதன் மூலமும் இந்த வியாதியை உறுதிப் படுத்தலாம். பொதுவாக X Ray பரிசோதனை மூலம் இதனை கண்டு பிடிக்கக்கூடியதாக இருக்கும்.

பொதுவாக உடல் எடையை குறைத்தல் மற்றும் ஊன்று கோல் பாவித்தல் மூலம் மூட்டிற்கு கொடுக் கப்படும் பழுவை குறைக்கலாம். வலியை குறைப்ப தற்கான குளிகை வகைகள் ஓரளவு சுகத்தை




கொடுக்க முடியும். Heat Treatment (சூடான பதார்த்தங்களால் ஒத்தடம் கொடுத்தல், சூடான ஒளி,ஒலிக்கதிர்களை பாய்ச்சுதல் போன்றன) கணிசமான அளவு சுகத்தைக்கொடுக்கும். மூட் டைச்சூழ்ந்துள்ள தசைகளுக்கு கொடுக்கப்படும் அப்பியாசம் மூலமும், Bandage or splints போன்றனவற்றைப்பாவிப்பதன் மூலமும் குறிப்பிட்டளவு சுகம் ஏற்படுகின்றது. சில சந்தர்ப் பங்களில் மூட்டினுள் steroid மருந்தை செலுத் துவதன்மூலம் இவ்வியாதியை குறைத்துக் கொள்ளலாம். இந்த முடிவை வைத்தியரின் முடி விற்கு விட்டு விடுவது நல்லது. ஏனெனில் அடிக் கடி இப்படியான ஊசி மருந்துகளை பாவிப்பது நல்லதல்ல.

**வைத்திய ஆலோசகர் Dr.சுவர்ணா MS(SL) FRCS(Edin).**

பொதுவாக மேற்கூறிய முறைகளினால் இந்த நோயாளிக்கு குறிப்பிட்டளவு குணம் ஏற்படுகின்றது. தொடர்ச்சியான வலி மேற்கூறப்பட்ட முறைகளினால் சுகமடையாத விடத்து சத்திரசிகிச்சை முறை மூலம் இந்த வியாதியை குணப்படுத்தலாம்.

### சத்திரசிகிச்சை

ARTHROSCOPIC எனப்படும் முறை யினால் முழங்கால் மூட்டின் உள்பகுதியில் ஏற்பட்டுள்ள குறைபாடுகளை Video camera மூலம் பார்த் துக்கொள்ளலாம். அத்துடன் மூட்டை சுத்தப்படுத் தவும் முடியும். (Arthroscopic Walsa out ) மூட்டில் ஏற்பட்டுள்ள வளைவுகளை சத்திர சிகிச்சை மூலம் நேராக்குவதனால் உடற்பாரத்தை தாங்கும் பகுதி மாற்றமடைந்து நோயாளி சுகமாக நடக்க முடிகின்றது.

இப்படியான முறைகளினால் குணமடையாத விடத்து சத்திரசிகிச்சை மூலம் முழங்கால் மூட்டுக்களை மாற்றி (Joint Replacement) புதிய மூட்டுக்களை பொருத்திக்கொள்ள முடியும். இதற்கு நோயாளி சம்மதிக்குமிடத்து தொடை யெலும்பின் மூட்டுப்பகுதியும், கால் எலும்பின் மூட்டுப்பகுதியும் உலோகத்தினாலான பகுதியினாலும் (Stainless steel) இரண்டிற்கும் இடைப்பட்ட பகுதி பொலி எதிலினினால் (Poly Ethylene) செய்யப்பட்ட ஒரு பாகத்தினாலும் பூரணப்படுத்தப்படுகின்றது.

இந்த வகையான சத்திரசிகிச்சையை இலங்கையில் செய்யக்கூடிய வசதிகள் உள்ளன. இதன் மூலம் காலில் உள்ள வளைவுகள் நேராக் கப்படுவதுடன் குறிப்பிட்ட நோயாளி வலியின்றி நடக்கக்கூடியவராக மாறுகின்றார். அத்துடன் அவரின் வாழ்க்கை முறை மாற்றமடைவதுடன் மற்றவர்களில் தங்கியிருக்க வேண்டிய அவசியம் இல்லாமல் போகின்றது.சத்திர சிகிச்சையை குறிப் பிட்டதும் சாதாரணமாக நோயாளிகளின் மனதில் பயம் ஏற்படுகிறது. ஆனால் ஒரு கால் சத்திர சிகிச்சை மூலம் குணப்படுத்தப்பட்டதும் மற்றைய மூட்டை குணப்படுத்தி தருமாறு சாதாரணமாக நோயாளிகள் தாமாகவே வேண்டிக் கொள்கின்றனர்.


## இரத்த அமுத்தம் – 'Blood Pressure'

- டாக்டர் க.கதிர்காமநாதன்

"பிரஷர் அதோடை ஸ்ரோக்காம்". சிலருக் குத்தான் தெரியும் மாரடைப்பும் வரக்கூடுமென. இரத்த அமுத்தம் என்றால் என்ன? 140/90 என்ற எண்ணின் எல்லையை நிரந்தரமாக மீறினால் இரத்த அமுத்தம் உண்டு. காரணம் :- அநேகமாக ஒன்றுமில்லை. 10% வீதத்தினரிடம் தான் காரணம் கண்டு பிடிக்கலாம். அறிகுறிகள்: பெரும்பான்மையினருக்கு எவ்வித அறிகுறிகளும் இருப்பதில்லை. சிலருக்கு தலையிடி, கண்பார்வைக்கோளாறு, தலைசுற்றல் ஏற்படலாம். முதியோருக்கு மூக்கால் இரத்தம் வரலாம்.

அபாயங்கள்: சில கணநேர மயக்கம், கைகால் வழங்காமை, பேச்சு தடங்கல், விளங்காமை, மாரடைப்பு, இறப்பு.செய்ய வேண்டிய வழிகள்: உங் கள் வைத்தியரிடம் சென்றால் அங்கு மேசையில் இரத்த அமுத்தம் கணிக்கும் உபகரணம் இருப் பதைக்காணலாம். அவரிடம் தாழ்மையாகவும், பணி வாகவும் பரிசீலிக்கும் படி கோரினால் கட்டாயமாக உதவுவார். பொதுவாக 'அஞ்சற்க'என அபயமளிப்பார். இரத்த அமுத்தம் இருந்தால் மீண்டும் இரு முறை வரும்படி கூறுவார். இதன் பின்னர் நிரந்தரமாக அமுத்தம் கூடினால் சிகிச்சைகளை ஆரம்பிப்பார். இதே சமயத்தில் உங்களை இரத்த பரிசோதனையும் செய்வார். இதில் கொழுப்புத் தன்மை,ஈரல், சிறுநீரகம், சலரோகம் போன்றவை அடங் கும். சிலருக்கு வேறு சோதனைகளும் செய்ய வேண்டி வரும்.

தடுக்கும் வழிகள்: உப்பை அதிகம் பாவிக் காமலும், முன்பே தயாரித்த உணவுகளை வாங்கி உண்ணாமலும் இருத்தல் வேண்டும். புகைப் பதை




நிறுத்தியும் குடிவகைகளை அளவாகக் குடித்தலும் சிறந்தது. உங்கள் உயரத்திற்கேற்ப நிறையை அடைய முயலவேண்டும். கூடியவரை இலை, பழ வகைகளை உண்பதும் எண்ணெய் பொரியல் வகை களைக்குறைத்தும் உண்ணல்வேண்டும். புலம் பெயர்ந்த எமக்கு இங்கு பல தொல்லைகள் கூடியவரை அமைதியாகவும், சங்கடங்களின்றி, மனத்தாக்கமின்றி சந்தோஷமாக வாழப்பழகவேண்டும். உடல் அப்பியாசம் அவசியம். கடைசி 20-30 நமிடங் கள் எனினும் ஒரு கிழமைக்கு 5 முறையாவது செய்தல் வேண்டும்.

அபாய அறிவிப்பு: இரத்த அமுத்தம் ஆசிய வாசி களிடம் அதுவும் புலம்பெயர்ந்தோரிடம் இருப்பது கண் கூடு. இது மறைமுகமான வியாதி. அநேகமாக தற்செய லாகவே தான் இது கண்டு பிடிக்கப்படுகின்றது.

இதனால் உங்கள் டாக்டரிடம் இரத்த அமுத்தம் பார்க்கச்சொல்லுங்கள். மிகுதியை அவர் பார்த் துக்கொள்வார். டாக்டர் இருக்கப்பயமேன்?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண், பெண் நட்பு ஆரோக்கியமானதா?



உலகில் உயர்வாக மதிக்கப்படும், போற்றப்படும் பண்புகளில், நட்பும் ஒன்று. நண்பன் இல்லாதவர்கள் என்று யாருமே இல்லை. அப்பா, அம்மா, சகோதரர்கள், உறவினர்கள் இல்லாவிட்டாலும் கூட ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு நண்பன்/ நண்பி நிச்சயம் இருப்பர். ‘உலகிலேயே இன்றியமையாதது சிநேகம் தான். அம்மாவின் கையால் சாப்பிட்டால் தான் வயிறு நிரம்பும். அதே மாதிரி ஒவ்வொருவருக்கும் ஒரு நண்பன் இருக்க வேண்டும். அவனுடன் அன்பையும், வேதனையையும், மகிழ்ச்சியையும், துக்கத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும். சிநேகம் உண்மையானது அது என்றும் அழியாதது’.

பெண்ணும் - பெண்ணும், ஆணும் - ஆணும் தான் நண்பியாக நண்பனாக இருக்கலாம், இருக்கவும் வேண்டும் என்ற கருத்து கீழைத்தேச சமுதாயத்தில் மிக ஆழமாக வேரூன்றிக் போயிருக்கின்றது, ஆனால் மேலை நாடுகளில் ஆண்-பெண் நட்பு என்பது மிகச்சாதாரணமான விடயம். ஆனால் கீழைத்தேச நாடுகளில் ஒரு பெண், ஒரு ஆணுடன் நட்பாக பழகினால் அது காதல் தான் என்று உடனேயே சமூகம் தீமானித்து விடுகின்றது. மாறாக ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே இருக்கும் ஆத்மார்த்தமான புனிதமான நட்பை பெரும்பாலானோர் புரிந்து கொள்வதில்லை, புரிந்துகொள்ள முயற்சிப்பதுமில்லை.

ஒரு பெண் இன்னுமொரு பெண்ணுடன் நட்பு பாராட்ட முடிகின்றது. என்றால் ஏன் அதே போன்று அவளால் ஒரு ஆணுடன் நட்பு பாராட்ட முடியாது? ‘நிஜமான அன்புள்ளம் கொண்டவர்களிடமிருந்து ஆறுதல் தேடுங்கள்! அயர்ச்சியை எதிர்க்க தேவையான பலத்தை அது தருகின்றது’ என்பதற்கிணங்க, தனது சந்தோசங்களையும் மன உணர்வுகளையும் தான் கண்டவற்றையும் அனுபவித்தவற்றையும் தனது தேவைகளையும் விருப்பங்களையும் தான் நண்பனாக ஏற்றுக்கொண்டவனிடம் பகிர்ந்து கொள்ளமுடியும். அங்கே அந்த ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே இருப்பது நட்பு மட்டும் தான். ஆனால் இன்று அநேகமானவர்கள் ஒரு பெண்ணுக்கும் ஆணுக்கும் இடையே காணப்படும் நட்பை காதலென்று கொச்சைப்படுத்தி விடுகின்றர். ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே நிலவுகின்ற ஆரோக்கியமான நட்பு ஒரு போதும் காதலாகாது. அந்த நண்பன் அவளுக்கு என்றைக்கும் சிறந்த நண்பனாக இருப்பானே தவிர அவன் ஒரு போதும் காதலனாகவோ, கணவனாகவோ மாறமாட்டான்.

இந்த விடயத்தில் மற்றையவர்களை விட பெண்ணின் குடும்பத்தினர் நிதானத்துடன் சிந்தித்து செயலாற்ற வேண்டியது அவசியமாகும். காதல் என்ற கண்ணோட்டத்துடன் நோக்காது அவர்கள் இருவருக்கும் இடையே ஆழமாக வேரூன்றியுள்ள நட்பை நோக்குங்கள்! அதன் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவுங்கள். அதை விடுத்து பெற்றோரும், கூட இருப்பவர்களுக்கும் அவளைப்புரிந்து கொண்டவர்களும் தவறாக விளங்கி தேவையற்ற வார்த்தைகளைக் கொட்டி விட்டால் அந்த வார்த்தைகளை திருப்பி அள்ள முடியாது. அவர்கள் இருவருக்கும் இடையே உள்ள நட்பில் உங்களுக்கு சந்தேகம் இருந்தால் அதை சம்பந்தப்பட்ட இருவருடனும் கலந்து பேசி தீர்த்துக்கொள்ளுங்கள். அதை விடுத்து அடுத்தவர்கள் கதைக்கு காது கொடுத்தால் அமைதியான ஆனந்தமான குடும்ப வாழ்க்கை ஆட்டங் காணத் தொடங்கிவிடும். அத்துடன் தேவையில்லாத பிரச்சினைகளும், சந்தேகங்களும் முளைவிட ஆரம்பிக்கும்.

இவையெல்லாவற்றுக்கும் புரிதல் மிக அவசியம். குடும்பத்தில் ஒவ்வொருவரும் அடுத்தவரை சரியாகப்புரிந்து கொண்டு விட்டால் எந்தப்பிரச்சினைகளும் தலை தூக்காது.

ஆண்-பெண் நட்பு தொடர்பான ஆக்கபூர்வமான கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

# குழந்தையின் விருத்தி

0-3 மாதங்கள்

* மூடிய கைகளை தனது வாயருகே கொண்டு செல்லும், கை, கால்களினால் தள்ளும்.
* இரு கைகளையும் விரிக்கும்.
* முழங்கையை அழுத்தியபடி தலையையும் நெஞ்சையும் மேலே தூக்குவதற்கு எத்தனிக்கும்.

4-7 மாதங்கள்

* இரண்டு பக்கமும் உடலை திருப்பும். இருக்க வைத்தால் விழாமல் இருக்கும்.
* அருகில் உள்ள பொருட்களை எடுக்கும். எடுத்த பொருட்களை ஒரு கையிலிருந்து மறு கைக்கு மாற்றுவதற்கு முயற்சிக்கும்.



8-12 மாதங்கள்

* இரு கைகளையும், முழங்காலையம் பயன்படுத்தி தவழ்ந்து செல்லக்கூடிய சக்தி பெறும். கதிரை, மேசைகளைப் பிடித்துக்கொண்டு நேராக நிற்கும்.
* தான் விரும்பும் பொருளை பிடித்துக்கொள்வதற்கு பெருவிரலையும், ஆள்காட்டி விரலையும் உபயோகிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்மார்களுக்கு மரணம் சம்பவிப்பதற்கான 5 காரணங்கள்



1) குருதிச்சோகை - உரியவாறு செய்யப்படாத கருச்சிதைவு, கஷ்டமான பிரசவம் அல்லது கருப்பையில் ஏற்படும் தாக்கங்கள். முன்னர் பிரசவத்தின் போது குருதிச்சோகைக்கு ஆளாகி தொடர்ச்சியான பிரசவத்தக்குட்பட்டு, பிரசவ மூன்றாம் கட்டத்தில் கூடுதலாக குருதி வெளியேறிய பெண்களும் குருதிச்சோகையால் பாதிப்படைவர்.

2) ஈர்ப்பு வலி: வாழ்க்கையில் ஏற்பட்ட ஒவ்வாமை, பிரசவத்திற்கு உதவி அளித்தவரின் நகம், கை, நீண்ட நேரப்பிரசவ வலி, கலங்களில் வெடிப்பு ஏற்படல், கருச்சிதைவு அல்லது நஞ்சுக்கொடி உரிய முறையில் வெளியறோமை போன்றவற்றினால் ஏற்படலாம்.

3) கருச்சிதைவு: கிருமியழிக்கப்படாத கருவிகளை உபயோகித்தல், பூரணமாக கருச்சிதைவு செய்யாமை, கர்ப்பப்பை, கர்ப்பப்பைக்கழுத்து அல்லது ஏனைய உறுப்களில் துவாரங்கள் ஏற்படுதல், குருதிச்சோகை ஆகியவற்றால் ஏற்படும்.

4) கர்ப்பத்தில் விஷம்: கர்ப்ப காலத்தினுள் உயர் குருதியமுக்கம் இருந்தால் வலிப்பு, மரணம் ஏற்படலாம். பிரசவத்திற்கு முன் செய்யப்படும் சிகிச்சை முறைகளினால் இப்பாதிப்புகளை இலகுவாகத் தடுக்கலாம்.


5) கஷ்டப்பிரசவம்: தாயின் இடுப்பெலும்புகள் விரிவடையாமை, ஒன்றுக்கு மேற்பட்ட கருக்கட்டல்கள் ஏற்படல், பிரசவத்தின்போது உரியவாறு தலைப்பகுதி வெளியேறாமை போன்ற காரணங்களில் பிரசவத்தில் தடை ஏற்படலாம். இவ்வாறான பிரசவத்தை தடுப்பதற்கு சரியான சிகிச்சை முறை சிசேரியன் முறையாகும்.

# திருமணத்துக்கு முன்.....

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றன என்று கூறப்படுவதுண்டு. அப்படியானால் இன்று பெருகி வரும் விவாகரத்துக்களுக்கான காரணம் என்ன? காதல் திருமணமாக இருந்தாலும், நிச்சயிக்கப்பட்ட திருமணமாக இருந்தாலும் எத்தனை பேருடைய வாழ்க்கை பிரச்சினைகளின்றி சந்தோசமாக இருக்கின்றது. வாழ்க்கையில் எவ்வளவு தான் அடிபட்டாலும் எமக்கென்று பிரச்சினைகள் ஏற்படும் போது சற்று தடுமாறித்தான் போகின்றோம். அந்தச்சமயத்தில் உறவுகளும் நண்பர்களும் கை கொடுக்க வேண்டும் என எதிர்பார்க்கின்றோம்.

காதலித்து திருமணம் செய்பவர்கள் காதல் வேகத்தில் யாருக்கும் தெரியாமல் மிக நெருக்கமானவர்களுடன் மட்டும் சென்று பதிவுத்திருமணம் செய்து விடுகின்றார்கள். அந்தச் சமயத்தில் அவர்கள் தமது எதிர்கால வாழ்க்கை பற்றிச் சிந்திப்பதில்லை. நிச்சயிக்கப்படும் திருமணங்களில் சில பெண்ணின் அல்லது மாப்பிள்ளையின் விருப்பத்துக்கு மாறாகவும் நடைபெறுவதுண்டு. குடும்பவாழ்க்கையில் கணவனுக்கும் மனைவிக்குமிடையே விரிசல் ஏற்படும் போது அது விவாகரத்துக்கு வழி கோலுகின்றது. விவாகரத்து கோரும்போது நீதிமன்றம் உடனேயே விவாகரத்து வழங்கி விடுவதில்லை. சம்பந்தப்பட்டவர்கள் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள். ஆலோசனையாளர்களால் (Councillor) ஆலோசனைகள் (Counciling) வழங்கப்படும். சிந்திப்பதற்கு கால அவகாசம் வழங்கப்படும்.விவாகரத்து கோருபவர்களை சேர்த்து வைப்பதற்கே நீதிமன்றம் முயற்சிக்கும். எதுவும் சரிப்படாத பட்சத்திலேயே விவாகரத்து வழங்கப்படும். ஆனால் திருமணங்கள் மட்டும் எளிதாக நடைபெற்றுவிடுகின்றது. எதிர்காலத்தைப்பற்றி எண்ணாது 'கண்டதே காட்சி கொண்டதே கோலம்'என திருமணம் செய்து கொள்ள பதிவாளர் அலுவலகத்துக்கு செல்பவர்களுக்கும் ஆலோசனையாளர்கள் (Councillor) ஆலோசனை வழங்குவது மிகவும் அவசியமாகும். அந்த நேரத்தில் வழங்கப்படுகின்ற ஆலோசனைகள் உணர்ச்சி வசப்படுவதால் ஏற்படப்போகும் பல பிரச்சினைகளை தடுத்து நிறுத்தி விடும். விவாகப்பதிவாளர் அலுவலகங்களில் ஆலோசனையாளர்கள் (Councillor) நியமிப்பது குறித்து அக்கறை செலுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம். இதற்காக எல்லாத்திருமணங்களும் தவறான முடிவினால் தான் நடைபெறுகின்றது என்று கூற முடியாது. ஆழ் மனத்திலிருந்து ஊற்றெடுக்க வேண்டிய காதல் வெறுமனே அழகிலும், அந்தஸ்திலும் உருவாகும் போது அந்தக்காதல் கேள்விக்குறியாகி விடுகின்றது. இப்படியான காதலைத்தான் இன்றைய சினிமாக்களும் காட்டுகின்றன. இன்று பெருகி வரும் விவாகரத்துகளுக்கு முக்கிய காரணம் பின்விளைவுகளை யோசியாது உணர்ச்சிவசப்பட்டு எடுக்கும் முடிவுகள் தான். இதனால் பல இளம் பெண்கள் வாழ்க்கையை தொலைத்து விட்டு எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியுடன் இருக்கின்றனர். விவாகரத்தை தடுப்பதற்கு நீதி மன்றங்களில் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளைப்போன்று சரியான திருமணத்துக்கும் ஆரோக்கியமான ஆலோசனைகள் வழங்கப்படுவது காலத்தின் தேவை. இது குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டியது அவசியமாகும்.

# வத்தகைப்பழம் (Water melon)



கோடை காலத்தில் ஏற்படும் கடுமையான தாகத்தை தீர்க்கும் ஆற்றல் வத்தகைப் பழத்திற்கு (Water melon) உண்டு. எல்லோராலும் விரும்பி உண்ணப்படும் வத்தகைப் பழம் தனியே தண்ணீர் தாகத்தை மட்டும் தீர்த்து விடுவதில்லை. இதில் உடலுக்கு நன்மையளிக்கும் பல உயிர்ச்சத்துக்கள் நிறைந்துள்ளன.வத்தகைப்பழத்திலுள்ள உயிர்ச்சத்து 'A' ஆரோக்கியமான கலங்களின் வளர்ச்சிக்கு உதவுகின்றது. உயிர்ச்சத்து 'C' நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்கின்றது. பொட்டாசியம் கலங்களில் உள்ள கனிப்பொருள்களின் சமநிலையைப் பேணுகின்றது. கொழுப்பு குறைவானதும் கொலஸ்ரோல் அற்றதுமான வத்தகைப் பழம் அனைவரும் உண்ணக்கூடிய கனியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதபலன்கள்

சோதிட ஆய்வாளர் த.அழகேசன்- யாழ்ப்பாணம்

01.12.2004 - 31.12.2004




### அஸ்வினி, பரணி, கார்த்திகை-1

கல்விமுன்னேற்றம், குடும்பப்பெண்களுடன் மன்ஸ்தாபம், நோய், துக்கம், தந்தைக்கு நோய், எதிர்பாராத விபத்துக்கள், பணத்தட்டுப்பாடு, பொருள் நட்டம், திருடர் பயம், மருத்துவச் செலவு, இடமாற்றம், பிரயாணக்கஷ்டம், வயிறு கண் பாதிப்பு,புத்திரர் விரோதம், நண்பரால் நட்டம், திருமணப்பேச்சு குழம்புதல், விருந்து உபசாரம், சொத்துக்கள், பாகப்பிரிவினை, பந்தயங்களில் வெற்றி, கடன் தொல்லை, வீட்டில் சுப காரியம், பங்கு வியாபார முன்னேற்றம், சகோதர உதவி, புத்தக வெளியீடு மூலம் புகழ், சனி பகவான் வக்கிரம் அடைந்து இருப்பதினால் சுப பலன்கள் சற்று குறைவடையலாம். கூடாத நாட்கள்: 10,11,12




### மகம்,பூரம், உத்தரம்-1

கல்வி முன்னேற்றம் உண்டு. தன விருத்தி, வஸ்திர லாபம், சகோதர உதவி,நிலம் வாங்குதல்,புதிய பதவி, பரிசு,பட்டம் கிடைத்தல், திருமணப்பேச்சு,தொழில் லாபம், பிரயாண நன்மை, வீடு வாங்குதல், வாகன யோகம் அயல்நாடு செல்லல், புதிய நண்பர் சேர்க்கை,குழந்தை பிறப்பு அல்லது உருவாகுதல், காய்ச்சல், வழக்கு, சண்டை சச்சரவு, நோய் ஏற்படல், மனைவி, விரோதம், தூரதேசப் பிரயாணம், மார்பு வலி, காரியத்தடைகள், வாகனச் செலவுகள், குடும்ப கலகம், சனி பகவான் வக்கிரம் அடைந்து இருப்பதினால் யோக பலன்கள் சற்று குறைவாக இருக்கும்.
கூடாத நாட்கள்: 18,19,20




### மூலம், பூராடம், உத்தராடம் -1

வெளியூர் பிரயாணம், கல்வி முன்னேற்றம், யாத்திரை செல்லல், பண விரயம், தொழில் நாசம். மனவிரக்தி, பதவி பறிபோதல், குடும்ப பிரிவு,திருடர் பயம், நோய் அதிகரிப்பு,புதிய கடன் ஏற்படல், சண்டை சச்சரவு நண்பர் விரோதம், பூமி வாங்குதல், வீடு வாங் குதல், பிள்ளைகளின் மூலம் பயம், குடும்பத்தில் சுப காரியம், இரண்டாம் தார திருமணம், அவமானம், மரணச்செய்தி, மனைவிக்கு நோய் ஏற்படல், வாகன யோகம், தேர்வுகளில் வெற்றி, திருமண தாமதம், இடமாற்றம், வீடுமாற்றம், வேலை கிடைத்தல், கண்டச்சனி வக்கிரம் அடைந்து இருப்பதினால், திடீர் அதிஸ்டம் ஏற்படலாம்.
கூடாத நாட்கள்: 29,30




### கார்த்திகை - 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் - 1,2

உத்தியோக உயர்வு, புதுமனை புகுதல், திருமணப்பேச்சு, பிள்ளை பிறப்பு அல்லது உருவாகுதல், பணவரவு, வழக்கு வெற்றி, நோய் குணமடையும், சத்துரு ஜெயம், காரிய வெற்றி, வருமானம் அதிகரித்தல், அலைச்சல், காயப்படுதல், தொழில் கஸ்டம், மனைவியுடன் மனஸ்தாபம், மனைவிக்கு நோய், விசக்கடி பயம், வெளியூர் பிரயாணம் தடைப்படும், வயிற்றில் ரோகம், காதலில் தடை, குடும்ப கலகம், புத்திரர் விரோதம், கடன் பகை, நண்பர் விரோதம், மனநோய், பெண்களால் உபத்திரவம், 7 1/2 சனி பகவான் வக்கிரம் அடைந்து இருப்பதால் திடீர் அதிஷ்டங்கள் ஏற்படலாம்.
கூடாத நாட்கள்: 13,14




### உத்தரம் - 2,3,4, அத்தம், சித்திரை-1,2

கல்வியில் சிறுதடை, பணவரவு, நோய் தீரும், தொழில் லாபம், விரோதிகள் அழிவு, புதிய பதவி, எதிர்பாராத தன லாபம், மதிப்பு ஏற்படல், உறவினர் சினேகம், காரியசித்தி, குடும்ப உறவு, மகிழ்ச்சி, இட மாற்றம், திருடர் பயம், வெட்டுக்காயம், வாக்கு தோல்வி, முன்கோபம், எதிரிகளிடம் மோதல், மரண பயம், பந்தயங்களில் தோல்வி, திருமண சுபகாரியம், குழந்தைப்பேறு, கண்நோய், பயிர் நட்டம், தீராத பகை ஏற்படல், ஜென்மத்தில் வியாழன் இருப்பதனால் தட்சிணாமூர்த்தியை வழிபடவும்.
கூடாத நாட்கள்: 21,22




### உத்தராடம்- 2,3,4 திருவோணம்,அவிட்டம்-1,2

வெற்றிகள், உயர் பதவி, நல்ல உடல் நிலை, திரவிய லாபம், திருமண சுபகாரியம் ஏற்படல்,புகழ் கிடைத்தல், தொழில் லாபம், அரசாங்க நன்மை, வழக்கு வெற்றி, திடீர் அதிஸ்டம், நோய் தீரும், எதிரிகள் நாசம் அடைவர், கடன் தீரும், வாகன சுகம், பிரயாண வெற்றி, நண்பர் வரவு, ஊதிய உயர்வு, திடீர் பிரயாணம், வழக்கு தள்ளுபடி, பிள்ளை பிறப்பு, அல்லது உருவாகுதல், கௌரவிப்பு, தர்மம் செய்தல், கோயில் திருப்பணி, பெண்கள் சினேகம். புதுமனை புகுதல், சனி பகவான் வக்கிரம் அடைந்துள்ளதால் யோக பலன்கள் குறைவடையலாம்.
கூடாத நாட்கள்: 4,5,31




### மிருகசீரிடம் - 3,4, திருவாதிரை, புநர்பூசம் - 1,2,3

கல்வி முன்னேற்றம், நோய் குணமடையும், விரோதிகள் அழிவு, காரியம் கைகூடும்,புகழ் ஏற்படும். தனலாபங்கள், நண்பர் உதவி,தூரதேசப்பிரயாணம், தொழில் ஆதாயம், பொருள் சேர்க்கை, அரசாங்க ஆதரவு, வழக்கு வெற்றி, பெண் பிள்ளைக்கு நோய், உடலில் காயம் ஏற்படுதல், திருடர் பயம், எதிரியுடன் கைகலப்பு. சகோதரரால் செலவு, புத்திரரால் துக்கம், உறவினர் உதவி, விளையாட்டுக்களில் வெற்றி, பதவி, கிடைத்தல், குழந்தை கிடைத்தல், நண்பர் உதவி, குரு தரிசனம், 7 1/2 சனி பகவான் வக்கிரம் அடைந்து இருப்பதால் அதிகமான யோக பலன்கள் திடீர் என்று ஏற்படலாம். கூடாத நாட்கள்: 15,16,17




### சித்திரை-3,4, சுவாதி, விசாகம் -1,2,3

கல்வி உயர்வு, வாக்குத்திறன், பண நெருக்கடி, வீண் கஷ்டங்கள், வலது கண்ணில் வலி, பிறரால் ஏமாற்றப்படல், கெட்ட சினேகம், திருட்டுப்பயம், எதிர்பாராத செலவு, உடம்பில் அடிபடுதல், வழக்கு உறவினர் பிரிவு, ஆயுத பயம், குடும்ப கலகம், நெருப்பினால் பயம், தந்தைக்கு நோய், கோபவார்த்தை, பெண்களால் பண விரயம், தொழில் கெட்ட பெயர், அவமானம், ஆடை, நகை சேர்க்கை, திருமணப்பேச்சு, சயன சுகம், தூரதேச பிரயாணச்செலவு, யாத்திரை செல்லல், கால் இடறி விழல், திடீர் திருமணம், தந்தைக்கு தீங்கு, தாயார் பகை, துயரச்செய்தி, கோவில் திருப்பணி, தருமம் செய்தல் ஆகியன ஏற்படலாம்.
கூடாத நாட்கள்: 23,24,25




### அவிட்டம்-3,4, சதயம், பூரட்டாதி -1,2,3

எடுத்த காரியம் முடியும், வழக்கு வெற்றி, தொழில் முன்னேற்றம், காரிய சாதனை, பொருள் வரவு, நண்பர் உதவி, பண வரவு, உத்தியோக உயர்வு, சம்பள உயர்வு, வேலை கிடைத்தல், கல்வி முன்னேற்றம், சகோதரர்களினால் செலவு,உடலில் காயம் ஏற்படலாம். அவமானம், அன்னிய தேச வாசம், புதிய வீடு வாங்குதல், காதல் கை கூடுதல், நண்பர் விரோதம், வியாபார நட்டம், அக்கினி பயம், சிரமமான பிரயாணம், நடை பாதைச்சண்டை, கருச்சிதைவு, மரணத்துக்கு ஒப்பான நோய், கண்டம், அட்டமத்து வியாழன் நடை பெறுவதால் தட்சணாமூர்த்தியை வழிபடவும்.
கூடாத நாட்கள்: 6,7,8




### புநர்பூசம் - 4,பூசம்,ஆயிலியம்

கல்வியில் சிறு தடை, நோய், சோகம், எதிரிகளால் பயம், அதிக பணச்செலவு, அரசாங்கத்தால் தொல்லை, மனக்கவலை, பணத் தட்டுப்பாடு,பெண்களுக்கு கர்ப்பச்சிதைவு, மானநஷ்டம், வயிற்றில் ரோகம், உறவினர் பிரிவு, வேலை இடத்தில் தகராறு, ரத் தக்காயம் ஏற்படல், துஸ்டர் சேர்க்கை, பெற்றோர் உடல்நிலை பாதிப்பு, பிரயாணத்தடை இன சன விரோதம், அக்கினி பயம், பிறமாதர் சேர்க்கை, மனைவி, மக்கள் சேர்க்கை, மனைவி, மக்கள் தொல்லை, உறவினர் வருகை, வாகன லாபம், புதிய வாகனம் வாங்குதல், பதவி நீக்கம், வழக்கு தடைப்படல், பயிர் நஸ்டம், 7 1/2 சனி பகவான் வக்கிரம் அடைந்து இருப்பதால் திடீர் யோகங்கள் ஏற்படலாம்.
கூடாத நாட்கள்: 17,18




### விசாகம் - 4, அனுஷம், கேட்டை

கல்வியில் பாதிப்பு, அலைச்சல், உடல் நலம் கெடுதல், வீண் பிரச்சினைகள், உறவினர்களால் கஷ்டம், தாழ்மையான நிலை, நோய், அந்தஸ்து குறைவடைதல், ஊர் சுற்றுவது, நண்பர் பகை வாக்குவாதம், பொருட்சேதம், கடன் படல், தனநாசம். இடக்கண் நோய், கெட்ட பெயர், அவமானம், கணவன், மனைவி உறவு பாதிப்பு, பாதக்காலில் நோ, அன்னிய தேச வாசம், பண நட்டம், தீய பெண்கள் நட்பு, திருமணப்பேச்சு, ஆடம்பரச்செலவு,பணவரவு, நிலம் வாங்கதல், வாகன சகம், புத்திரப்பேறு, பந்தயங்களில் வெற்றி, அட்டமத்து சனி வக்கிரம் அடைந்து இருப்பதனால் அதிகமான யோக பலன்கள் ஏற்படலாம்.
கூடாத நாட்கள்: 19,28




### பூரட்டாதி - 4, உத்தரட்டாதி, ரேவதி

கல்வியில் தடை, தாழ்மையான நிலை, இடமாற்றம், உத்தியோக மாற்றம், சண்டை, சச்சரவு, தாய், தந்தைக்கு நோய்,உடலில் சொறி சிரங்கு, புதிய நண்பர்கள் சேர்க்கை, ஆபத்துக்கள், திரவிய நாசம், வியாபார நஷ்டம், மானக்குறைவு, கெட்ட பெயர், எதிர்பாராத உதவி, அடி பணிதல், விஷ பயம், ஆயுத பீடை, விரக்தி நிலை, இடறி விழுதல்,வீண்பழி சூளுதல், பங்காளிகள் பிளவு, பண வரவு, பயணத்தில் திருட்டுபயம், சுப காரிய தடங்கல், திருமணப்பேச்சு, கணவன்-மனைவி உறவு மகிழ்ச்சி, தாயாருக்கு மரண கண்டம், வாகன விபத்து, கூடாத நாட்கள்: 9,10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவின் பிறப்பு ஒரு சவால்

கிறிஸ்து பெருமான் மண்ணுலகில் பிறந்த பெருவிழாவைக்கொண்டாட உலகம் தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கும் காலம் இது. அவரது பிறப்புக்கு பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மீட்பர் ஒருவரின் வருகை பற்றிய எதிர்பார்ப்பு இருந்ததை வேதநூல் தெளிவாகக்கூறுகின்றது. அவரது வருகை, தோற்றம், பண்புகள் அவர் அடையும் வேதனைகள் எல்லாம் இறைவாக்கினர்களால் முன்மொழியப் பட்டிருந்தன.

"இதோகருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண் மகவைப்பெற்றெடுப்பாள். அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவாள்"

-(எசாயா 7:14)

"நான் தேர்ந்து கொண்டவர் அவர்
அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன்.
அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார்"

-(எசாயா 42:1)

"அவரோ நம் குற்றங்களுக்காக காயம் அடைந்தார்.
நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார். நமக்கு நிறை வாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார். அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்"

"அவர் கைது செய்யப்பட்டு, தீர்ப்பிடப்பட்டு
இழுத்துச்செல்லப்பட்டார்.... என் மக்களின்
குற்றத்தை முன்னிட்டுக்கொலையுண்டார்."


-(எசாயா 53:5,8)

கிறிஸ்து பிறப்பதற்கு ஏறத்தாழ எழுநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த எசாயா இறைவாக்கினர் இயேசுவின் பிறப்பை இவ்வாறு முன்னறிவித்திருந்தார்.

ஆகவே நீதி வழங்கும் ஓர் அரசர், விடுதலை தரும் வீரர், மக்களுக்காக உயிர் கொடுக்கும் ஒரு மீட்பர் வருவார் என்பதைப்பலரும் அறிந்திருந்தனர். ஆனால் அவர் எப்போது வருவார் என்பது தான் அறியப்படாதிருந்தது. அந்த இரகசியத்தை முதன் முதலில் அறிந்தவர் இசேுவின் அன்னையான புதனித மரியா தான். திருத்தூதர் கிறிஸ்துவின் பிறப்பை அறிவித்தபோது அவர் அதை தெரிந்து கொண்டார்.

"வானதூதர் மரியாவுக்கு தோன்றி, "அருள் மிகப பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கின்றார்....... மரியே! அஞ்ச வேண்டாம் கடவுளின் அருளைக்கண்டறிந்துள்ளீர்கள். இதோ கருவுற்று ஒரு மகனைப்பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர்.அவர் பெரியவராயிருப்பார். உன்னத கடவுளின் மகன் எனப்படுவார். -(லூக் 1 :28-32)

கடவுளின் மகன் தன் வயிற்றில்! இன்னும் சில மாதங்களால் அவர் பிறக்கப்போகின்றார். இந்த உணர்வு நிச்சயம் மரியாவுக்கு விவரிக்க முடியாத ஒரு அனுபவத்தை ஏற்படுத்தியிருக்கும். அது மட்டுமன்று மரியாவின் உறவினரான புனித எலிசபெத் மரியாவை வாழ்த்தியபோது அவர் பாடிய பாடல் கிறிஸ்துவைப்பற்றிய வரைவிலக்கணமாகும். அப்பாடலில்:- கடவுளின் அன்பை, அவர் தனக்களித்த பெரும்பேற்றை, கடவுளின் பராமரிப்பை, இரக்கத்தை போற்றி புகழ்ந்து விட்டு கடவுள் இயேசு வழியாக நிகழ்த்தப்போகும் புரட்சிகரமான மாற்றங்களை, அவர் காட்டப்போகும் புதிய உலகைச் சிறிய சொற்களால் சித்திரமாக்கியுள்ளார் மரியா.



"அவர் தம் தோள் வலிமையைக் காட்டியுள்ளார்" தோள் வலிமை என்பது மனித மொழியில் வீரம் நிறைந்த, உறுதியான ஒரு செயற்பாட்டைக் காட்டுகின்றது,அரியணையிலிருப்போர்,ஆட்சி புரிவோர் எத்துணை வலிமையுடையோராயினும் அந்த ஆட்சியின் பெயரால், அதிகாரத்தின் பெயரால் இறுமாப்பு கொண்டு நல்லாட்சி புரியாவிடில் அந்த ஆட்சி நிலைக்காது: அது கடவுளால் இயேசுவின் வழியாக அகற்றப்படும் என்று கட்டியம் கூறுகின்றார் மரியா. அகற்றுவது மட்டும் அவரது வேலையன்று தாழ்ந்தவர்களை, அடக்கப்பட்டவர்களை, ஒடுக்கப் பட்டவர்களை உரிமை மறுக்கப்பட்டவர்களை அவர் உயர்த்துவார். இறைவன் முன்னே எல்லோரும் சமம். அனைவரும் ஆண்டவனின் பிள்ளைகளே.

-மலர்வேந்தன்.

# நாவலரின் சமயத்தொண்டும் கல்வியும்



மிக நீண்டதொரு பாரம்பரியத்தைக்கொண்ட தமிழினம் அந்நியராட்சியினால் தனது சுயாதீனத்தை இழந்து விட்ட கால கட்டத்தில் அவர் தம் சமய வாழ்க்கையில் புகுந்து விட்ட புறச்சமயத்தாக்கத்திலிருந்து சைவ சமயத்தையும் தமிழையும் காத்து பெரும் தொண்டாற்றியவர் ஆறுமுக நாவலரவர்கள். இருளில் இருந்த சைவத்தமிழ் மக்களுக்கு ஒளியைக்காட்டிய பரசமயகோளரி. அஞ்ஞான இருளகற்றி மெஞ்ஞான அறிவை ஊட்டி மக்களுக்கு நல்வழி காட்டிய நாவலரவர்கள் 1822 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 18 ஆம் திகதி யாழ்ப்பாணத்து நல்லையம்பதியிலே பிறந்தருளினார். அவர் தமது ஸ்தூல சரீரத்தை விட்டுப்பிரியும் வரையில் நைட்டிகப்பிரமச்சரியத்தைக்கடைப்பிடித்து தமது 57 ஆவது வயது வரைக்கும் தமிழிற்கும் சைவ சமயத்திற்கும் தொண்டாற்றிய சமய அபிமானி. நாவலரின் பங்களிப்பு சைவத்திற்கு ஆற்றிய தொண்டு ஈழத்தில் வாழும் மக்களை மட்டும் உள்ளடக்கியதாக இருக்கவில்லை. தமிழகத்தையும் உள்ளடக்கியதாகவே இருந்தது.இலங்கையில் கிறிஸ்தவம் பரப்பும் இயக்கங்களால் சைவமும் தமிழும் பாதிப்படைந்தன. 19 ஆம் நூற்றாண்டில் மேலை நாட்டு நாகரிகம் தோற்றுவித்த கலாசாரமும் சமயமும் இந்நாட்டில் வாழும் இந்து,பௌத்த கலாசாரங்களைப்பாதித்தது. அவர்களின் வாழ்க்கை முறை மாறியது. கிறிஸ்தவ மிஷினரிமார் பாடசாலைகள் மூலம் கல்வியும் உத்தியோகமும் பணமும் கொடுத்து சைவர்களை கிறிஸ்தவ மதத்திற்கு மதமாற்றம் செய்வதைக் கண்டார். பலர் மதம் மாறினர். கலாசாரத்தை மறந்தனர்.

அதனால் வேதனையுற்ற நாவலர் பிள்ளைகள் சைவச்சூழலில் கல்வி பயில்வதற்காக பாடசாலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும் என்று கருதினார். அதன் விளைவாக வண்ணார் பண்ணையில் ஒரு ஆங்கிலப் பாடசாலையை நிறுவினார். சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற தமிழ்ப்பாடசாலையும் நிறுவப்பட்டது.

சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சியைத் தூண்டும் கருவியாகிய கல்வியை வளர்த்தல் வேண்டும் என்ற பேராசை அவருக்கிருந்தது. ஆதலால் சைவச் சூழலில் ஒழுங்கான பாடத்திட்டங்களுடன் கூடிய பாடசாலைகளை நிறுவினார். பின் கிறிஸ்தவ சமயப் பரம்பலைத்தடுத்து நிறுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அவரது முயற்சியில் கிறிஸ்தவ சமயப்பரம்பல் சற்றே தணிந்தது. தமிழ்க்கல்விக்கு புத்துயிர் அளிக்கப்பட்டது. சைவ சமய பாரம்பரியத்துக்கு வழி சமைத்தது.

சமயத்தை வளர்க்க மொழி அவசியம் என உணர்ந்தார். ஓலைச்சுவடிகளாக இருந்த இலக்கிய நூல்களை அச்சேற்றி நூல் வடிவில் பிரசுரித்தார். சாதாரண தமிழ் மக்கள் புரிந்து பயன்படத்தக்க வகையில் வெளியிட்ட நூல்கள் பரந்த பயன் கொடுத்தன. சைவத்தை நிலை நிறுத்துவதற்கு கைம்மாறு கருதாது தனி மனிதனாகப்புரிந்த பணியினை அவர் மறைந்த பின்பும் பல்வேறு நிறுவனங்கள் தொடர்ந்து செய்கின்றன என்றால் அது மிகையாகாது.நாவலர் தமது முக்கிய கடமையாக சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்கு கருவியாக கல்வியை வளர்த்தல் வேண்டும் என்ற கொள்கைப்படி கருமமாற்றினார். அவரது முக்கிய நோக்கம் ஆங்கிலக்கல்வி காரணமாக சைவசமய வாழ்க்கைப்பாரம்பரியத்திலிருந்து யாழ்ப்பாண மக்கள் பிறழக்கூடாது என்பது தான். ஆங்கிலக் கல்வியினால் பாரம்பரிய சமூக அமைப்பு மாற்றமடையக்கூடாது. என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருந்தார். அதாவது பிரித்தானியரின் ஆட்சி சமூக மாற்றங்களையும் ஒழுக்கம், அறநெறி இவைகளை மாற்றமடையச்செய்யாது இருத்தல் வேண்டும் என்பதில் அவர் ஆணித்தரமாக இருந்தார். ஆங்கிலக்கல்வியினால் பண்பாடுகள் பரவும் சாத்தியம் இருப்பதை உணர்ந்த நாவலர் இதனை முறியடிக்க கல்விக்கூடங்கள் மூலமே முடியும் என்று கல்விக்கூடங்கள் அமைத்து பாடநூல்களை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.கிறிஸ்தவ மிஷினரிமார்கள் தங்கள் நூல்களைக்கற்றும் அதிக பணத்தையும் செலவு செய்து பாடசாலைகள் அமைத்து தங்கள் ஆலயங்களிலும் பிற இடங்களிலும் சமய போதனை செய்தனர். நமது மக்கள் அன்று சைவ நூல்களைக்கல்லாது கற்றாலும் பிறருக்கு எளிய முறையில் சமயத்தைப்போதிக்க இயலாமையினாலும் இந்து சமயம் குன்றியது. இன்றும் அதே நிலை தான். எந்த ஆலயத்தில் சமய பிரசாரங்கள் நடக்கின்றன.இன்று பௌத்த மடாலயங்களில் சமய வகுப்புகள் நடக்கின்றன. சமய பிரசாரங்கள் நடக்கின்றன. அதனால் தான் பௌத்தம் இன்னும் வளர்ந்தது. இனிமேலும் வளரும் என்ற நிலைப்பாடு பௌத்தர்களிடம் இருக்கின்றது. ஆனால் நமது சமயம் என்று வளரும் என்ற ஆதங்கம் நம் மக்களிடையே இன்றும் நிலவுகின்றது. தமிழுக்குழைத்தோர் சாவதில்லை. நல்லோர் உள்ளங்களிலும் தமிழர் இல்லங்களிலும் எங்கும் வாழ்கின்றார் நாவலர்.தீவிர சைவ பிரசாரத் தொண்டினைச்செய்து வந்த போதே இன்று யாழ். மத்திய கல்லூரியாக விளங்கும் இவரின் கல்லூரி அதிபராக இருந்த பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளை ஏற்று விவிலிய நூலையும் தமிழ் மொழியில் ஆக்கம் செய்து கொடுத்தார். இந்த ஒப்பற்ற மொழிபெயர்ப்பே தென்னிந்திய கிறிஸ்தவ சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. நாவலரின் பரந்த உள்ளத்தையும் பெருமையையும் இது நிலை நாட்டியது என்பது வரலாறு.


- தி.சுப்பிரமணிய சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Flying a Helicopter

The most Important part of the helicopter design is, design the fuselage areodynamically, for example some military helicopters such as APACHE (See figure below), Cobra and Eurocopter TIGER can complete aero-




batics maneuvers such as loops and rolls etc. In this type of helicopters either pilot or the gunner can operate nearly all the flight and combat controls, and the bell Huey cobra is designed with a front-seat cockpit for the gunner,with remotely operated turret. it flies at 320 Km/hr(200ph) and can move verticaly at 1770 M/min (5800 ft/min)

All aircraft rely on an upward force called lift to get them airbone and to keep them there.This lift is provided sloley by the flow of air over the wings. A helicopter's main rotor is in fact a set of spinning wings.

Each rotor blade is curved on top almost flat underneath.As. it whirls through the air. the air flowing over the top of the blade has to travel further-and there fore faster- than the air passing underneath.The faster the air flows, the less it presses on th surface it's flowing over. The result is that the air pressure above the blade is less than the air pressure bleow it, and the greater air pressure beneath the blade lifts it into the air.

To make the helicopter rise into the air, the pilot must increase the amount of lift generated by the main rotor. This is done by increasing the angle of attack of the rotor. blades-the angle the blade makes with the air flowing past it. At a high angle of attack, air pushes against the underside of the blade, increasing the air pressure there and giving more lift.For take off the pilot also increases engine power to make the baldes whirl faster, which also increases lift. To hover, the angle of attack is reduced until lift and gravity are in balance, and to decend it is reduced still further so that gravity gently pulls the helicopter towards the ground.

For all these straight up and down manoeuvres, the pilot uses the collective pitch control-at the left side if the seat-to adjust the angle of attacck by exactly the same amount on of the rotor blade.

To fly forwards, backwards or sideways, the pilot uses a second pitch control positioned between the knees and operated with the right hand-the cyclic pitch control.

This alters the pitch of the rotor blades individually at a particular point in each circular sweep(the cycle). When the stick is pushed forwards, a swash plate increase the angle of attack of each blade as it passes across the tail. This increases the lift at the back, tilting the rotor disc up at the back and giving forward thrust.

# Eat for Immunity




## Food that harm, foods that heal

* The antioxidants in honey protect the heart from free radical and may help reduce cholesterol.so honey is a heart helper.

* It's much sweeter than sugar so you'll use less, making it a calorie-saving substitute.So honey is a slimmer's friend.

* As a mild antiseptic, honey helps prevent the growth of bacteria around a wound and may speed healing.So honey is a infection fighter.

* It's rich in vitamins B6, riboflavin, thiamin and pantothenic acid, plus calcium, iron, magnesium,sodium, and zinc.So honey is a nutrient provider.

* Its anti - inflamamatory properties mean it may help reduce that scratchy feeling in your throat.So, honey is a sore throat soother.

* With a mild laxative effect, honey is a gentle way to ease constipation.Try a teaspoonful in a herbal tea. So honey is digestion booster.

* The darker the honey, the better it is for you.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Happy Christmas

The birth of Jesus Christ is known as nativity. Christmas is celebrated all over the wold by all Christians and enjoyed even by non-Christians who are used to joining their christian friends in their celebrations. Before writing about Christmas, I would like to remind readers that it is the believe that is important to any person in that religion whether Christmas or belong to other religions. Historically all admit that Jesus Christ was born in Betheleham about 2000 years ago and he is the incarnation of God. The Muslims too believe that Jesus Christ is their highest prophet.

For Christians, they believe that Jesus Christ is the son of God. Who was sent to earth to redeem all mankind from sin. Jesus was crucified for taking up himself the sins of all mankind and rose up from the dead (resurrected) burying all sins and if you believe Him all your sins will be forgiven. Believing Him,of course, is to follow his teachings and accept Him as your saviour.That is why Christianity is a unique religion because in no other religion there is forgiveness for sins but will be punished by God for all sins one had committed, in some way or other.

Jesus was born in Betheleham and if you look at the world map you will note that Betheleham is right at the Centre from East to West and North to South. It is interesting to note how God had predetermine the place of birth of His son. The message of the birth of Jesus Christ was told in a 'nut - shell' by Angel Gabriel to Jesus's mother Mary 'Peace on earth and love to all mankind'. This message. is stressed on many countries where there is civil war, terrorism and no love for each other. Politicians (present rulers of all countries) who want power, pride, popularity and money are not treating the citizens as human beings by cheating them for their selfish motives, showing language, religion, race and other man-made differences. If everybody follows this message of 'Peace on earth and love to mankind', the whole world could enjoy peace, love and freedom.

The message I would like to give this Christmas Day is that we should treat all mankind as God's children,bring peace everywhere so that rhere is security without any fear and love all mankind so that we will be always doing good to everybody to lead a happy and useful life. In all preaching of Jesus, He has insisted on loving each other, helping the poor and the needy, looking after parents relations, friends and neighbours.If we all resolve to follow these good teachings, I am sure we can make the world 'The Kingdom of God'

I would like to tell you a short story which I read in 'Reades Digest' about 20 years ago. One of many true stories not recorded in the Bible, but in other Greek ancient books. This happened when Jesus was lying in the manger as a baby. Hearing of Jesus's birth many went to see Him even children. One boy who visited baby Jesus was Pontius Pirate when he was about 7-8 years old. His father, at that time, was the Governor of Judia and he instructed his family that no one should visit to see this baby as the king had ordered not to give importance to any baby born during that period. But Pontius went to see this baby Jesus with his friends. On his return home, his father suspected and enquiring Pontius he admitted that he went and saw this child 'Jesus'.His father got angry and beat him severelybelieve.His mother took him to his room and put ointment to the wounds and swollen marks all over his body. She left him to rest and after a few miniutes she went to his room to check on his wounds. As she entered the room, she found her son sitting on the bed and was surprised to see that there were no marks or trace of any wound on his body. She and her son immediately knew that Jesus was the true 'Son of God'. They praised God but did not tell her husband in fear of him.

As a practical example, though we cannot physically see electricity, we know that when we turn on the electrical switch the bulbs give light, the fridge starts working, we can see moves on the T.V and all electrical items work.Though we cannot see Jesus physically he is omnipresent.I can witness in my life of 70 years, how Jesus had led my life from childhood,as a student as a young married man, as a family man with four daughters.I had put all my proplems and burdens on Jesus from my childhood and never worried about anything but only beleive that he is the only person I can trust and be sincere to Him. He has given me numerous blessing. just free and furthermore blessed my children and grand -children. If Jesus has done this to me,I am sure He is willing to do to you also. I am sure Jesus has every thing in plenty and will give every thing we need whenever we ask Him in prayer with sincere hearts.But, if you listen to Him and His teachings to love each other, He will give you abundantly.

In your life time if you love Jesus and love each other you will do all good things and that will make Jesus happy.
On this Christmas Day my prayers to Jesus is to bring 'Peace on earth and love to all mankind'. May our loard Jesus Bless you.

K.W.Selvarajah,
Mordan,
London.

## Riddle

It huffs and puffs
It steams and chokes
It roads way through
Sending everything in its path up in a brew
Coming slithering towards you
Two yellow eyes starting unblinking
Anger of steam coming out at the top
It roams from place to place

What is it?
Answer: TRAIN

By: Indhuja Saseetharan.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் உலகம்
London

## மதமும் மொழியும் ஜனநாயகத்திற்கு தடையல்ல சரியான ஆட்சியாளர்கள் இருந்தால் மட்டும்!

மக்களால் மக்களுக்காக மக்கள் ஆளும் ஆட்சிதான் ஜனநாயகம் என்பார்கள், சிங்களம், தமிழ், பௌத்தம், சைவம், முஸ்லிம், கிறிஸ்தவம் இந்த ஆறுபிரிவுகளும் அடங்கிய இலங்கைத்தீவில் ஜனநாயகம் என்ற ஆட்சிமுறை என்றும் முழுமையாக நடைபெற்றதில்லை. ஒரு பூரண ஜனநாயகம் எதிர்காலத்தில் நடப்பதற்கான காரணிகளும் அங்கு தென்படாத நிலையே தொடர்கிறது.

சுதந்திர இலங்கை என்று சொல்லப்பட்டு கடந்த 56 ஆண்டுகள் ஜனநாயக ஆட்சிமுறைமையிலுள்ள மக்களுக்கு உண்மையான ஜனநாயக வடிவத்தை அறிந்திருக்க முடியவில்லை.

மேற்கத்தேய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்கள் கண்ட ஜனநாயகம் இலங்கைத்தீவில் வருவதற்கு வாய்ப்புக்களே கிடையாது. தனிமனித கொலைகளும் குறிப்பாக நீதியரசர்கள், ஊடகவியலாளர்கள், மதத்துறவிகள் என்று மொத்தத்தில் கொலைகள் மிக மலிந்த நாடாக இலங்கை விளங்குகிறது. இவை மட்டுமன்றி அரசமட்டத்தில் காட்டப்பட்டுவந்த இனத்துவேசப்பொறிகளும் இன்றும் கற்ரைகளாக பல இடங்களில் எரிந்தவண்ணமே உள்ளது. இன்றைய உலக நடப்பில் இவையனைத்தும் நாட்டின் ஐக்கியத்திற்கு பாதக-நிலையையே ஏற்படுத்தும்.

ஜனநாயகத்தில் உலகில் முன்னணியில் திகழும் நாடாக இந்தியாவை இன்று பார்க்க முடிகிறது. இந்தியாவின் இன்றைய சனத்தொகை 1,070,278,805 ஆகவும் நாள் ஒன்றுக்கு 42,434 ஆல் அதிகரித்தும் வருகிறது. உலகில் இரண்டாவது பெரிய மக்கள் தொகைகொண்ட நாடு இந்தியாவாகும். இதில் 83 வீதம் இந்து மக்களாகவுள்ளார்கள். இக்கணிப்புக்களுடன் அங்கு ஜனநாயகத்தை பார்க்கும்போது, இந்தியாவின் ஜனாதிபதி அப்துல் கலாம் ஒரு இஸ்லாமிய மதத்தைச்சார்ந்தவரும், இந்தியாவின் பிரதமர் மன்மோகன் சிங் ஒரு சீக்கிய மதத்தைச்சார்ந்தவரும், இந்தியாவின் அரசியல் தலைவியாக பாரம்பரிய கிறிஸ்தவ நாட்டில் (இத்தாலி) பிறந்த சோனியா காந்தியும் பெரும்பான்மை இந்துக்கள் வாழும் நாட்டை ஆள்கின்ற இத்தாற்பரியம் உலகில் இதுவரைக்கும் எந்த ஒரு நாட்டிலும் இருந்திருக்கவில்லை. குறிப்பாக மனிதநேயத்தையும், தனிமனித சுதந்திரத்தையும் உயர்வாக மதிக்கும் ஐரோப்பிய நாடுகளில் கூட இந்நிலை சாத்தியமாகாது.

இந்த இடத்தில் விளங்காத விடயம் என்னவென்றால் இந்தியா இலங்கைப் பிரச்சினையை விளங்காமல் விளங்கிநிற்கிறதுதான்!!!

இலங்கைத்தீவை எடுத்துப்பார்த்தால் 82% பெரும்பான்மையினர் என்று சொல்லிக்கொண்டு தரம்பிரித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டால் நாட்டில் குழப்பங்களும் பிரிவினைகளும் தன்னிச்சையாகவே தோன்றும் என்ற கருத்தும் விதிலக்கல்ல. ஜனநாயகத்தை ஜனநாயகமாக ஆளவேண்டும் அல்லது ஆளும் திறமை உடையவர்களுக்கு வழிவிட்டுவிட வேண்டியதுதான். பெரும்பான்மை என்றும், சிறுபான்மை என்ற கருத்துக்களை நாடினால்; நாடு நாடுகளாகும் என்பதே நிச்சயம்.

சு.கிருஷ்ணதாசன்,
நிர்வாகப்பொறுப்பாசிரியர்,
இலண்டன்.

---

**த**மிழ் உலகம் சஞ்சிகை இலவசமாக விநியோகிக்கப்பட்ட காலத்திலிருந்து வாசித்து வருகின்றேன். ஓரிரண்டு விடயங்களை தவிர அநேகமாக எல்லாமே நன்றாக இருக்கின்றன. விலை அதிகமாக இருக்கின்றது. அரசியல் விமர்சனக்கட்டுரைகளும் விலை உயர்ந்த வைதான். ஒக்டோபர் மாத சஞ்சிகையில் கலைவாணர் ஆய்வை பாராட்டாமல் இருக்க முடியாது. காரணம் அதில் எதிர்வு கூறப்பட்ட ஒரு கருத்து தான். அதாவது, 95 சதவீத மக்கள் அளித்த ஆணையை நிறைவேற்று வதற்கு ஆணை பெற்ற பாராளுமன்றம் ஒன்றை தமிழர்கள் தேடுகின்றார்கள் என்று கூறி ஒரு மாதமே ஆகாத நிலையில் தமிழர்களும் தமக்கென சுய நிர்ணய சபையொன்றை அமைக்கும் கருத்துகள் பரவலாக அடிபடத் தொடங்குகின்றன. ஆய்வை விடவும் எதிர்வு கூறல் பாராட்டத்தக்கது. மேலும் எழுதுங்கள்.

க.குமாரசாமி, பண்டாரிக்குளம், வவுனியா.

**த**மிழ் எழுத்துத்துறையில் இன்னுமொரு தரமான சஞ்சிகையாக தமிழ் உலகம் திகழ்கின்றது என்பது மிகையல்ல. முன்னட்டையிலிருந்து பின்னட்டை வரை அதன் நேர்த்தி வரவேற்கவும் பாராட்டவும் தக்கது. அதன் உள்ளடக்கம் அரசியல், பொருளாதாரம், கலை, கலாசாரம் என எல்லாத்திசைகளிலும் விரிந்து இருப்பது அதன் பாரிய பரிமாணத்தைக் காட்டுகின்றது. இப்படித்தரமான சஞ்சிகைகள் சில மாதங்களில் மடிந்து விடாமல் பல காலங்கள் தொடர்ந்து வரவேண்டும் என்பதே எனதும் என் போன்ற வாசகர்களினதும் அவா. ஆசிரியர் தலையங்கம், படையினருக்குப்பயிற்சி, புலிகளுக்கு உபதேசம் போன்ற கட்டுரைகள் இன்றைய அரசியல் நோக்கை அப்பட்டமாகக்காட்டுகின்றன. புலம் பெயர்வினால் ஏற்படக்கூடிய தனிமையுணர்வு-கட்டுரை இன்றைய புலம்பெயர் சூழலில் மிக முக்கியமானதும் அவசியமானதுமாகும். இது போன்ற இன்னும் பல மனவியல் பிரச்சினைகள் புலம் பெயர்வாழ்வில் உண்டு. அவை பற்றியும் எழுதினால் பலருக்கும் பயன்படும். மற்றும் அனைத்து ஆக்கங்களும் நன்றாக இருக்கின்றன என்று கூறவே விரும்புகின்றேன்.

எப்.அமலதாஸ்,பாரிஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழியை மாண்புபடுத்தும் திருவெம்பாவை, திருப்பாவை!

மார்கழி பிறந்து விட்டது. தெருவெல்லாம் இசை முழக்கம், நகரங்களிலெல்லாம் பக்தி முழக்கம் முழங்குகின்றது. பள்ளிச் சிறார்களும், கன்னிப்பெண்களும் பெரியோர்களும் திருவெம்பாவை, திருப்பாவை பாடல்களை பக்தி சிரத்தையுடன் தம் இனிய குரல் களினால் பண் இசைத்துப்பாடுவதை கேட்க முடிகின்றது. மாணிக்க வாசகரின் தெய்வீகப்பாடல்கள், சேமக்கலம், சங்கொலி எனும் இசைக்கருவிகளுடன் இசைக்கப்படுகின்றது.

மார்கழி மாதத்தின் மாண்பை மாதவனைப்போற்றும் ஒப்புயர்வு பெற்ற திருப்பதிகங்களை தெய்வத்திருநங்கை கோதைப்பிராட் டியாரும் சைவ சமயத்திற்கே ஒளிச்சுடராக விளங்கும் மாணிக்க வாசக சுவாமிகளும் மனித உள்ளங்களில் ஆன்மிக விளக்கை அணையாது ஏற்றி வைத்து தெய்வ நெறி தளைக்க, சமயவாழ்வு உய்வு பெற தெய்வப்பாசுரங்களை அளித்துச்சென்றுள்ளார்கள். பக்தியை நெறிப்படுத்தும் இப்பாசுரங்கள் மக்களின் சமயவாழ்வு ஏற்றம் பெற்றுவிட மிகவும் உதவுகின்றன.

மனித குலம் அருளோடு வாழ்ந்திருக்க திருவாசகம் எனும் தேனினுமினிய பாடல்களைப்பாடிய மாணிக்கவாசகர் அவ் அருள் வாழ்க்கையை விழிப்போடு உய்த்துணர வைப்பதுபோல் ஆன்மாக் களை உறக்கத்தினின்றும் எழுப்புவது திருவெம்பாவை பாடல் களாகும்.

திருவெம்பாவையும் திருப்பள்ளியெழுச்சியும் திருவாசகத்தில் அடங்கிய பாடல்களேயாகும். இறைவனைப்பள்ளி எழுந்தருள வேண்டிக் கொள்வது திருப்பள்ளியெழுச்சி. இரவு எனும் மாயையில் தூங்கிய ஆன்மாவைத்தட்டி எழுப்பி ஆன்மாவைச்சுத்தி செய்வது தான் திருப்பள்ளியெழுச்சியின் நோக்கமாகும்.

மார்கழி மாதம் பூரட்டாதி தொடக்கம் திருவாதிரை வரையு முள்ள பத்து நாட்களும் திருவெம்பாவை நாட்களாகும். இப்பத்து நாட்களும் பக்தி சிரத்தையுடன் அதிகாலைய்யில் பண்ணுடன் இசைக்கப்படுவதுண்டு. மாணிக்கவாசகர் திருவெண்ணாமலையில் சிவபெருமானைத்தரிசிக்கச் சென்றவேளையில் பாடியவையே திருவெம்பாவையாகும். இத்திருவெம்பாவை இருபது மலர்களாலான பாமாலையாகும்.

நாட்டில் மழை பெய்து செழிக்க வேண்டும். நாம் நல்ல கண வரை அடைய வேண்டும் என்று இறைவனை வேண்டி கன்னிப் பெண்கள் நோன்பு நோற்கின்றார்கள்.

அதிகாலையில் எழுந்து தம்மையொத்த கன்னிப்பெண்களின் இல்லங்களுக்குச்சென்று அவர்களை எழுப்புகின்றனர் பின்னர் எல்லோருமாக சிவபெருமானின் திருவருளைப்பாடிய வண்ணம் நீராடச்செல்கின்றனர். திருவெம்பாவையின் முதல் எட்டுப்பாடல்களில் தம்மையொத்த பெண்களைத்துயில் எழுப்பும் வண்ணமும் பத் தொன்பதாவது பாடலிலும் மார்கழி நோன்பின் பயன் விளக் கப்படுகின்றது. இருபதாம் பாடலில் இறைவன் போற்றப்படுகின்றான்.

திருவெம்பாவை, திருப்பாவை ஆகிய இரண்டு பாசுரங்களும் தமிழ் மணம் கமழும் இனிய பிரபந்தங்களாகும்.

மனித வாழ்க்கைக்கு உலகியலறிவு மாத்திரமன்றி இசை யறிவும் இன்றியமையாதது. அவ் இசையறிவு பெறுவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக்கொண்டு நம்முன்னோர்கள் வாழ்ந் துள்ளார்கள். அப்படி வாழ்ந்துள்ளவர்களுள் மாணிக்கவாசகரும் ஒருவர்.

உயிருக்கு வலிமையூட்டும் தேனினுமினிய பாசுரங்களைப் பாடிய இசைஞானச்செல்வம் மாணிக்க வாசகசுவாமிகளாவர். திருப்பள்ளியெழுச்சி திருவெம்பாவை ஆகிய இரண்டும் அவரது திருவாக்கிலிருந்து வந்த பாசுரங்களேயாகும்.


ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் இடையிலான உறவு போல் கன்னிப்பெண்களுக்கும் அவர்களின் காதலர்களுக்கும் இடை யேயான உறவு அமைய வேண்டும் என்பதே திருவெம்பாவைப் பாடல்களில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மணிவாசகப்பெருமானும் ஆண்டாளும் மார்கழி மாதத்தின் சிறப்பை வலியுறுத்திய பாடல்களே திருவெம்பாவையும் திருப் பாவையுமாகும்.

-கலைவாணி








## தமிழ்உலகம் London

**வருட சந்தா முற்பதிவுப்பத்திரம்**

**அனைத்துலக தமிழ் மாத சஞ்சிகை**

Annual Subscription Application form

International Tamil Monthly Magazine

ஒரு வருடத்திற்கு £12 மட்டுமே

For one year £12.00 only

Name: ..................................................

Address: ..............................................

..............................................................

..............................................................

Tel: .......................................................

E-Mail : ..................................................

Signature: ..............................................

Date: ................/.........................2004

சந்தாக்கட்டணம் : காசோலைகளாகவோ அல்லது அஞ்சல் கட்டணமாகவோ அனுப்புவதாயின் Tamilulakam என்ற பெயருக்கு அனுப்பி வைக்கவும்.

Subscription payments : Cheques and postal orders made payable to: Tamilulakam

அனுப்ப வேண்டிய முகவரி:

Tamilulakam
International Tamil Magazine
899-901 Finchley Road
London NW11 7PE
The United Kingdom
Tele : 0044 20 8455 9001 Fax : 0044 20 8731 7870
E - mail : tu@globallanka.co.uk

இலங்கை வாசகர்கள் சந்தாக்கட்டணத்தை காசோ லைகளாக அனுப்புவதாயின் Global Investment lanka (Pvt)Ltd என்னும் பெயருக்கு எழுதி No: 329, Galle Road, Bambalapitiya, Colombo-4 என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அஞ்சல் கட்டளைகளை அனுப்பு பவர்கள் Havelock Town அஞ்சல் அலுவலகத்தில் மாற்றுவதற்கு வசதியாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

'தமிழ் உலகம்' வெளியாகும் நாடுகளும் அவற்றுக்கான வருட சந்தா முற்பதிவு கட்டணங்களும்

Annual Subscription including postages

FOR 12 ISSUES

| | |
|---|---|
| Australia | : $ 30 |
| Canada | : $ 25 |
| Denmark | : Kr125 |
| France | : 20 € |
| India | : Rs. 500/= |
| Germany | : 20 € |
| Italy | : 20 € |
| Malaysia | : MYR 75 |
| Netherland | : 20 € |
| New Zealand | : 30 NZD |
| Norway | : Kr140 |
| Singapore | : SGD 30 |
| Sri Lanka | : Rs. 600/= |
| Sweden | : Kr 150 |
| Switzerland | : SF 25 |
| United Kingdom | : £ 12 |
| USA | : $ 20 |
| All other country | : US$20 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைவல




*தற்போது ஈழவர் திரைக்கலை மன்றுக்காக ஏ.ரகுநாதன், சுண்டுக்குளி ராஜன் ஆகியோர் இணைந்து ஒரு குறும் படத்தை தயாரித்து வருகின்றனர். சீட்டுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டு வரும் இக் குறும் படத்தை தயாரிப் பவர் பாரிஸ்டர் ஜோஸப். விரைவில் ஐரோப்பா முழுவதும் உள்ள திரைக்கலை கலைஞர்கள் ஒன்றிணையும் திரைப்படமொன்றை தயாரிக்கும் முயற்சி கள் நடைபெற்று வருகின்றன.

*கமல் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே அவரின் 'வசூல்ராஜா எம்.பி.பி.எஸ்' படத்தில் நடித்தார் பிரபு. அதற்குப்பிரதியுபகாரமாக தங்களின் தயாரிப்பான 'சந்திர முகி'யில் கமலை ஒரு முக்கிய பாத்திரத்தில் நடிக்க வைத்து விட பகீரதப்பிரயத்தனம் செய்து வருகின்றார்.

*'இலங்கைத்தமிழ் சினிமாவின் கதை' என்ற நூலை எழுதியவர் இலங்கையின் பிரபல அறிவிப்பாளரும் எழுத்தாளருமான தம்பிஜயா தேவதாஸ். இவர் 'சிங்கள சினிமாவின் கதை' என்ற தொகுப்பையும் வெளியிட்டிருக்கின்றார். முதலாவது சிங்களப்படத்தை எடுத்தவர் ஒரு தமிழர் என்பது போன்ற இளைய தலைமுறைக்கு தெரியாத பல விஷயங்களை இந்த தொகுப்புகள் கொண்டுள்ளன.



* அவுஸ்திரேலிய ஒலிபரப்புக்கூட்டுத்தாபன வானொலி சமீபத்தில் புலம் பெயர்ந்தோர் தயா ரிப்பான 'பூக்கள்' திரைப்படம் தொடர்பான சிறப் புப் பேட்டியை ஒலிபரப்பியது. சுமார் ஒரு மணி நேரம் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் அத்திரைப் படத்தின் இயக்குநர் கே.எஸ்.துரையும் எடிட்டர் ரவியும் பங்கேற்றனர். ஈழத்தமிழர்களாலும் சிறந்த திரைப்படங்களை தயாரிக்க முடியும் என்பதை 'பூக்கள்' நிரூபிக்கும் என்று இயக்குநர் பேட்டியில் தெரிவித்தார்.



* 'த பொப் ஸ்கொயர் பான்ட்ஸ் மூவீ' என்ற ஆங்கிலப்படத்தின் பிரிமியர் காட்சி அமெரிக் காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஹொலிவூட் செக்சன் அரங்கில் சமீபத்தில் நடைபெற்றது. காட்சிக்கு வந்திருந்த நடிகை ஸ்கொர்லெட், நடிகர்கள், பிலபொக்கர், டேவிட் ஹாசெல் ஆகியோரைப்படத்தில் காணலாம்.

* 'ஸாரி எனக்கு கல்யாணமாயிடுச்சி' இப்படி யொரு வித்தியாசமான தலைப்பில் புதிய படம் உருவாகி வருகின்றது. ஸ்ரீமன்,புளோரா, சொர்ணமால்யா ஆகியோர் நடிக்கின்றனர்.


ரஜினியின் மகள் ஐஸ்வர்யா-நடிகர் தனுஷ் திருமணம் சமீபத்தில் நடைபெற்றது.

*தீபாவளிப்படங்களில் 'மன்மதன்' முன்னணியில் இருக்கின்றது. 2 1/2 கோடிக்கு திட்டமிடப்பட்ட போதும் 10 கோடி வரை செலவழிக்கப்பட்டு விட்ட தாம். முழி பிதுங்கிக் கொண்டு வெளியிட்ட தயாரிப்பாளர் இப்போது தான் கொஞ்சம் நிம்மதி யாக மூச்சு விட ஆரம் பித்து இருக்கின்றார். கதைக்கு கதை சொன் னாலும் படம் ஓடலாம் என்பதற்கு 'மன்மதன்' னை உதாரணம் சொல்லலாம். ஏனென் றால் பாரதிராஜா வின் 'சிவப்பு ரோஜா' படத் தின் கதைதான் இது என்று விஷயம் தெரிந்தவர் கள் முணு முணுக் கின்றனர்.

*கமலின் அடு
'மும்பாய் எக்ஸ்
நடிக்க இந்தி ந
மதம் தெரிவித்
இந்தி ஆகிய
கப்படவிருப்பதால்
அஜய் தேவ்கனை
ஒரு குழந்தைக்
இப்படத்தின் மூ
குழந்தையுடன்
விருக்கின்றார்.

*'மதுர' ப
கைகொடுத்தது.
'திருப்பாச்சி'யில்
யுள்ளார். இது
வெளியீடு என்பத
வின்றி வேலைக
கின்றன. அண்ண
தங்கை பாசத்
மாகக்


ஜோதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



* பிரபல இயக்குநர் இராமநாராயணன் தனது 112 ஆவது படமாக 'மண்ணின் மைந்தன்'னை இயக்கவுள்ளார். இப்படத்திற்கு கலைஞர் கருணாநிதி திரைக்கதை,வசனம் எழுதவுள்ளார். சிபி-சத்யராஜ் இணைந்து நடிக்கின்றனர்.


காதல் செய்ய விரும்பு
சந்தோஷ் - ஸ்ரீஜா

# இதைக்கேளுங்க.....!

ந்த வெளியீடான
பிரஸ்' படத்தில்
டிகை கஜோல் சம்
விட்டாராம். தமிழ்,
மாழிகளில் உருவாக்
தான் இந்த ஏற்பாடு.
திருமணம் செய்து
த தாயாகிய கஜோல்
லம் தனது கைக்
திரையில் தோன்ற

டம் விஜய்க்கு
இப்போது
பிஸியாகி
பாங்கல்
ால் ஓய்
ள் நடக்
என் -
த மைய
கொண்ட
கதை.


*பிரகாஸ் ராஜ் தமிழுக்கு அறிமுகப் படுத்திய நாவ்யா நாயர் தற்போது 'அமிர்தம்' படத்தில் நடித்து வருகின்றார்.


நாவ்யா நாயர்
'அமிர்தம்'





# சினிமா உலகம் 1939 முதல் 1960 வரை


K.W.செல்வராஜா

'கணவனே கண்கண்ட தெய்வம்' :- இப்படத்தில் ஜெமினி கணேசன், லலிதா நடித்துள்ளனர். மந்திர தந்திரங்கள், மந்திரவாதியின் பயங்கர சாகசங்கள், கதா நாயகன் யாவற்றையும் வென்று காதலியை காப்பாற்றும் கதை. இதில் ஜெமினி கணேசன் கதாநாயகனாக நடிக்க தெரிவு செய்யப்பட்டதே ஒரு கதையாகும். அப்போ இவர் நல்ல உடற்கட்டும். அழகான ஆண் மகனுமாவார்(காதல் மன்னனல்லவா). இவர் இப்படத்தில் நடிக்க இயக்குநரிடம் கேட்டபோது அவர் மறுத்து விட்டார். ஏனெனில் இக்கதையில் கதாநாயகன் சாபமிடப்பட்டதால் குரூரமான முகமும் கூனலுமாக மாற்றப்படுகின்றார்.

இதற்கு இவர் உயரம், அழகு எதுவும் அப்பாத்திரத்திற்கு பொருந்தாது என்பதால்தான். ஒரு நாள் இயக்குநர் அவர் படம் பிடிக்கும் இடத்தில் சிலருடன் பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு பிச்சைக்காரன் கூனலும் குரூர முகத்துடனும் இவரிடம் வந்து பிச்சை கேட்டான். பார்க்கவே அருவருப்பான இவனை உள்ளே வர யார் விட்டார்கள் என்று பேசிக்கொண்டே அவனைத்தள்ளி விட்டார். அவன் ஊன்றி வந்த ஊன்று கோல் கீழே விழ அவனும் விழுந்த பின் எழுந்து தன் மேக்கப்பை கலைந்தபோது அது வேறு யாருமல்ல, ஜெமினி கணேசன் தான். இயக்குநர் புன்முறுவலுடன் அவரை இப்படத்துக்கு கதநாயகனாக உடனே ஏற்றுக்கொண்டார். இது ஜெமினிகணேசன் அவர்களே ஒரு பேட்டியின்போது கூறியது. இப்போதும் அவர் உயிருடன் இருப்பதால் அவர்களிடமே, இக்கதையின் உண்மையைக்கேட்டு அறியலாம். இப்படமும் அக்காலத்தில் பிரபல்யம் அடைந்தது. 'உன்னைக் கண் தேடுதே' என்ற விக்கி விக்கி படிக்கும் பாடல் பிரசித்தமானது.

'மந்திரிகுமாரி' :- M.G.R. - மாதுரிதேவி, A.R.சகுந்தலா நடித்த படம். S.A. நடராஜன் வில்லனாக நடித்துள்ளார். M.G.R.ரின் 3 ஆவது படமும் மற்றவர்களுக்கு ஆரம்ப படமும் ஆகும். இப்படம் இன்னும் வீடியோவில் இருப்பதால் இலங்கையில் 1999 ஆம் ஆண்டு ரூபவாஹினியில் பார்த்த ஞாபகம். M.G.R.ரின் நடிப்பு, மாதுரிதேவிக்கு புகழ் தந்த படம் என்று இப்படம் பிரசித்தி பெற்றது. இப்படத்தில் திருச்சி லோகநாதனின் பாடல்களான "வாராய் நீ வாராய் போகுமிடம் வெகு தூரமில்லை","உலவும் தென்றல் காற்றினிலே" போன்ற பாடல்களும் M.L.வசந்தகுமாரியின் "ஆஹா ஆஹா வாழ்விலே" என்னும் பாடலும் தியாகம் செய்த மாதுரிதேவிக்கு படத்தின் கடைசியில் அவர் சமாதியில் எல்லோரும் நிற்கும் போது "காதல் பலியாகி நீயும் பெண்களின் தீபமாய்" என்னும் மறக்க முடியாத பாடல்களும் படத்துக்கு மெரு கூட்டுகின்றது.

'ஸ்ரீவள்ளி' :- AVM தயாரிப்பில் வெளியான படம். இதில் T.R மகாலிங்கம் முருகனாகவும் குமாரி ருக்மணி வள்ளியாகவும் நடித்துள்ளார்கள். T.R ராமச்சந்திரனின் நகைச்சுவை வழமையான அவர் பாணியில் நடித்திருந்தார். முருகன் வள்ளியை பிள்ளையாரின் உதவியுடன் காந்தர்வ விவாகம் செய்யும் கதை. இப்படம் அண்மையிலும்கூட இலண்டன் தீபம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது. இதன் வீடியோ பிரதி இருப்பதனால் இளைய தலைமுறையினரும் பார்க்க வசதியாக இருக்கின்றது.

இப்படத்தில் T.R.மகாலிங்கம் பாடிய "காயாத கானகத்தே நின்றுலாவும் காரிகையே","மேயாத மான்" என்ற பாடலை கிட்டப்பா பாகவதர் போலவே பாடியதால் இப்படத்தின் மூலம் T.R மகாலிங்கம் திறமையான பாடகராக இனம் கண்டு கொண்டார். இப்படத்தைத் தொடர்ந்து இவருக்கு பல படங்களில் நடிக்க, பாட சந்தர்ப்பம் இயக்குநர்களால் கொடுக்கப்பட்டது.

'ஓர் இரவு' :- இதுவும் AVM தயாரிப்பு. இதில் A. நாகேஸ்வரராவ், லலிதா, பத்மினி ஆகியோர் திறம்பட நடித்துள்ளனர். பாரதி பாடல்கள் நிறைந்த படம். "துன்பம், நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?" என்ற இனிய பாரதி பாடல் இன்றும் நினைவை விட்டகலாமல் இருக்கின்றது. குமாரி கலாவின் நாட்டியமும் இப்படத்தை சிறப்பிக்கின்றது. இப்படத்தின் பிரதியும் தற்கால தொலைக்காட்சி ஸ்தாபனங்களில் இருப்பதால் ஆசைக்கு இடையிடையே பார்க்க வசதியுண்டு.

'ஏழை படும் பாடு' :- V.நாகையா இதில் கதாநாயகனாகவும் பத்மினி 14 வயது அவரது பேத்தியாகவும் நடித்தனர். பிரபல்யமான ஆங்கில நாவலான 'Less Misserables' என்னும் கதையைத்தழுவியது இதன் கதை. இதில் பொலிஸ் இன்ஸ்பெக்டராக சீதாராமன் வருகின்றார். இப்படத்தில் அவருக்கு ஜாவர் என்னும் பெயரிட்டதால் இந்தப்படத்தின் பின் சீதாராமனுக்கு 'ஜாவர் சீதாராமன்' என்னும் பெயரை படத்தயாரிப்பாளர்கள் சூட்டினார்கள்.

கே.டபிள்யூ.செல்வராஜா, மோர்டன், இலண்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




7

"இதென்ன மாமா உங்கள் மகள் அர்ச்சனாவைப்பற்றிக்கேட்டால் சம்பந்தா சம்பந்தமே இல்லாத யாரோ ஒரு முஸ்லிம் ஆசிரிய ரைப்பற்றிக் கூறுகின்றீர்களே" மலர்விழி இடைமறித்துக்கேட்டாள்.

"அன்வருக்கும் எங்களுடைய குடும்பத்துக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கு மலர். அதனால் தான் அவ ரைப்பற்றி நான் சொல்ல வேண்டி யிருக்கு" அவரிடமிருந்து நீண்ட பெருமூச்சொன்று வெளிப்பட்டது.

"ஆசிரியரைத்தேடி வந்த அறுபது வயதுக்கிழவன் யார் மாமா" தர்சிகா அவசரப்பட்டாள்.

"எல்லாம் காரணமாகத்தான் தர்சிகா" குமாரசாமி தொடர்ந்தார். மேசையில் புத்தகத்தைப்போட்ட ஆசி ரியர் அன்வர், மாணவர்களை ஒரு முறை திரும்பிப்பார்த்து "பிள்ளை களே படிப்பித்த பாடத்தை திரும்பிப் பாருங்கோ" என்று அமைதியாகக் கூறியவராய்ப் படியால் இறங்கி நடந்து சென்றவர், விறாந்தையில் நின்ற வரைப்பார்த்து அதிர்ச்சியடைந்தார்.

"ஆசிரியரைத்தேடி வந்த அறுபது வயதுக்கிழவன் யார் மாமா?" தர்சிகா இடைமறித்துக்கேட்டாள்.

"அவருக்காகக்காத்திருந்தவர் வேறு யாருமல்ல. அந்தப்பெரும் பாவி நானேதான்" சொல்லும்போதே குமார சாமியின் கண்கள் கலங்கின.

"மாமா நீங்கள் அங்கு போய், ஏன் மாமா காத்திருந்தீர்கள்? சொல் லுங்கள் மாமா" மலர்விழிக்கு எல் லாமே குழப்பமாக இருந்தது.

"காரணமாகத்தான் மலர். காரண மில்லாமல் காத்திருக்க எனக்கு என்ன பைத்தியமா? என் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டு விட வேண்டும் என்று தான் காத்திருந்தேன்" மனதில் குற்ற உணர்வோடு கதையைத் தொடர்ந்து கொண்டி ருந்தார் குமாரசாமி.

"வரட்சித்தீ படர்ந் தால் இயற்கை அங்கேயே அடக்கம் செய்யப்படுவது போல் பிடிவாதம் என்ற தீ படர்ந்த தால் தனக்குரிய வற்றை இழக்க வேண்டித்தானே வரும்" அவரது மனம் உள்ளூர வெந்து கொண்டி ருந்தது.

படிப்பித்த புத்தகத்தை மேசையில் வைத்த ஆசிரியர் அன்வர், மாணவர்களை ஒரு முறை பார்த்து "பிள்ளை களே படிப்பித்த பாடத்தை திரும்பிப்பாருங்கோ" என்று அமைதியாகக் கூறி விட்டு படி யால் இறங்கி விறாந்தையை நோக்கி நடந்து வந்தார். விறாந்தையில் நின்ற என்னைக்கண்டதும் அதிர்ச்சியடைந்து போனார் அவர்.

"அன்று என் மனம் நோக எத்தனை விறாப்புடன் பேசியவர் இன்று என்னைத் தேடி வருமளவுக்கு என்ன நடந்து விட் டது?" என்று மனதுக்குள் நினைத்த அன்வரின் சிந்தனை "ஒரு வேளை அர்ச்சனா விடாப்பிடியாக நின்று என் னைத்தவிர வேறு யாரையும் திருமணஞ் செய்ய மறுத்திருப்பாளோ? ஒன்றுமே செய்யமுடியாத நிலையில் என்னிடம் வந் திருப்பாரோ? சோழியன் குடுமி சும்மா ஆடாதல் லவா?" என்று ஒரு புறம் ஆச்சரியமும் "அர்ச்சனா எனக்குக்கிடைப்பாள் போலிருக்கின்றதே" என்ற மகிழ்ச்சி இன்னொரு புறமும் முகத்தில் மாறி மாறி முத்திரை பதித்து நிற்க என்னையே பார்த்தபடி தன்னையே மறந்து நின்றார் ஆசிரியர் அன்வர்.

இத்தனை விடியல்களும் விடிந்தும் விடியாமல் கேள்வியாகத்தெரிந்த அன் வருக்கு அன்றைய விடியல் மட்டும் அர்த்தமுள்ள விடியலாக தெரிந்தது. "இத்தனை இரவுகளும் என் அர்ச்சனாவைத் தரிசிப்பதற்காக என் உறக்கத்தைத் தொலைத்து விட்ட நான் இனி அவளது இனிய நினைவுகளில் என் தூக்கத்தைத் துறப்பேனா?" என்று அவர் உள்ளூர நினைத்திருக்க வேண்டும்.

"மாமா இந்த அன்வர் அர்ச்சனா வைக்காதலித்தது எனக்குத் தெரியாது" மலர்விழியின் முகத்தில் வியப்புக்குறி "அவர்கள் காதலித்தது ஒரு சில ருக்கு மட்டும்தான் தெரியும். அவர் கள் காதலுக்கு குறுக்கே நின்று அவர்கள் காதலைப்பிரித்தவன் நான் தான்" என்று தன்னைச்சுட்டிக் காட் டிய குமாரசாமி கதறியழுதார்.

"அப்பா அழக்கூடாது. குமாரசாமி யின் அருகில் உட்கார்ந்திருந்த அபி நயா அவரது கண்களை தனது பிஞ்சு விரல்களால் துடைத்துவிட்டாள்.

"அப்பா இல்லை. தாத்தா" சொல்லிக்கொடுத்தாள் மலர்விழி.

"அப்பா,தாத்தா" என்று அழைத் தபடி குமாரசாமியின் முகத்தைப் பார்த்தாள் அபிநயா.

குமாரசாமிக்கோ அவளது முகத் தைப் பார்க்க பரிதாபமாக இருந்தது.

"அப்பா தாத்தா இல்லை அபி நயா. வெறும் தாத்தா மட்டும் தான்" மலர்விழிக்கு தன் மகள் மேல் அனு தாபமாக இருந்தது.

"வெறும் தாத்தா. அழாதீங்கள் வெறும் தாத்தா" அபிநயா சொன்ன போது அவளை எல்லோரும் திரும் பிப்பார்த்தனர். ஏளனமாகவல்ல, வருத்தத்தோடு.

"இவள் இப்படித்தான் மாமா. யாரைக்கண்டாலும் அப்பா, சித் தப்பா, மாமா என்று சொல்லிக் கொண்டு அவர்களருகில் உட்கார்ந்து விடுவாள். எதுவும் விளங்காத இப்படி ஒரு மகளை வைத்துக்கொண்டு உதவி யெதுவுமில்லாத நான் படும்பாடு பெரும்பாடு" என்று சொல்லும் போது பெருமூச்சொன்று அவளிட மிருந்து வெளிப்பட்டது.

"மாமா அவளின்ரை கதையிருக் கட்டும். ஆசிரியரின் கதையைச் சொல் லுங்கோ" மீண்டும் அவசரப்படுத்தினாள் மலர்விழி.


ஆசிரியர் தன் முன்னால் வந்து நின்ற நினைவு குமாரசமயின் கண் களில் வந்த நின்றது."ஓமோம் சொல் லுறன்" என்னைப்பார்த்தபடி எதுவுமே பேசாமல் நின்ற அன்வரிடம் நானே பேச்சுக்கொடுத்தேன். "தம்பி என் னைத் தெரிகிறது தானே. நான் தான் அர்ச்சனாவின் அப்பா குமாரசாமி. உங்களோடு பேசவேணும்" என்ற என்னை இடைமறித்து "எதுக்கும் என்ரை றூமுக்கு போய் ஆறுத லாகக்கதைப்பம். லீவு குடுத்திட்டுப் போவம்" என்ற அன்வர் லீவு கொடுப் பதற்காக பாடசாலை அலுவலகத் துக்குள் நுழைந்தார்.

திரும்பி வந்த அவர்,"வாங்கோ ஐயா" என்றபடி முன்னே செல்ல நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவயோகமலர்



பின்னால் சென்றேன். நாமிரு வரும் முன் நோக்கி நடந்தாலும் எம் இருவரினது மனங்களும் பின்நோக்கியே சென்றன.

அன்வருக்கு அர்ச்சனாவின் நினைவாகவே இருந்தது.ஆனால் என்னிடம் அவளைப்பற்றி ஒரு வார்த்தை கூடக்கேட்கவில்லை. அதற்கு அவரது தன்மானம் இடங்கொடுக்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும்.

"அன்வரும் அர்ச்சனாவும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதுதான் ஒருவருக் கொருவர் அறிமுகமானவர்கள். ஒருவருக்கொருவர் உயிருக்குயி ராக நேசித்தனர். காதல் வானில் ஜோடிப்புறாக்களாக பறந்து மகிழ்ந்தனர். ஆனால் எனக்கு இது பற்றி எதுவுமே தெரியாது.

காலமும் கரைந்து படிப்பும் முடிய இன்னும் இரண்டே நாட் கள் தான் இருந்தன. அன்வர் தும்பறைப் பல்கலைக்கழகத்தில் ஒரு வருடத்துக்கு மட்டுமே விரிவுரை யாளராக கடமையாற்றப் போகின்றார்.

ஆனால், அர்ச்சனாவோ பரீட்சை முடிவுகள் வந்து வேலை கிடைக்கும் வரை வீட்டில்தான் இருக்கப்போகி றாள். இந்தநேரத்தில் தான் பிரிவுத் துயர் அவர்களை வாட்டி வதைத் திருக்க வேண்டும்.

அறைக்குப்போன அன்வர் தன் பழைய நினைவுகளை என்னிடம் சொன்னார்.

"ஐயா நான் உங்களிடம் அர்ச்ச னாவை எனக்குத்திருமணம் செய்து தாருங்கள் என்று கேட்பதற்கு முன் நாம் இருவரும் மணக்கும்பான் கடற் கரையில் குந்தியிருந்து நம் பிரிவுத் துயர் பற்றி வருத்தப்பட்டோம். நம் எதிர்காலம் பற்றியும் பேசிக்கொண் டோம். நம் காதல் கனிந்து திருமண பந்தத்தில் முடியவேண்டும் என்ப தில் நாம் குறியாக நின்றோம்.ஆனால் அர்ச்சனா பயந்தவள். உங்கள் விருப் பப்படிதான் என்னைத்திருமணம் செய் வேன் என்று பிடிவாதமாக நின்றாள்.

நாம் மணக்கும்பான் கடற்கரை மண லில் இருந்த போது அவள் மௌன மாக இருந்தாள். கடற்கரை மணலில் தனது வலது கை விரல்களால் கோலங் களை வரைந்து அழித்தபடி உட் கார்ந்து இருந்தாள். அன்வர் சொல்லிக் கொண்டிருக்கும்போது நான் குறுக்கிட் டேன். "தம்பி நீ அப்போது அர்ச்சனா விடம் எதுவுமே கேட்கவில்லையா?" "கேட்டேன். அவளும் பதில் சொன் னாள். சொல்கிறேன் கேளுங்கள்" அன் வர் சொல்லத் தொடங்கினான்.

"அர்ச்சனா"

"ம்"

"நாம் இன்னும் இரண்டே நாட்களில் பிரியப்போகிறோம். எமது திருமணத்தைப் பற்றி நீ ஏன் பேசுகிறாயில்லை?" அன் வர் சொல்வது அர்ச்சனாவின் காதுகளில் விழுந்த போதும் அவள் பதில் ஏதும் சொல்லவில்லையாம்.

ஆனால் அன்வர் விட்டுவிடவில்லை யாம். "அர்ச்சனா நான் கேட்ட கேள் விக்கு நீ ஏன் பதில் சொல்ல வில்லை. உன் அப்பாவிடம் நம் காதல் விவ காரத்தைக் கதைக்கும்படி சொன்னேனே கதைத்து விட்டாயா?" மௌனமாக மணலில் கோலம் வரைந்து கொண் டிருந்த அர்ச்சனா தலை நிமிர்ந்தாளாம்.

"என்ன சொன்னாளாம் மாமா" மலர் விழி அவசரப்பட்டு இடைமறித்தாள்.

"சொல்லுறன் மலர். இன்னுமே அப் பாவுடன் இதைப்பற்றிக்கதைக்கவில்லை அன்வர். இனிமேலும் இதைப்பற்றி அவ ரிடம் கதைக்க முடியாது" என்றாளாம். "எனக்குத் தெரியும் நீ சொல்லமாட்டாய் என்று" அன்வர் ஆத்திரப்பட்டபோது "அப்பா பொல்லாதவர். மானத்தைப்பெரி தென்று எண்ணுபவர். ஒரு நாட்டை ஆள் வதை விட மானத்தை ஆள்வதே மேல் என்று நினைப்பவர் அவர். அதுதான் அவருடன் இது பற்றி பேச எனக்குப்பய மாக இருக்கு" என்றாளாம்.

"காதலிக்கிறது அவமானம் என்று உன் அப்பா கருதுகிறாரா? காதலின் மானம் திருமணத்தில் தான் தங்கியிருக்கின் றது என்று அவரிடம் எடுத்துச்சொல்ல லாமல்லவா?" அன்வர் தனது ஆதங்கத் தைக் கொட்டினாராம்..

"காதலிக்கிறது அவமானமென்று நினைக்கின்றாரோ என்னமோ எனக் குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் எனக்குத் தெரியும். இனம் விட்டு இனம், மதம் விட்டு மதம் மாறிப் போவதை அவர் அவமானம் என்று நினைப்பவர்.

ஹிட்லரின் மானம் சர்வாதிகாரத் தில் இருந்திருக்கின்றது. நெப்போலி யன் வீரத்தால் மானம் செய்தவன். காந்திஜியின் மானம் அகிம்சையில் வசித்தது. ஆனால் எனது மானம் எனது வீட்டின் பெண்பிள்ளையால் தான் செய்யப்பட வேண்டும் என்று அடிக்கடி மானம் பற்றிக்கூறி என் னைப்பயமுறுத்துவார். அதுதான் எனக்குப்பயமாக இருக்கிறது" என்று கூறினாளாம் அர்ச்சனா.

"அதுக்கு அன்வர் என்ன மாமா சொன்னாராம்?"மலர்விழி விசாரித்தாள்.

"அன்வர் என்ன சொல்லியிருப்பார் மலர். நீ ஒரு பணக்காரி.நான் வறிய குடும்பத்தில் பிறந்தவன். நீ இந்து.நான் இஸ்லாமியன். இருவரும் சேர முடி யாது என்று நீ நினைத்திருந்தால் என்னை ஏன் காதலித்தாய்? இப்படி யான தடைகள் இல்லாத இடமாக உன் அப்பாவின் மானத்துக்குப்பங்க மில்லாத இடமாகப் பார்த்து விரும்பி யிருக்கலாம் தானே" அவர் வெறுப் போடு பேசினாராம்.

தொடரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வேட்டை நாய் தேடிய சுதந்திரம்

-தாரா

மனிதனுக்கு அடங்கி வாழ்வதால் விலங்குகளால் முன்னேற முடியாதுள்ளதாக விலங்குகள் மத்தியில் பெரும் விரக்தி ஏற்படவே அவைகள் ஒருநாள் கூடின. "வளர்ப்பு விலங்குகள் விடுதலை பெறுவதென்பது எப்படியோ பிரச்சினை தான். ஆனால் காட்டு விலங்குகளும் சுதந்திரமாக வாழ முடியவில்லையே! மனிதனின் கொடுமை எல்லை மீறி விட்டது" என்று முன்னுரையை கூறி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தது குரங்கு. என்ன செய்யலாம்? மனிதன் கருவிகளைக் கையாளப்பழகிக்கொண்டான். அதனால் அவனை வெல்லவே முடியாது. விலங்குகளை மட்டுமன்றி கருவிகளை வசப்படுத்திக்கொண்ட மனிதன் கருவிகளற்ற மனிதர்களையும் தான் அடக்கி வைத்திருக்கின்றான் என்றது ஒட்டகம்.

"எங்களிடமும் தான் கருவிகள் உள்ளனவே. கலைமானிடம் கொம்புகள், கரடி, புலியிடம் நகம், யானையிடம் துதிக்கை, சிங்கத்திடம் கூரிய பற்கள், இப்படியாக எம்மிடமும் தாராளமாக கருவிகள் உள்ளனவே" என்றது கரடி."தற்பாதுகாப்பு கருவிகள் உள்ளன தான். ஆனால் மனிதனிடம் உள்ளது போல் நம்மிடம் பகுத்தறிவு இல்லையே! தந்திரத்திலும் சூழ்ச்சியிலும் எம்மால் மனிதனை எட்ட முடியுமா" என்ற கேள்வியை எழுப்பியது தந்திரத்தில் ஜாம்பவானான நரி. தமது ஒரு வேளை எலும்புத் துண்டுக்காக எமது இனத்தை மனிதனுக்கு காட்டிக்கொடுக்கும் விலங்குகளை முதலில் திருத்த வேண்டும் என்று கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்கான ஆலோசனைக்குழுவுக்கு நரியை தலைவராக தெரிவு செய்தன விலங்குகள்.

தனது எஜமானுக்காக வேட்டையாட புறப்பட்டு வந்த வேட்டை நாயொன்று ஒரு முயலை படுவேகமாக துரத்திச்சென்றதை அந்த வழியால் சென்ற ஆலோசனைக்குழுத் தலைவர் அவதானித்தார். வேகமாக பாய்ந்தோடிய வேட்டை நாயை இடைமறித்தார். "முயலை நீ யாருக்காகப் பிடிக்கின்றாய்?" என்று கேட்டார். "எனது எஜமானனுக்காக" என்றது வேட்டைநாய்.



"முயலைப் பிடித்துக் கொடுத்தால் உனக்கு என்ன சன்மானம் கிடைக்கும்?" "எலும்புத்துண்டுகளைத்தருவார்"

"சரி உனது உணவை நீயே தேடிக் கொள்ளும் திறமை உனக்கிருக்கிறதல்லவா?" ஆம் என்பது போல் தலையை ஆட்டியது வேட்டை நாய். நரி தொடர்ந்தது:- "வேட்டையாடிப்பிடிக்கும் முயலை நீயே தின்னாமல் எஜமானனுக்கு கொடுத்து விட்டு எலும்புகளை மட்டும் தின்ன உனக்கு வெட்கமாக இல்லையா? இனிமேல் நீ ஒன்று செய். உனக்கு பசியெடுக்கிற நேரங்களில் ஒரு பிராணியை மட்டும் பிடித்து தின். மீதி நேரங்களில் எம்மைப்போல் சுதந்திரமாக சுற்றித்திரியலாமே!" என்று கண்டிப்பான ஆலோசனையை வழங்கினார் நரியார்.

நரியாரின் ஆலோசனை சரியாகத்தான் பட்டது வேட்டை நாய்க்கு. நரியை அனுப்பி விட்டு தூரத்தே பார்த்து நின்ற எஜமானை திரும்பிப்பார்த்து அது ஆத்திரத்துடன் குரைத்தது. "இத்தனை காலமும் என்னை கோடரிக்காம்பாக பாவித்தாயே! துரோகி!" என எச்சரித்து விட்டு காட்டினுள் துள்ளித்துள்ளி மகிழ்ச்சியுடன் ஓடியது. முயலும் எப்போதோ ஓடி மறைந்து விட்டது. எஜமானனுக்கும் மட்டும் ஆத்திரம் அடக்கமுடியவில்லை."இந்த மிருகங்கள் ஒற்றுமைப்பட்டால் எங்கடை பாடு தொப்பிதான்" என்றபடி வேகமாக வீட்டை நோக்கி நடந்தார். அங்கே நிற்கவே அவருக்கு பயமாக இருந்தது.



பெயர்: அக்ஷனா சிவகுமார்
முகவரி : 42, 5/4, அருதுஸ்ஸா ஒழுங்கை, கொழும்பு - 06
வயது : 7 (02.11.1997)
வகுப்பு : தரம் - 2
பாடசாலை : கொ/ இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு-06
பொழுதுபோக்கு : கதைப்புத்தகம் வாசித்தல், படங்கள் வரைதல், அக்காவுடன் விளையாடுதல்

# தமிழ் உலகம் மழலைகள் மன்றம்



பெயர்: என்.எம்.நஸீர்
முகவரி : 64/18 B சங்கமித்தை மாவத்தை, கொழும்பு-13
வயது : 10
வகுப்பு : தரம் - 5
பாடசாலை : ஹமீட் அல் ஹுசைன் கல்லூரி, கொழும்பு -12
பொழுதுபோக்கு : படங்கள் வரைதல், சிறுவர் நிகழ்ச்சிகள் பார்த்தல், விளையாடுதல்



பெயர்: அபிராமி நம்பியாரூரன்
முகவரி : விழிசிட்டி, தெல்லிப்பழை மேற்கு, கோண்டாவில்.
வயது : 7 (18.10.1997)
வகுப்பு : தரம் - 2
பாடசாலை : யா/மகாஜனாக்கல்லூரி, தெல்லிப்பழை.
பொழுதுபோக்கு : படங்கள் வரைதல், நடனம் ஆடுதல், தொலைக்காட்சி பார்த்தல்

தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்தவர்களாக சேர்வதன் மூலம் சிறார்கள் பல நன்மைகளை அனுபவிக்கலாம். அங்கத்தவர்களாக இருக்கும் சிறார்கள் எழுதி அனுப்பும் ஆக்கங்கள் மட்டுமே இந்தப் பக்கத்தில் பிரசுரிக்கப்படும்.

அது மட்டுமல்லாது, அடிக்கடி அங்கத்தவ சிறுவர்களுக்கிடையில் பல விதமான போட்டிகளை நடாத்துவதன் மூலம் பரிசுகளை வழங்கவும் திட்டமிட்டுள்ளோம்.

எனவே விரையுங்கள் செல்வங்களே! தமிழ்உலகம் மழலைகள் மன்றத்தில் அங்கத்தவர்களாகச்சேர, நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்.

உங்கள் பெயர், முழுமையான விலாசம், தொலைபேசி இலக்கம் மற்றும் உங்கள் பொழுது போக்குகள் எல்லாவற்றையும் எழுதி அண்மையில் எடுத்த உங்கள் புகைப் படத்துடன் அனுப்பிவையுங்கள். உலகிலுள்ள சிறுவர்கள் எல்லோரையும் உணர்வு ரீதியாக ஒன்றிணைக்கும் திட்டம்

தமிழ்உலகம் மழலைகள் மன்றம்.

முழுப்பெயர்............................................
வயது :..................................................
முகவரி:..................................................
............................................................
தொலைபேசி :.........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கொன்றை வேந்தன்



51) நீரகம் பொருந்திய ஊரகத்து இரு.
(நீர் வளப்பம் தனக்குள்ளேயே பொருந்திய ஊரினிடத்தே குடியிரு)
52) நுண்ணிய கருமமும் எண்ணித்துணி.
(சிறிய செயலையும் நன்கு ஆலோசித்துப் பின் செய்யத்துணிவு கொள்)
53) நூல் முறை தெரிந்து சீலத்து ஒழுகு.
(நீதி நூல்களில் சொல்லி உள்ள விதிமுறைகளை நன்கு அறிந்து நல்லொழுக்க வழியைப் பின்பற்று)
54) நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை.
(நம்முடைய மனதுக்குத் தெரியாமல் மறைக்கப்பட்ட வஞ்சகம் யாதொன்றும் இல்லை)
55) நேரா நோன்பு சீர் ஆகாது.
(மனத்திற்கு பொருந்தாத தவமானது செம்மையாக நிறைவேறாது)

தொடரும்

# தெரிந்து கொள்ளுங்கள்



* உலகின் மிகப்பெரிய குவளை (Coffee mug).இது 20 அடி உயரமான இந்தக்குவளையின் விட்டம் 14 அடியாகும். 3.5 தொன் எடையுள்ள இந்த இராட்சத குவளை 1998 இல் இந்தியாவில் தயாரிக்கப்பட்டதாகும்.

* வடக்கு ஆபிரிக்காவில் உள்ள சகாரா பாலை வனம் உலகின் மிகப்பெரிய பாலைவனமாக கருதப் படுகின்றது. இது கிழக்கிலிருந்து மேற்காக 3200 மைல்



வரையும் வடக்கிலிருந்து தெற்காக 1400 மைல் வரையும் விசாலமானது. சகாரா பாலைவனத்தின் பரப்பளவு 3,579,000 சதுர மீற்றர்களாகும்.

## விஞ்ஞான விளக்கங்கள்

1) கடலில் சிறிய ஊசியைப்போட்டால் வேகமாக மூழ்கி விடுகின்றது. ஆனால் பெரிய கப்பல் மிதக்கின்றது. இது எப்படிச்சாத்தியமாகின்றது.

மிதக்கும் விதியின்படி (Law of Floutation) நீரிலிடப்படும் ஒரு பொருளின் நிறை அப்பொருளின் பாரத்தால், மேல் தள்ளப்படும் நீரின் நிறைக்கு சமனாக இருக்கில் மிதக்கும் என்பதாகும். ஊசியால் மேல் தள்ளப்படும் நீர், ஊசியின் நிறையிலும் குறைவு, எனவே ஊசி நீரில் மூழ்கி விடுகின்றது. கப்பல் அதன் வடிவ அமைப்பால் அதிக நீரை மேல் உந்துகின்றது. கப்பலின் நிறையும் அதனால் மேல் தள்ளப்படும் நீரின் நிறையும் சமனாகும். அதனால் கப்பல் நீரில் மிதக்கின்றது.

2) குளிர்சாதனப்பெட்டியொன்றினுள் இருக்கும் அதிகுளிரேற்றியினுள் (Freezer) நன்கு மூடப்பட்ட தண்ணீர் நிறைந்த போத்தல் ஒன்றினை வைக்கின்றீர்கள். மறுநாள் பார்க்கும்போது நீர், ஐஸ் கட்டியாகி இருப்பதுடன் போத்தல் உடைந்திருப்பதையும் காணலாம். போத்தல் ஏன் உடைந்தது.

அதிகுளிரேற்றியினுள் போத்தல் வைக்க்பபட்டதால் நீர் ஐஸ்கட்டியாகியது. நீர் ஐஸ்கட்டியாக மாறும்போது தன் பருமனில் 10% அதிகரிக்கும். அதனால் போத்தலினுள் இடம் போதாமல் போகவே போத்தல் வெடிப்புற்றது.

தொகுப்பு பி.சஞ்சீவன், கிளிநொச்சி.

# இரு கடல்கள்

பாலஸ்தீனத்தில் இரு கடல்கள் உள்ளன. ஒன்று சுத்தமான நீர். கொண்டது. மீன்கள் உள்ளன. அதன் கரையோரம் பச்சைப்பசேலென இருக்கும். மரக் கிளைகள் அங்கு பரந்து நிற்கும். வேர்கள் நீண்டு சென்று அதன் நீரில் தாகம் தீர்க்கும். சிறுவர்கள் கரையில் விளையாடுவார்கள். பலர் அதனால் பயன் பெற்றனர்.ஜோர்தான் நதி நீரினால் இது நிரம்புகின்றது. மனிதர்கள் தமது குடியிருப்புகளை அங்கு அமைத்துக்கொள்கின்றார்கள். உயிரினங்கள் யாவும் அங்கு மகிழ்வுடனிருக்கின்றன.

தென்பகுதியில் ஜோர்தான் நதி இன்னுமொரு கடலுக்குள் சென்று முடிகின்றது. இங்கு மீன்கள் கிடையாது. இலை குழைகளின் சலசலப்புகள் இப்பகுதியில் கேட்காது. வசிப்பவர்கள் இல்லை. பார்க்க வருபவர்கள் இல்லை. பறவைகளின் கீதம் இல்லை. சிறுவரின் சிரிப்பொலி இல்லை. நீரின் மீது நிழல் விழுவதுமில்லை. விலங்குகள் வந்து நீர் குடிப்பதுமில்லை.

அருகருகேயுள்ள இவ்விரு கடல்களினதும் இயல்புகளில் இவ்வாறான வித்தியாசமா? இந்த வித்தியாசத்தை ஏற்படுத்தியது ஜோர்தான் நதியல்ல. ஆனாலும் வேறுபாடு உண்டேதான். கலிலிக்கடல் நதி நீரைப்பெற்றாலும் அதனை தனக்கென்று மட்டும் தேக்கி வைப்பதில்லை.

வந்து சேரும் நீரை அப்பால் செல்ல விடுகின்றது. அடுத்த கடலோ சாக்கடல். அது வஞ்சகத்தனமாக தன்னிடம் வரும் நதி நீரை தனக்கு மட்டுமென்று வைத்துக் கொள்கின்றது. அதற்கு தாராளகுணம் கிடையாது. வருவதெல்லாம் தனக்கு என்றே இருக்கின்றது.

கலிலிக்கடல் தானும் வாழ்கின்றது. பிறருக்கும் கொடுக்கின்றது. சாக்கடல் எவருக்கும் எதையும் கொடுப்பதில்லை. பெயருக்குப் பொருத்தமான பொல்லாத கடல். பாலஸ்தீனத்தில் கடல்கள் இரண்டு. உலகில் மனிதர்களும் இரண்டு வகை.

-பூரணி, இந்து மகளிர் கல்லூரி,
வெள்ளவத்தை.

# அழியாத செல்வமொன்றுண்டு

அழியாத செல்வமொன்றுண்டு - மனித
சிந்தனை ஒன்றாய்த்திரண்டு - வந்த
தெவிட்டாத இனிய கற்கண்டு

பகுத்தறிவை நன்கு தீட்டு - அதுதான்
மடமைக்கு வைக்கின்ற வேட்டு - முன்னோர்
புகுத்திய பொய்மையை ஓட்டு -
வாழ்வைப்புதுக்கிடல் செய்து நீ காட்டு

கத்தி போற் சிந்தனைக்கூர்மை - நன்கு
காரியம் செய்திடும் நீர்மை - பேச்சில்
சத்தியம் தவறாத நேர்மை - இவைகள்
அறிவுனக்(கு) அளித்திடும் சீர்மை!

அன்பிலே அறிவிலே மிக்கோர் - நல்ல
வாழ்வினால் உயர்நிலை பெற்றோர்- இவர்கள்
பொன்னான வாழ்வினை நோக்கு- அவற்றை
புத்திக்கு உரமாக ஆக்கு

- நன்றி- புதியபூக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிவலம்

## குளத்திற்கு அவர்கள் மேல் கோபமில்லை

அந்தக்
குளத்தினை நோக்கியே
பலர் கல்லெறிந்து கொண்டார்கள்

குளத்தை
மூழ்கடிக்க வேண்டும் என்பதே
அவர்களின் எதிர்பார்ப்பு
ஆனாலும்
இன்னும் இன்னும் உயர்ந்தேறியது
நீர்ப்பரப்பு...

அழுக்கை கழுவவும்
சிலர் இடைஇடையே வந்து
போயினர்


குளிக்க
வந்த ஒருவனோ
முகத்தை
முகமூடிக்குள்ளே புதைந்திருந்தான்

மற்றைய
ஒருவனோ
முகமூடியினையே
முகமாக்கிக் கொண்டான்...!

தூய்மை
வேடம் தரிக்க
வந்த ஒருவனோ
குளத்தினையே அழுக்காக்கிக்கொண்டான்

வருபவர்களை
தூய்மையாக்கிட
தன்னையே
அழுக்காக்கிய
அந்த
குளத்தினை நோக்கியே
இப்போது அவர்கள்
கல் எறிந்து கொண்டிருந்தார்கள்
ஆனாலும் குளத்துக்கோ
அவர்கள் மீது கோபமிருக்கவில்லை
மனிதஇயல்புகள் பற்றி
அது நன்றாகவே
அறிந்திருந்தது..?

மட்டுவில் ஞானக்குமரன்
(ஜேர்மனி)



## வடக்கும் தெற்கும் நல்பெற்றோராகி.

பெத்லகேமில் பூவொன்று
புன்னகைத்து பூத்திட
உத்தம தேவனால்
பூவுலகு அந்நாள்
புதுப்பொலிவு கண்டது
பத்திரமாய் குழந்தையை
உதரத்தில் தாங்கிய
பயபக்தி மரியாளும்
நீதி மான் எனப்போந்த
சூசை எனும் நல் காவலனும்
பெற்றெடுத்த குழந்தையை
பெருமை கொண்ட
பெரு ஏதோதிடமிருந்து
உற்ற துணை கொடுத்துக்காத்து
தந்து அன்று நம்மைக்காத்தார்

மலரவே மனிதம் என்று
மாண்புடன் மனிதனாகி
மகிழ்ந்திடும் இப்பாலன் யேசு நம்
மனம் நிறைய பிறக்கணுமே
மயக்கங்கள் நீக்கியெமது
மாயை வேடம் கலைந்திடணும்
தயக்கங்கள் தவிர்த்திட்டே
அன்பால் நாம் இங்கே
தனியுலகம் அமைத்திடணும்

வாழ்கவே அன்பு நீதி
என்றும் வளர்ந்திடணும்
ஏற்றம் கொள் சமாதானம் இங்கே
வாழ்கவே வையகம் என்று யாம்
வாழ்ந்திடுவோம் மனிதம் ஏற்றி
நெகிழ்ந்திடும் உள்ளம் கொண்டு நம்
நிகழ்காலம் மாறி உதித்திடலாம்

இலங்கை எங்கள் இதயமாகி
இன அடிமை முற்றாய் மறைந்திடணும்
வடக்கும் தெற்கும் நல்பெற்றோராகி
அமைதிப்பாலன்(ம்)
ஒன்றை பெற்றிடணும்
வாழ்த்துக்கள் கூறி உம்மை
வணங்குவோம் உம்மை இன்றே
பிறந்திடும் உமக்கு நாம்
பிறப்பு விழா எடுக்கையிலே....

அ. றொபின் கொன்பியூசியஸ் அ.ம.தி,
யாழ்ப்பாணம்.

## அழகான அந்தப்பனை மரம்

பசிக்குப் பழம் ருசிக்கு நுங்கு
தாகத்திற்குப் பதநீர் தேநீருக்கு
கருப்பட்டி
காற்றுக்கு வேலி வேலிக்கு ஓலை
தலைக்கு தொப்பி கைக்கு விசிறி

ஊஞ்சலுக்குப் பலகை உத்தரத்திற்கு சலாகை
ஆட்டத் தொட்டில் பூட்டக் கதவு
கிணற்றுக்குத் துலா கொட்டிலுக்கு மட்டை
இறைக்கப்பட்டை இழைக்கக் கடகம்
சுவடிக்கு குருத்து குலைக்கு விருந்து
மனிதருக்கு பனாட்டு மாட்டுக்கு கோம்பை



படுக்கப் பாய் இருக்கக் கொட்டு
கிளிக்கு பொந்து அளிக்கு மது

குண்டுக்கு உடல் உயிருக்கு தோழன்
உறுதிக்கு வேர் மழைக்கு உச்சி
கூழுக்கு ஒடியல் சுவைக்கு புழுக்கொடியல்
உயரத்தில் கோபுரம் உணர்வின் மகுடம்

கற்பக விருட்சமே காலப் பெட்டகமே
பாரம்பரியம் தந்த தமிழ் கொடையே
உயர்ந்து ஓலை பரப்பி நிறைந்து காய்க்கும்
பனையே
தமிழீழத்தின் தல விருட்சமே, பரந்து வாழ்க
உன் சந்ததி

உரும்பையூர்- தேவராணி சிவராஜா,
சரே-கனடா

## கொலை மலிந்த பூமி

கதி கலங்கி விடியும் எம்
காலைப்பொழுதுகள்!
எங்கள் மணித்திருநாட்டில்
ஒன்றாய் இரண்டாய்
அங்கங்கே
மலிந்தன பிணங்கள்!

தேடித்தேடித்
துரத்தித் துரத்தி
கொலை மலிந்து போயிற்று
பாதாளக்கோஷ்டியின் பரஸ்பர விரோதம்
ஆதாரமில்லா ஆயுதக்குழுக்கள்,
மதப்பிரிவுகளின் முறுகல், முழக்கம்
குடும்பத்திடையே குத்து வெட்டு

என்றவாறாக,
எங்கள் மணித்திருநாட்டில்
கொலை மலிந்து போயிற்று!
கை பிசைந்து, தலை சொறிந்தபடி
காவல் நிலையங்கள்
மெய்ம் மறந்து நிற்கும்!

மனித உயிரின் மாண்புகள் எல்லாம்
பிணங்களாய்ப் புதையும்
சிதைகளில் எரியும்
அதோ,
கூக்குரலிட்டபடி கொலையுண்ட ஒருவனின்
கூட்டினைத்தாங்கி உறவுகள் போக,


தெருவோரச் சொறிநாய்
எக்காளமிட்டுக் குரைக்கின்றது

ம. சண்முகநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி இல.14



பெயர்:..........................................................................

முகவரி:........................................................................

...................................................................................

## இடமிருந்து வலம்

1) தற்காத்துக்கொள்ளவும் ஆயுதம் வைத்திருக்காதவர் (6)
10) குதிரை - ஒத்த கருத்துள்ள சொல்(2)
13) ஒரு வாக்கியத்தின் எழுவாய்க்கான செயலின் முடிவைத் தெரிவிப்பது (4) (குழம்பியுள்ளது)
14) அரசன், அரசி அமரும் அலங்கார இருக்கை (4)
16) ஓர் இணையாக வழங்கி வருவதும் பிரித்தால் பொருள் தராததுமான சொல்லை குறிக்கும் சொல் (8)
20) திடீர் வெள்ளத்தால் பெருக்கெடுத்து ஓடும் ஆறு (4) (குழம்பியுள்ளது)
21) சாய்வான விளிம்பை உடைய பெரிய தட்டு (5)
22) தகராறு என்றும் சொல்லலாம் (5) (குழம்பியுள்ளது)
24) கல்லை உடைக்க அல்லது காய்ச்சிய இரும்பை அடித்து நீட்டப் பயன்படுத்தும் பெரிய சுத்தியல் (5)
25) தரையில் போரிடும் ஆயுதம் ஏந்திய இராணுவ பிரிவு (5)
26) அதிகாலையை வரவேற்கும் முறையில் பாடும் ராகம் (4)
28) இந்தப் பூவின் வாசனைக்கு பாம்புகள் வரும் என்கின்றார்கள் (4)

ஒரு வருட தமிழ்உலகம் இலவச பிரதிகளையும் 10 ஸ்ரேலிங் பவுண்களையும் பரிசாகப்பெறுங்கள்.



29) தமிழீழ விடுதலைப்போராட்டத்தில் வீரமரணம் அடைந்த முதல் கரும்புலி (4) (குழம்பியுள்ளது)

## வலமிருந்து இடம்

6) இயற்பெயருக்குப்பதிலாக பயன்படுத்தும் கற்பனைப்பெயர்(5)
8) நபர்கள் அல்லது நாடுகளுக்கு இடையிலான நேச உறவு (5)
11) நான்கு வகையான தமிழ்ச்செய்யுள்களுள் ஒன்று (2)
15) முன்னேற்றத்திற்கு தேவையான மாற்றங்களை ஏற்கத் தயங்காத போக்கு (5)
19) போதை தரும் ஒரு வகைச்செடி (3)
23) திட்டம் கோரிக்கை முதலியவை பற்றி முடிவெடுப்பதற்கான ஆய்வு (5)
27) அனைத்தையும் அறிந்து உணரும் மெய்யறிவின் தோற்றம் (5)

## மேலிருந்து கீழ்

1) புகைப்படம்- இப்படியும் சொல்லலாம் (6)
2) உபாயம் என்றும் சொல்லலாம் (3)
3) பயிரிடப்படாமல் கிடக்கும் வெற்றுநிலம் (3)
4) முற்காலத்தில் யாழ் முதலிய இசைக்கருவிகளை இசைத்துப் பாடும் கலைஞன் (3)
5) பணம், நகை முதலியவற்றைப் பாதுகாப்பாக வைக்கும் இரும்புப்பெட்டி (5)
6) பெருமகிழ்ச்சி (4) (குழம்பியுள்ளது)
7) கூசாமல் பொய் சொல்பவன் (4)
8) இறந்த வீரனின் நினைவாக அவனது பெருமையை எழுதி நடும் கல் (4) (குழம்பியுள்ளது)
9) அரசுக்கருவூலம் (4)
12) ஆறு கடலோடு கலக்கும் இடம் (5)
14) எழுத்து (5) (குழம்பியுள்ளது)
17) சஞ்சலம் கலந்த துக்கம் (4)
18) கிராம அதிகாரி (3)
22) உரையாடு (4)
23) தெய்வத்துக்கு இலையில் வைத்து அளிக்கும் உணவு (4)

## கீழிருந்து மேல்

11) மனதுக்குள் மறைத்து வைத்திருக்கும் பழி வாங்கும் எண்ணம் (3)
13) அற்பனுக்கு இது வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான் (3)

### குறுக்கெழுத்துப்போட்டி இல: 12 இற்கான விடைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 க | ர் | த் | த 2 | ர் | ■ | ■ | 3 வ | ப் | து 4 | ர் | பு 5 |
| 6 வ | த | ம் | ந் | ன | ■ | 7 வி | சை | ■ | பா | ■ | ழு |
| ள | 8 மா | ■ | 9 த | டா | க | ம் | ■ | க் | கை | ரு | தி 10 |
| ம் | ■ | 11 தி | ம் | பு 12 | ■ | ம் | ண | ப | ப் | ர் | அ 13 |
| ■ | ய் | வா | க | ழு 14 | ■ | 15 கு | டி | யு | ரி | மை | சி |
| 16 கா | ப் | பீ 17 | டு | க் | ■ | ம் | ர | கா | வீ 18 | சு 19 | ர |
| 20 ஊ | ட் | டி | ■ | 21 க | ள் | வ | ன் | ■ | ரா | ர | த் |
| டு | கூ | கை 22 | ■ | ம் | ப | ற் | 23 சி | ■ | ப் | ண் | தை |
| ■ | 24 தொ | ந் | தி | ■ | கு | ங் | லு | தெ 25 | பு 26 | ட | வை |
| 27 ல் | து | லி | ய | ம் | ■ | ■ | ம் | ஷ | மி | ல் | சி 28 |
| 29 தி | ர | ம் | ந் | த | ■ | வி | ரு | யு | நா 30 | ■ | ர |
| 31 ம | தி | யூ | க | ம் | ■ | ■ | 32 மு | ன் | கோ | ப | ம் |

குறுக்கெழுத்துப்போட்டி இலக்கம் -12 இற்கான விடைகளை ஏராளமானோர் அனுப்பி வைத்திருந்தனர். எனினும், மிகச்சரியான விடைகளை எவரும் அனுப்பாததால் பரிசுக்குரியவராக எவரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.

## குறிப்பு

குறுக்கெழுத்துப்போட்டியில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையும், ஆர்வமும் அதிகரித்து வருவதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். சரியான விடையை எழுதி அனுப்புவோரில் அதிஷ்டசாலி ஒருவருக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் 10 ஸ்ரேலிங் பவுண்களும் பரிசாக வழங்கப்படும். சரியான விடைகளை எழுதி அனுப்புவோரில் இரண்டாவது அதிஷ்டசாலிக்கு ஒரு வருடத்துக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு ஆறு மாதங்களுக்கான தமிழ்உலகம் இலவச பிரதிகளும் பரிசாக வழங்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட குறுக்கெழுத்துப் போட்டிக்கான அட்டவணையுடன் உங்கள் விவரங்களையும் கீழ் உள்ள முகவரிக்கு 31/12/2004 ஆம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.


அனைத்து நாட்டுத்தொடர்புகளுக்கு:

**Tamilulakam**
**899-901 Finchley Road,**
**London NW11 7PE,UK**
**Tele : 0044 20 8455 9001**
**Fax : 004 20 8731 7870**
**e- mail : tu@globallanka.co.uk**

இலங்கைத்தொடர்புகளுக்கு:

**Tamilulakam**
**Meewella Building,7th Floor,**
**329,Galle Road, Colombo-04**
**Tele : 0094 112 59 1044**
**Fax : 0094 112 59 1047**
**e- mail : tugloballanka@sltnet.lk**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலம் சொல்லாத கணக்கு

மரத்தின் கீழ் இருந்து வானத்தை நோக்கியவாறு பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த பானுவை, “என்னடி முகிற் கூட்டம் அணிவகுத்துச் செல்வதைக் கண்டு மயங்கி விட்டாயா? அல்லது தூது விடுவதற்கு ஏற்ற முகிலைத் தேடுகிறாயா?”எனக்கேலி செய்தவாறு இரு கைகளாலும் அவள் தோளைப் பற்றிக் கொண்டு அருகில் அமர்ந்தாள் கீதா. “ஓமடி நீ சொல்லுவாய் உனக்கென்ன குடுத்து வைச்சநீ ஒருவித கவலையுமின்றி சந்தோசமாகத் திரிகிறாய். என் நிலை அப்படியல்ல. நான் தனிமையில் சுதனின் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நான் சுதன் மீது உயிரையே வைத்திருக்கிறேன். அவனையும் என்னையும் எந்த சக்தியாலும், எவராலும் பிரிக்க முடியாத அளவுக்கு திடமாக நம்பிக் காதல் கொண்டோம். சுதனும் என் பால் கொண்டிருந்த அன்பை நீ மட்டுமல்ல எங்களைப் புரிந்தவர்கள் யாவரும் அறிவார்கள். ஒரு புறம் மண்மீது காதல், மறுபுறம் என் மீது கொண்ட காதல். மண் மீட்புக்காகப் புறப்பட்டதில் இருந்து,போரில் இப்போ முன்னணியில் நிற்கிறான் எனக் கேள்வியுற்றேன். அடிக்கடி தனது நிலவரம் பற்றிக் கடிதம் எழுதுவான்.சில மாதங்களில் முடியுமென எதிர்பார்த்த போராட்டம், இப்போ ஆண்டுக்கணக்கில் தொடர்கிறது. தொடக்கத்தில் கிழமைக்கொரு மடலாவது வருவது வழமை. இப்போ....ம். களத்தில் குண்டடிபட்டு சிகிச்சைக்கு வந்த வீரர்கள் சிலரிடம் சுதனின் முன்னேற்றத்தைப் பற்றியும் தெரிந்து கொண்டேன். அந்த வெற்றியின் நினைப்பில் என்னை மறந்து விட்டான் என்றும் நினைத்தேன். அந்த வேளையில் தான்.....

மருது என்னும் போராளிக்கு சிகிச்சையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை தன் வேதனையை மறந்து, நண்பனுக்காக கண்கலங்கினான். என்ன ஏதென வினாவிய எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவன் நண்பன் போர் முனையிலும் காதலியின் நினைப்பில், ஒவ்வொரு கணைகளையும் அவள் பெயரைச்சொல்லிச் சொல்லி ஏவும் வேளையில் வெற்றியும் காணுவானாம். சிலர் அவன் காதலைப் பற்றி கிண்டலும், கேலியும் செய்யும் போதெல்லாம், “போங்கோடா உங்களுக்கு என் காதலின் ஆழம் புரியாது”என்னை உங்களுக்கு ஒரு போராளியாகத் தான் தெரியும். தமிழனுக்கு ஒரு நாடு உருவாகிய பின்பு நான் உயிருடன் இருந்தால், அதன் பிற்பாடு என்னுடைய மறுபுறம் உங்களுக்குத் தெரியும். அதுவரை நீங்க சொல்வதை எல்லாம் கேட்டுக்கொண்டிருப்பேன் என்று கூறியதை செவிமடுத்த நான், அவனது உள் ஆதங்கத்தை அறிய ஆவல் கொண்டு, “டேய் மனதிலை கவலையை வளர்க்காமல் மனம் திறந்து எனக்குச் சொல்லு நான் யாரிடமும் தேவையில்லாமல் பகிர்ந்து கொள்ளப் போவதில்லை, என்று தனிமையில் இருந்த சந்தர்ப்பம் அறிந்து வினாவிய போது? தன் பாடசாலை அனுபவங்களைக் கூறி, “படிக்கும் காலத்தில் இருந்து நன்கு அறிந்து, அவள் மீது காதல் கொண்டு இருவரும் மனம் திறந்து ஒருவரை ஒருவர் காதலித்தோம். அவள் அன்பிலும், அறிவிலும், ஏன் புரிந்துணர்வோடு செயலாற்றுவதிலும் திறமைசாலி. அவளை மனைவியாக அடைய நான் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இருவருக்கும் ஒரே ஆண்டில் பல்கலைக் கழகத்தில் வைத்தியத் துறையில் அனுமதியும் கிடைத்தது. இருவரும் தனித்தனி தங்குவிடுதிகளில் வசித்தாலும், அவ்வப்போது கலந்து ஆலோசித்துப் படிக்கும் நோக்கத்துடன் சேர்ந்திடுவோம். சில சமயம் சூரியனும் கறுப்புப்போர்வையை விரித்து விட்டுத்தன்னை மறைத்துக் கொள்ளவும், அவளும் நானும் அதற்குள்ளாகவே நுழைந்த நினைப்பில் எங்களை யாரும் காணாதவாறு இரவுத்திரை போடப்பட்டு விட்ட நினைப்பில், இன்பத்தின் எல்லைக்கும் கோடிட்டு முகத்தோடு முகம் வைத்து, அவள் மடிமீது தலை வைத்துப் படுத்த அந்த இன்ப நாட்களை என்னால் மறக்க முடியவில்லை.

அந்த நாட்களில் தான், யாழ் நகரை முற்றுகையிட்ட பகைவர் படை வீடுகளில் புகுந்து அட்டகாசம் புரிந்து, பெண்களை மானபங்கப் படுத்தி, இளம் சமுதாயத்தை அடித்தும் உதைத்தும் துன்புறுத்தும், இந்த அனியாயத்தைத் தாங்க முடியாமல் மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து நாட்டு நிலமை குறித்து கலந்தாலோசித்து, விவாதித்து, போராளிகளின் வலிமையை மேலும் உறுதியாக்க முடிவெடுத்ததில், சிலர் போருக்குச் செல்ல பயந்த சுபாவமுடையவர்களாய் ஒதுங்கிக் கொள்ள, நானும் வேறு சிலரும் புறப்பட ஆயத்தமானோம். எனக்கு மனஉறுதியையும் தந்து, சுதன் நீர் போராடி வெற்றியோடு திரும்பும் வரை மாதங்களென்ன, வருடங்கள் ஆனாலும் உமக்காகக் காத்திருப்பேன். என் நல் ஆசியுடன் போய் வாருங்கள் என்று என்னை அனுப்பி வைத்தாள்.

“அவளின் ஆசிப்படி இப்போ நான் போர்க்களத்தில் குருதிக் கடலில் மூர்ச்சையற்றுக் கிடக்கும் பகைவர் தலைகளை காலால் மிதித்து முத்தமிட்டபடி, முறிந்த எலும்புத் துண்டங்களையும், அறுந்த நரம்புத்துகள்களையும் கண்டு புறமுதுகு காட்டாமல் முன்னேறு நீ என அவளின் குரல் என் காதில் ஒலிக்க முன்னேறிக் கொண்டே மற்றைய வீரர்களையும் நெஞ்சுரம் கொள்ளச் செய்து போர்க்களத்தைத் தவறியும் மறந்து விடாமல் மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச் செண்டு என்னும் மனவலிமையோடும் சூழ்ந்து வரும் பகையைச் சுக்கு நூறாக்குவதில் தான் என் கவனம் இருக்கிறது என்பதையும் சொல்லிக் கொள்வான்.”

யாழ் நகரை விட்டு மக்கள் புலம்பெயர்ந்து வெளியேறிய காலத்தில் இருந்து இதுவரை அவளுடைய தொடர்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. களத்தில் இறங்காமல் நண்பர்களுடன் உரையாடும் பொழுது சந்தோசமாக எல்லோர்க்கும் அறிவுரை கூறுவான். தனிமை கண்டால் காதலியை நினைத்துக் க்ண்ணீர் வடிப்பான். பத்து ஆண்டுகளுக்கு மேலாகப் பழகிய காதலியை, பேனாவின் உதவியுடன் வெள்ளைத்தாளில் வரைந்து அழகு பார்த்து முத்தமும் கொடுப்பான். அவள் எங்கேயிருக்கிறாள், எப்படியிருக்கிறாள், உயிருடன் இருப்பாளா என்பது கூடத் தெரியாமல் இன்னும் அவள் நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறான். வைத்தியத்துறையில் படித்த அவள் எத்தனை இடப்பெயர்வுகளைச் சந்தித்திருப்பாள் அவளின் நிலைபற்றி யாருக்கும் தெரியாது" என்று மருது கூறி முடிக்கு முன்பாக தொண்டையை அடைத்துப் பொங்கி வந்த அழுகையை, வாயை கைகளால் பொத்தி அமுக்கியவாறு, யன்னல் ஓரம்சென்று, வெளியே 'சோ' எனப் பெய்யும் மழை வெள்ளம் கரை புரண்டோடவும், அந்த வெள்ளத்தைக் கண்ட எனது கண்களுக்குச் சிறு ஆறுதல் கிடைத்தது போல என்னையும் அறியாமல் கண்களில் இருந்த கண்ணீர் யன்னல் வழியாக வெள்ளத்துடன் கலந்து நீந்திச் சென்று கொண்டிருப்பதை, சுதனைக் காணாமல் என்னால் இருக்க முடியாது என்பதை தூது விட்ட கண்களின் கண்ணீரைத் தான் என்னால் உணர முடிந்தது. சுதனின் நினைவை விட்டு சற்றே விலகி, என்னை இனம் காட்டிக் கொள்ளாமல், மருதுவை நோக்கி "கவலைப்பட வேண்டாம் நண்பனின் காதலி கட்டாயம் கிடைப்பாள். கால நேரம் சரி வரும் வேளை எல்லாம் நல்லபடியாக நிறைவடையும் என்னாலும் முடிந்தளவு உதவி செய்கிறேன்" என்று கூறிய நான், எனக்குக் கிடைத்திருக்கும் புது வேதனையுடன் இரவு முழுதும் நித்திரையின்றி சுதனின் நினைவோடு போராடினேன். அத்துடன் மருது மீதும் எனக்கு கூடிய அக்கறை ஏற்பட்டது. அதிகாலையில் எனது பணிகளை முடித்துக் கொண்டு வேலைக்குச் சென்று, மருதுவை சுகம் விசாரித்து உள்ளே போகவும் இன்றும் சில போராளிகள் குண்டடிபட்டு சிகிச்சைக்காய் கொண்டு வரப்பட்டிருந்தார்கள். அதில் ஒரு போராளிக்கு முழங்காலுக்குக் கீழ் கழட்ட வேண்டியிருந்து, சத்திர சிகிச்சை முடித்துக் கொண்டு, மயக்கம் தெளியும் வரை தாதியின் பராமரிப்பில் விட்டு, உயிருக்கு ஆபத்தில்லை என்பதை உறிதிப்படுத்திக் கொண்டு, கடமையில் ஈடுபட்டிருந்த போது, போராளியின் முகத்தை எங்கேயோ பார்த்த ஞாபகமாக இருந்தது. எதற்கும் மயக்கம் தெளிந்த பிற்பாடு தெரிந்து கொள்ளலாம். இப்ப என்ன அவசரம். எனக்கு நானே கேள்வியையும் கேட்டு பதிலையும் சொல்லிக் கொண்டு மருதுவிடம் போன போது, 'நித்திரையின்றி போராளிகளில் இவ்வளவு அக்கறையாக இருக்கும் உங்கள் குடும்பத்தைப் பற்றி நான் அறிந்து கொள்ளலாமா டாக்டர்"



என்று மருது கேட்டதும், ஓகோ நெற்றியில் குங்குமப் பொட்டைப் பார்த்து குடும்பமாக நினைத்ததில் தவறில்லை என்பதைப் புரிந்து என்னை சுதாகரித்துக் கொண்டு "நானும் கணவரும் மட்டும் தான். இதுவரை குழந்தைகள் இல்லை, நாட்டுக்காகத் தொழில் செய்வதில் பெருமைப்படுகிறேன்" என்று சொல்லியபின், சுதன் போருக்குப்போக முதல் நல்லூர் முருகன் சன்னதியில் எனது நெற்றியில் குங்குமத் திலகம் வைத்து தனது மனைவி என்பதை உறுதி செய்து விட்டுப் போனபடியால், இன்று நான் ஒருவனின் மனைவியாக, குடும்பப் பெண்ணாக இனம் காட்டக் கூடியதாக இருப்பதை மனதில் எண்ணியபடி.......

தொடர்ந்து மற்ற அறைக்குச் செல்லும் வழியில் புனை பெயரில் வந்தவர் மயக்கம் தெளிந்திருந்தால், சொந்தப் பெயரை அறிய எண்ணி உள்ளே நுழைந்த நான், பானு...பானு...என்று முனகும் குரல் கேட்டு ஆச்சரியத்துடன் அருகே சென்று முகத்தை உற்று நோக்கிய பின் தான் புரிந்து கொண்டேன், காலில் சத்திர, சிகிச்சை செய்யப்பட்டது என் சுதனுக்கென்று. என் சுதன்! என் சுதனே தான். கடவுளே இந்த நிலையிலா என் சுதனை நான் பார்க்க வேண்டும். மேலும் மனத்தை அலட்டிக் கொள்ளாமல் ஆக வேண்டியதைக் கவனித்தேன். கண் விழித்த சுதன் என்னை அடையாளம் கண்டதும் என் பானு!...என்று சத்தமிட்டபடி என்னை அணைக்க கட்டிலை விட்டு கீழே இறங்கும் பொழுது தன்னுடைய ஒரு கால் செயல் இழந்து விட்டதை உணர்ந்தான். அன்றிலிருந்து அவன் அருகேயிருந்து ஆக வேண்டியவைகளை கவனித்து, நிறைவாகக் குணப்படுத்தி, சுதனும் நானும் மருதுவிடம் சென்று உன் ஆதங்கம் நிறைவேறி இருக்குமென நம்புகிறோம். இப்போ சந்தோசம் தானே? என்னும் கேள்விக்கு நாட்டின் அமைதி நிலையும் சுதனின் நீண்ட நாள் ஆசையும் நிறைவேறியதில் நிம்மதி.

"இருந்தும் நாங்கள் எல்லோரும் போராளிகளாக இருக்கவேண்டும். அடிக்கடி உங்களிடம் வந்து போவோம். தமிழனுக்கு ஒருநாடு உண்டு என்ற பிற்பாடு இணைந்து கொள்வோம்" என்னும் உறுதி மொழியுடன் புறப்பட்டார்கள். பத்து வருடங்களின் பின் ஒரு வாரமாக சுதனுடன் உரையாடியது உள்ளத்தில் பூரிப்பாக இருக்கிறது.அவரின் இலட்சியம் நிறைவடையும் நாள் வெகு விரைவில் கைகூடும் என்னும் நம்பிக்கையுடன் வாழுகிறேன்.

'பாத்தியாடி உன் சுதன் உனக்காக வாழுகிறான். நீ இன்னும் மேகத்தைத் தூது விட நினைக்கிறாய். என்று கேலி செய்தவாறு இருவரும் அவரவர் வீடுகளுக்குப் புறப்பட்டோம்.

அவர்களின் இந்தக் கதை தொடர்கதையாகுமா இன்றேல், அடுத்து வரும் அத்தியாயத்தில் முடிவுறுமா? காலம் தான் பதில் சொல்லும்.


***தாமரா சுப்பிரமணியம்,***
***ஜேர்மனி.***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசத்தும் அறிமுகங்கள்

நாளுக்கு நாள் புதுப்புது அறிமுகங்கள் வந்து அசத்திக் கொண்டிருக்கின்றன. சமீபத்திய அறிமுகங்களில் அசத்தியவை இங்கே உங்கள் பார்வைக்கு.....

